# நந்தீசர்

## கருக்கிடை 300 · ஞானம் 100



தாமரை நூலகம், சென்னை-26.

# நந்தீசர்
# கருக்கிடை 300 ஞானம் 100

பதிப்பாசிரியர்
எஸ்.பி. ராமச்சந்திரன்

அனீபா புக் சென்டர்
(வசந்தபவன் அருகில்)
2, லாரன்ஸ் ரோடு, கடலூர்-2.
94430-71408

தொலைபேசி எண்: 4800249
Ph: 23620249
தாமரை நூலகம்
7, N.G.O. காலனி, வடபழனி,
சென்னை - 600 026

தாமரை வெளியீடு - 80
முதல் பதிப்பு : அக்டோபர் 1992
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 2001
உரிமை பெற்றது

NANDHEESAR
Karukkidai - 300 Gnanam - 100

**விலை ரூ.30.00**

அச்சிட்டோர்:
**கிரியேடிவ் ஆப்செட்**
சென்னை - 600 034.



# பதிப்புரை

சிவ கணங்களிலே முதன்மையானவர் நந்தி. சித்தர்களின் மரபுப்படி முதலாவது சித்தரும் நந்தியே!

நந்தி அகத்தியர் மூலர் புண்ணாக்கீசர்
    நன்றவத்துப் புலத்தியரும் பூனைக் கண்ணர்
நந்திடைக் காடரும், போகர், புலிக்கையீசர்
    கருவூரார், கொங்கணவர், காலஞ்சி
சிந்தி எழு கண்ணர், அகப்பேயர் பாம்பாட்டி
    தேரையரும் குதம்பையரும் சட்டைநாதர்
செந்தமிழ் சேர் சித்தர் பதினெண்மர் பாதம்
    சிந்தை யுன்னிச் சிரத் தணியாய்ச் சேர்த்தி வாழ்வாம்

நந்தீஸ்வரர் என்று ஈஸ்வர பட்டம் பெற்று இறைவனுக்கு இணையாக வைத்து எண்ணப் பெறும் நந்தீசரின் வரலாற்றினைப் பற்றி அறிந்து கொள்ள ஆவல் உண்டாவது இயற்கை.

பழங் காலத்தில் சிலாதர் என்று ஒரு ரிஷி இருந்தார். புத்திரப் பேறு வேண்டி இறைவனைக் குறித்து நீண்ட காலம் தவஞ் செய்தார். இறைவனருளால் அவருக்கு ஒரு ஆண் மகவு தோன்றியது.

அழகும் அறிவும் அபாரமான ஆற்றலும் பெற்று விளங்கிய அக்குழந்தை வளர்ந்து வரும் காலத்தில் மித்திரர் வருணர் என்ற தேவரிஷிகள் சிலாதரின் ஆசிரமத்திற்கு வந்தனர். சிலாதர், அவர்களை வணங்கி வரவேற்று இருக்கை தந்து உபசரித்தார். தம் குழந்தையையும் அழைத்து ரிஷிகளை வணங்கச் சொன்னார்.

குழந்தையை ஆசீர்வதிப்பதற்காக கைகளை உயர்த்திய ரிஷிகள் அப்படியே நிறுத்திவிட்டார்கள். சிலாதர் திடுக்கிட்டுப் போனார். "மகான்களே! என் குழந்தையை ஆசீர்வதியுங்கள், ஏன் அப்படியே நிறுத்தி விட்டீர்கள். நீங்கள் என் பிள்ளையை ஆசீர்வதிக்காவிட்டால் அந்த துக்கத்தை நான் தாங்கமாட்டேன். அல்லது அதன் காரணத்தையாவது தெரியப்படுத்துங்கள்" என்று பலவாறு வேண்டினார்.

ரிஷிகள் சிலாதரைப் பார்த்து "உங்களுடைய அருமைக் குழந்தைக்கு அறிவு, அழகு எல்லாவற்றையும் கொடுத்த இறைவன்

ஆயுளை மட்டும் கொடுக்க மறந்து விட்டர். நாங்கள் என்ன செய்வோம்?'' என்றார்கள்.

சிலாதர் துடித்துப் போனார். அவருடைய மனைவியோ மூர்ச்சித்து விழுந்து விட்டாள். தாய் தந்தையரின் துன்பத்தினைக் கண்ட அக் குழந்தை அவர்களைப் பார்த்து, ''ஏன் வருந்துகிறீர்கள்? இறைவனால் ஆகாத காரியம் ஒன்று உண்டா? நீங்கள் குழந்தை வரம் வேண்டும் என்று கேட்டீர்கள் கொடுத்தார். எனக்கு வேண்டிய ஆயுளை நானே தவம் செய்து அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறி தவம் செய்யக் கிளம்பி விட்டான்.

பாலனின் கடுமையான தவம் பரமனைப் புளகாங்கித மடையச் செய்துவிட்டது சிவபெருமான் அவன் முன் தோன்றி, அளவற்ற ஆயுளும் சிவகணங்களுக்குத் தலைமைப் பதவியும், தமக்கு வாகனமாக அமையும் பேறும் கொடுத்து இரட்சித்தார்.

சிஷிகுமாரன் சிவபெருமானைக் குறித்து தவம் செய்த சிறப்பினை உடையது ஸ்ரீ சைலம். நந்தி தவம் செய்த இடம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

சிவகணங்களுக்குத் தலைவரான நந்தீசரே சித்தர்களில் முதலாமவர். சிவனிடமும், உமை அன்னையாரிடமும் உபதேசம் பெற்றவர். நந்தி தம்மைப்பற்றிக் கூறுகையில்

''ஆமப்பா வடதேசங் கயிலை தேசம்
அப்பனே என்தேசம் உத்தர தேசம்
வாமப்பா எனைச் சேர்ந்த சித்தர் சொல்வேன்
வளமான தசரதரும் வியாசர் தானும்
காமப்பா என் தம்பி வியாசர் தான்டா
கண்மணியே தசரதன்றான் அம்மானாகும்
நாமப்பா தன்வந்திரி பகவான்தான்
நலமாக எந்தனுக்குப் பிள்ளையாமே''
ஆமென்ற அசுவனி தேவதைகள் தானும்
அப்பனே எந்தனுக்குப் பேரனாச்சு
வாமென்ற தந்தை சதாசிவன்றான் மைந்தா
வளமாக எந்தனுக்குத் தகப்பனாச்சு



நாமென்ற தாயார் தான் தேவியாகும்
நலமாக இத்தனைபேர் எனைச் சார்ந்தோர்கள்
காமென்ற தேவியுட கிருபையாலே
கைலாச சித்தனென்றும் பேருண்டாச்சே''

தன்வந்திரி பகவான் மகாவிஷ்ணுவின் அவதாரம். அவரே உலக நன்மைக்காக ஆயுள் வேத வைத்திய சாஸ்திரத்தினை அருளியவர். திருப்பாற் கடலில் அமிர்த கலசத்தோடு தோன்றியவர். அவரையே தமது சீடனாகக் குறிப்பிடுகின்றார் நந்திதேவர். தேவ மருத்துவர் களாகிய அசுவினி தேவர்கள் தமக்குப் பேரப் பிள்ளைகள் என்று கூறுகிறார்.

நந்தியின் சிறப்பினைக் கூற வேறு வார்த்தைகள் தேவை இல்லை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நூல்கள் தமிழகத்தில் இருந்தும் கவனிப்பாரற்று மக்கி மடிந்து போய்க் கொண்டிருந்தது, தமிழகத்தினைப் பிடித்த துரதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும். பொதுவாக சித்தர்கள் எல்லோருமே தங்களுடைய நூல்கள் தகாதவர்களிடத்துக் கிடைத்துவிட்டால் அவர்கள் தீய நெறிகளில் பயன்படுத்தி சமுதாயத்திற்குத் தீமை செய்து விடுவார்கள் என்று அஞ்சியுள்ளனர். பரிபாஷை சொற்களால் மறைத்துப் பாடியவர்கள் பலர். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விஷயத்தினை வெளிப்படையாகச் சொல்லி மற்றவர்கள் மறைத்ததனை நான் இங்கே திறந்து விட்டேன் என்று கூறிக்கொள்வதும் உண்டு. அப்படிச் சொன்ன போதிலும் நமது சீடனை நோக்கி இந்த நூலை நீ தகாதவர்களுக்குக் கொடுத்து விட்டால் உன்னுடைய தலை வெடித்துவிடும் என்று பயங்கரமான சாபங்களைக் கூறி உள்ளனர்.

இது சிந்திக்கப் படவேண்டிய விஷயம். மற்றவர்களுக்குச் சொல்லக்கூடியது என்று சித்தர்கள் சாபமிட்டுத் தடுத்த விஷயத்தினை அச்சிட்டு நூலாக வெளியிடுவது சரியா? என்ற கேள்வி இயற்கையாகவே எழுகின்றது.

நூலாக வெளி வந்து விட்டால் அதனை யார் வேண்டு மானாலும் வாங்கலாம், படிக்கலாம். நூலை வெளியிடுபவரோ, விற்பவரோ, நல்லவரா கெட்டவரா என்ற தராதரம் பார்த்து நூலைக் கொடுக்க முடியாது.

இது ஒரு சிக்கலான பிரச்னைதான் என்றாலும் இயற்கையாகவே கடினமாக நடையில் புரிந்து கொள்ள முடியாதபடி அமைந்து விட்ட இந்தப் பாடல்களின் பொருள் யாருக்குப் புரியும்?

"தவமும், தவமுடையார்க்காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள்ளுவது".

என்று திருவள்ளுவர் கூறியுள்ளபடி யாருக்கு விட்டகுறை தொட்ட குறை இருக்கின்றதோ, யாருக்கு இதன் பொருள் விளங்க வேண்டுமென்று லபிதம் இருக்கின்றதோ, அதைப் பயன்படுத்தும் நற்பேறு பூரண பூர்வ புண்ணிய வசத்தால் யாருக்கு கிடைத்து இருக்கின்றதோ, அவர்களுக்கே இந்த நூல்கள் பயன்படும் என்ற திடமான நம்பிக்கையோடு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு இந்த நூல்கள் முற்றிலும் அழிந்துபோகாமல் பாதுகாக்கும் கடமையை அளித்தமைக்காக இறைவனுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதனை விட வேறு எதுவும் அறியேன் என்ற பணிவுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**எஸ்.பி. ராமச்சந்திரன்**
பதிப்பாசிரியர்

# பொருளடக்கம்

**நந்தீஸ்வரர் கருக்கிடை**


**நூல் 1** பக்கம்
காப்பு 9
நூல் 10
சிவனுக்கும்,
நந்தீசுரருக்குத் தர்க்கம் 10
சித்தர்கட்கும்
நந்தீசருக்கும் தர்க்கம் 11
சிங்குவை சாதகம் 12
இரவிமி அங்கிதாரணை 12
அமிர்ததாரணை 12
காயசித்தி முதலிய
சித்திகள்-உரும் சித்திக்கும்
என்கின்றது 13
சகலமும் மனோமாயம்
என்கின்றது எல்லாந் தன்
மயமாதல் 14
முடிந்த மனோலயத்தில்
சதாமுயற்சி
கற்பம் உண்ணலின் பலன்
கற்பம் உண்ணுமிடத்து
வாசிப்பழக்கம் விடப்படா
தென்கின்றது
கற்பம் உண்ணுமிடத்து
பத்தியம் 15
சற்சங்கம் வேண்டும்
என்கின்றது
அபசாதகருக்கு கருமானம்
வெளிவிடில் சாபம் வரும்
என்கின்றது
பக்குவமுள்ள சீஷனைக்
கண்டு உபதேசிக்கும்
மார்க்கம் 16
உபதேச நிலை
பக்குவா பக்குவர்களால்
வரும்பயன் வற்புறுத்தல்
ஞானநெறி 17
மனோலயத்தின் பறு 18
சந்திரகலாசாமிர்தத்தின்
நாமமும் மேற்படி அமிர்த
தாரணையின் பயனும்
திருவளம் பற்றுகினறார்
வாசிநிலை 19
காயாதி கற்பம் 20
இரவிமெழுகு 21
மதிமெழுகு 23
மாரணக்கரு 24
அகார உகார தீட்சை 25
மகாரதீட்சை 26
அஷடகர்மம்
மாரண வித்தை
அஞ்சனம் 28
ஆகிருஷ்ணம் 30
மோகனம் 31
பேதனம் 32
தம்பனம் 33
உச்சாடனம் 34
வித்துவேஷணம் 35
மாரணம் 36
கற்பமுறை 37
முப்பூவின் மார்க்கம் 39
வழலை எனினுமொக்கும்
கௌரிச்சுன்னம் 12
சிவஞானம் 43
திருநடனம் 45
சிவராஜயோகம்

அகார உகார மகார 47
கற்பம் 49
பொன்முகட்டை 50
மதியண்டக்கரு 51
முப்பு சேர்மாம் 53
இரவி மெழுகு 54
மதிமெழுகு 57
சித்து மகிமை
சிஷணை சேர்க்கும் 59
இயல்பு 61
நாலுக்குச் சாபம் 61
கருவிகற்பம் 66
கெந்தக பற்பம் 68
கருக்கிடை 70
மாற்றாமை 71
அஞ்சனம்

**நூல் II**

நந்தீசர் திராவகம்
சங்கு திராவகம்
வெடியுப்புத் திராவகம்
கல்லுப்புத் திராவகம் 74
சீனியுப்புத் திராவகம்
கறியுப்புத் திராவகம்
இந்துப்புத் திராவகம் 75
வளையலுப்பு திராவகம்

**நூல் III** 76

காப்பு
நூல் 78
கருவங்கபற்பம் 79
வெள்வங்க பற்பம் 84
ஆரோக்கியத் தைலம்
சாரணைமூலி 85
யோகம்
தாம்பிர பற்பம் 86
தங்கபற்பம் 87
கடலாடி கற்பம்
குழந்தைகளுக்கு
மாதளை நெய்
பொன்னாவாரை 88
சூரணம் 89
மவுனம்
நத்தைச்சூரி மூலிகை
கொடுப்பை நெய்
அமுர்த சஞ்சீவித் தைலம் 92
வங்க வெள்ளி 94
செம்பு சுத்தி
சிதம்பரத்தின் பூசை 96
அயச் செம்பு 97
நாவற்பட்டை சூரணம் 98
கோழி 100
102

முற்றும்



சிவமயம்

ஸ்ரீ கயிலாய வர்க்கத்தைச் சேர்ந்த

**ஆதி முதல் சித்தர் நந்தீசர்**

திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கிடை - 300

## காப்பு

மூலமென்ற கணபதியின் பாதம்போற்றி
முத்திபெற்ற சுழிமுனையின் முனைமேல்நின்று
கோலமென்ற குண்டலிக்குள் குகைதானுண்டு
குகைதனிலே குருபானு மம்மைவாழ்வார்
சீலமென்ற தவமகிமை பெற்றசித்தர்
தேடியதோர் வீடதனைத் தெளிந்துபார்த்து
ஆலமென்ற கொடிமரத்தின் கீழேநந்தி 1
யமர்ந்துநின்ற பீடமென்ற வாதிகாப்பே.

ஆதியென்ற நால்வேத மாறுசாஸ்திர
மடங்கிநின்ற வீரனுடைய பாதம்போற்றி
நீதியென்ற நெறிதவறாப் பொதிகைவாழும்
நிரஞ்சனமாய் நிறைந்தகும்ப முனித்தாள்போற்றி
சோதியென்ற வடிவான ரிஷிகள் சித்தர்
துணை யெனவே என்மனதில் துதித்துக்கொண்டு
ஆதியென்ற ரவிமதியுஞ் சுழினைமூன்று 2
மாகிநின்ற சிவனுமையா ளாதிகாப்பே.

ஆதியென்ற பூரணமே சோதிகாப்பு
வண்டபசி ரண்டமெலா மாள்வோன் காப்பு
நீதியென்ற மவுனாதி முனிவர்பாதம்
நீங்காம லனுதினமும் நெஞ்சுள்வைத்து
சோதியென்ற சுடரொளியைக் கண்டுதேறிச்
சுத்தபரி பூரணமாய் மவுனம்பூண்டு
வாதியென்ற பெரியோர்கள் மனது தேற
வசனித்தேன் முன்னூறு வகையாம் காப்பே.

காப்பான ஐங்கரனைப் பணிந்துகொண்டு
கந்தன்வடி வேல்முருகன் கடாட்சத்தாலே
ஏற்பான ரிஷிமுனிவர் சித்தர்பாட
வெல்லோரும் பாடியதோர் தமிழுக்கெல்லாந்
தாப்பான திறவுகோ லிம்முன்னூறுஞ்
சாற்றினேன் புவிதனிலே மனிதர்க்காகக்
கோப்பான கருக்குருவாம் வழியில்காணக்
கோவைகொண்ட மணிபோல வகையாய்த்தானே 4

## நூல்

வகையான சாஸ்திரங்க ளனந்தமுண்டு
வகையறியார் கருவறியார் மடையர்மெத்த
தொகையான சாஸ்திரத்தைப் பாடம்பண்ணிச்
சொல்லுவார் பொருளறிய மாட்டாரையோ
வகையான மாய்கைதனில் வீழ்ந்தழிந்து
மதிமயங்கி நிலைதவறி மதமேபூண்டு
தகையான கதைபோல முடிவதல்லால்
சாஸ்திரத்தின் மறைப்பறியார் கூறினேனே 5

கூறினேன் சாஸ்திரத்தில் மறைத்ததெல்லாங்
கூறினதால் வெகுகோடி தபசிருந்து
மீறினா ரவருடைய பதமிரண்டு
மிகவணக்கஞ் செய்துகொண்டு நூலைவாங்கித்
தேறினார் தவமுனிவர் மகிமைபெற்றுச்
சித்திலிருந் தார்பெரியோர் சிவமேயென்று
ஆறினாரென்னுடைய நூலைப்பார்த்து
ஆதிசிவன் நந்திவாவென் றழைத்திட்டாரே. 6

## சிவனுக்கும் நந்தீசருக்குந் தர்க்கம்

அழைத்துமே யருகிருத்தி வமிர்தமூட்டி
யன்புடனே கருக்குருவை வெளியாய்ச் சொல்லத்
தழைத்துமே வாய்க்கொழுப்போ வென்றுகேட்டார்
சமரசமாய் வாய்கரத்தால் பொத்திக்கொண்டு
இளைத்துமே கருக்குருவும் வெளிதோன்றாம
லெல்லோருஞ் சொல்லிவைத்த நூல்கடோறு
மலைத்துமே போவதல்லால் வழிகாணாது
மகத்தான முனிவர்கட்கேன் மறைப்பென்றேனே 7



மறைத்தனா லிவர்களுக்குப் பாவமுண்டு
வழிகாணா தலைந்தழிந்தோ ரனந்தங்கோடி
இறைத்தனா லேதுபலன் கண்டாரன்றோ
ஏறவிட் டேணிதனைத் தாழ்த்துவார்போல்
உரைத்தபொருள் தெரியாம லலைந்தாரையோ
உண்டென்று நம்பிநம்பி உலகிற்றானே
படைத்தமனுக் கெட்டலைந்த பாவமெல்லாம்
பழிவருமென் றெண்ணியல்லோ உரைசெய்தேனே. 8

## சித்தர்கட்கும் நந்தீசரருக்கும் தர்க்கம்

உரைசெய்வேன் றவமுனிவ ரொளிப்பையெல்லா
முத்தமனே அவர்பூட்டைத் திறப்பாருண்டோ
மறைசெய்தப் பொருளையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
மகத்தான சித்தர்களுங் கோபங்கொண்டு
நிறைசெய்த எந்தனுடன் வாதுபேசி
நிராகரிப்பாய் வாதாடிச் சண்டை செய்தார்
பரைசெய்த சிவனுமென்மேல் கோபங்கொண்டார்
பாயயென்று ரிஷபமாய்ப் பதுங்கினேனே. 9

பதுங்கினே னாதிசிவ னென்னைப் பார்த்து
பதஞ்சலியாய் நிரஞ்சனமாய்ப் பாதந்தூக்க
ஒதுங்கினே னவர்தயவு என்மேல்வந்து
ஓகோகோ நந்திவா வென்றுசொன்னார்
இதங்கினா ரவர்முன்பு மண்டிபோட்டு
இருந்தனப்பா எனக்கொருவ ரெதிரே இல்லை
சதங்கியே வளையிலுள்ள சாரைப்பாம்பைச்
சாதகமாய் நாட்பழக்கந் தான்செய்வாயே. 10

## சிங்குவை சாதகம்

செய்துகொண்டு வருகையிலே கரிசாலை நெய்யும்
சேரவொன்றாய்க் கலந்துகொண்டு கபத்தைப் போக்கு
நைதுகொண்டு கபக்கட்டு போகும்போது
நன்றாக வளையினுள்ளே சாரைப்பாம்பை
நெய்துகொண்டு தற்சனி மத்யமையினாலே
நினைவாக வோடுகிற மதியை வாங்கிக்
கொய்துகொண்ட அம்மதியை ரவியிற் சேர்த்தால்
குருகுமடா பாம்புனின் றாடாதுபாரே 11

## இரவி மதி அங்கி தாரணை

பாரேநீ ரவிதனிலே நிற்கவேண்டும்
பரம்பொருளைச் சுழினை வெளி காணவேண்டும்
சேரேநீ மதியமிர்தங் கொள்ளவேண்டும்
சிவசிவா வாசிநிலை யறியவேண்டும்
கூரேநீ வளையினுள்ளே சாரைப்பாம்பைக்
கொண்டுசெல்ல வமிர்தமங்கே இறங்கும்பாரு
காரேநீ யகக்கசடு வகன்று போகுங் 12
கண்மணியே என்மகனே கண்டுகொள்ளே.

## அமிர்த தாரணை

கொள்ளுவது வாசியங்கே செல்லும்போது
குணமான வமிர்தவழி கண்டவாகி
விள்ளுவது ஒருபோது மில்லையில்லை
மிஞ்சாது அரவமது படுக்கும்விடு
தள்ளுவது பாசவினை இருக்குமாகிற்
றன்மனது ஒருமைகொண்டு நில்லாதப்பா
தெள்ளுவது சுழிமுனையிற் றீபங்கண்டால் 13
திடமாகக் கற்பமறிந் துண்ணுவாயே.

உண்ணுவது மதிதேய்ந்து ரவியிற்சேர்ந்தா
லுன்றேக மழிவதில்லை பிரகாசிக்கும்
சண்ணுவது சந்திரனென்ற மூச்சைவாங்கித்
தான்கொள்வா யிரண்டொன்று தப்பாமற்றான்
எண்ணுவது மதிதேய்ந்து ரவியிற்சேரு
மென்மகனே சூரியனில் நில்லுநில்லு
பண்ணுவது சூரியனில் நிற்கும்போது
பார்க்கலாஞ் சுழிமுனையிற் றீபந்தானே. 14

## காயசித்தி முதலிய சித்திகள் - உரு-ம் சித்திக்கும் என்கின்றது

தீபமது கண்டவுடன் தேகஞ்சித்தி
திறமான வாசிசித்தி யோகஞ்சித்தி
போகமது வமிர்தமுண்ணக் கட்டும்பாரு
பொல்லாத மாய்கையது விலகிப்போகுந்
தாகமது இல்லையப்பா பசியுமில்லை
கற்பனையாய்க் கொல்லுகின்ற பாசமில்லை
மோகமது வொருபோது மில்லையில்லை
மோனமென்ற சத்தியங்கே காணலாமே. 15



காணலாம் ரிஷிமுனிவர் வார்த்தை சொல்வார்
கருக்குருவும் நன்றாகக் காண்பிப்பார்கள்
ஊணலாம் புவிதனிலே யுகாந்தகாலம்
உன்றேக மெப்போது மழிவதில்லை.
தோணலாம் பிறவியென்ற பாசம்போச்சுத்
துடங்கினதோர் தொழில்களெல்லாஞ் சித்தியாகும்
ஆணலாம் புவிதனிலே வாசைதள்ளி 16
யகண்டபரி பூரணத்தி லறிவாய்நில்லே.

## சகலமும் மனோமாயம் என்கின்றது

அறிவல்லோ மனமென்ற பேய்க்கூத் தெல்லா
மடித்தகற்றி வறிவொன்றாய் திருத்திக்கொண்டு
தெரிவல்லோ பிரபஞ்ச மாயைதள்ளித்
தேறவென்றால் வெகுநாள்தான் செல்லுமோசொல்
முறிவல்லோ பெண்டுபிள்ளை மாயையெல்லா
முன்தேடும் பொருள்களிட வாசைதள்ளி
நெறிவல்லோ புருவமையத் தொளியில்நின்று 17
நேசம்வைத்து மதிவாங்கி ரவியிற்சேரே.

## எல்லாந் தன்மயமாதல்

சேரப்பா ரவியில்நின்று ஒளியைப்பாரு
தீர்க்கமடா சுழிமுனையின் றீபம்போல்
ஆரப்பா உனக்கீடு சொல்லப்போறே
னானந்த மாச்சரியம் நடனங்காணுந்
தேரப்பா மனந்தேறித் தெளிவதானால்
ஜெகமுழுதும் ஜெகஜ்ஜால மென்றுதள்ளு
பாரப்பா மதிதேய்ந்த ரவியிற் சேர்ந்தால் 18
பரமகுரு நீயாவாய் பாரு பாரே.

## முடிந்த மனோலயத்தில் சதாமுயற்சி

வேறு

பாரும் சுழிமுனை பகர்ந்த பருவத்தில்
தேரும் மனது தேராமல் ஓடிடும்
கூறும் குரங்கைக் குலைய விடாமல்
சீறும் அரவம் சேர்ப்பது திண்ணமே.

### கற்பம் உண்ணலின் பலன்

திண்ணம் பிறக்கச் செப்பிய கற்பம்
உண்ணப் பிறவி ஒழிந்திடும் பாரு
வண்ணமாம் மதியை வங்என்று வாங்கிடு
அண்ணலே ரவியில் அங்என்று நின்றிடே. 20

### கற்பம் உண்ணுமிடத்து வாசிப்பழக்கம் விடப்படாதென்கின்றது

நின்றிடக் கண்டுநிறுத்திய ரவியும்
பொன்றிட மதியைப் போகவிடாமல்
கன்றிடச் சென்று கருதியே ஊது
விண்டிடும் போது விடுக சிங் என்றே. 21

சிங்என விட்ட திடமதைக் கேளாய்
தங்கென நின்று தவறு படாமல்
பொங்கென நின்று பொருந்தி நிறுத்திடு
இங்கென நின்று இருந்திடும் பாரே. 22

இருந்திடும் போது இருகண்ணு மூடிப்
பொருந்திடு மாய்கைப் பூட்டை அடாதே
தெரிந்திடு மாசையைச் சிக்கெனத் தள்ளி
உறைந்திடு மன்ன மொருபொழு துண்டிடே. 23

### கற்பம் உண்ணுமிடத்து பத்தியம்

உண்டிடு மன்னம் ஒருபோது கொள்ளு
சண்ணிடும் பாசிப் பயறது கூட்டிடு
எண்ணிடு மாவின் நெய்யும் பால் கொள்ளு
உன்னிடமாக உறைகுவன் சத்தியே. 24

சத்தி கிருபை தயவாய் இருந்திடும்
முத்தியும் உண்டு மோட்சமுமாகும்
நித்தியம் நடனம் நிரந்தரஞ் செய்யும்
புத்தியுள் ளோரைப் புனிதமாய்ச் சேர்த்திடே 25

### சற்சங்கம் வேண்டும் என்கின்றது.

சேர்ந்திட வேண்டாந் திருடர் வஞ்சகரைப்
பார்த்திட வேண்டாம் பரம லோபியரை
எற்றிக் கழித்திடும் இடும்பர் கசடரை
சாற்றிப் பழிப்பவர் தமைத்தள்ளி நில்லே. 26



### அபசாதகர்க்குக் கருமானம் வெளிவிடில் சாபம்வரும் என்கின்றது

வேறு

தள்ளினதா லுனக்குவெகு புண்ணியமுண்டு
சண்டாளா பொருளவர்க்கு விள்ளொணாது
துள்ளிமன மறியாமற் பேசினக்காற்
நுஞ்சியே யவன்சிரசு வெடித்துப் போகும்
கொள்ளியவன் குலமற்று குடியுமற்று
குரைக்கின்ற நாயதுவாம் மிருகமாகி
வெள்ளியென்ற இடியிடித்துத் தலைமேல் விழு
மேதினியி லறியார்பால் பேசொணாதே 27

### பக்குவமுள்ள சீஷனைக் கண்டு உபதேசிக்கு மார்க்கம்

பேசினதால் வருவதென்ன பொருளையெல்லாம்
பிதற்றினதால் பலித்திடுமோ பேயேசொல்லு
மாசிமறு வில்லாத நிலைமையுள்ள
மனதைநெடு நாட்பழக்கத் தாலேகண்டு
தேசியென்ற குதிரைவழி நடத்துமார்க்கஞ்
செப்புவாய் ஞானமென்ற போதந்தன்னை
வீசிவிளை யாடுகின்ற காலம்பார்த்து
விளங்கவே ரவிமதியின் விபரஞ்சொல்லே 28

### உபதேச நிலை

விபரமென்ன மதிதேயும் வழியுஞ் சொல்லி
மெய்யான ரவியினிடப் பலனுஞ் சொல்லி
தபரமென்ற சுயஞ்சோதி நிலையுஞ் சொல்லித்
தமர்வாசல் பூட்டுவிடுந் திறவுஞ் சொல்லி
உபரமென்ற கற்பமுண்ணுங் கருவுஞ் சொல்லி
உத்தமனே மவுனநிலை யூன்றச் சொல்லி
கெபரமென்ற கமனரசக் குளிகை சொல்லி
கெம்பீர அண்டத்தின் குறிசொல் வாயே. 29

### பக்குவா பக்குவர்களால் வரும்பயனை வற்புறுத்தல்

குறிசொல்வா யுன்மனது போல நின்றால்
கொட்டிவிடு அவன்மனது நொந்ததானால்
நெறிதவறி யுந்தபசுக் கிடறுண்டாகும்
நேர்மையுள்ள பிள்ளைகளை யழைத்துச்சேரு

வரிதவறி நிலைகுலைந்து மயங்கும்பேரை
வஞ்சகரைச் சேராதே வகைசொல்லாதே
பரிதவறிப் பொருள் பறிக்கும் பாவிமாரைப் 30
பகைத்தாலும் உனக்கிடராம் பாருபாரே.

பாரான சாகரத்தில் வஞ்ஞமிச்சம்
பழிகொலைகட் கஞ்சாத பாவிமாரைச்
சேராதே வொருபோதும் சேர்ந்தால் மோசம்
சேர்ந்ததனா லுனக்குவரு மானமென்ன
நேரான பொருள்களெல்லா மறிந்துகொண்டு
நெகிழவிட்டுப் பிறர்சிரிக்க நிஷிதம்பண்ணிக்
கூரான ஜடலமதற் கிடைஞ்சல்செய்துக் 31
கோள்சொல்லிக் கைப்பொருளைக் கொள்வார்பாரே

பாரேநீ யுலகினிற்சத் தியமேயில்லை
பதிவான நிஜமில்லை பொய்யைச் சொல்லி
வேறேநீ வஞ்சகங்க ளறியாமற்றான்
மெய்ஞான பூரணத்தின் லகிரியாலே
கூறேநீ சாஸ்திரத்தின் பொருளையெல்லாம்
கொட்டினதால் சித்தரிடச் சாபமெய்தும்
காரேநீ யுன்ஜடலம் போல்தான் மக்காள்
கருதாதே பிரபஞ்ச மாயைதள்ளே 32

தள்ளினால் யோகமுடன் ஞானம்சித்தி
தயங்காமல் தமர்வாசல் திறக்கும்சித்தி
அள்ளினா லமிர்தமுடன் கற்பஞ்சித்தி
யருள்பெருகும் ஜோதியென்ற தீபஞ்சித்தி
தெள்ளினால் தொட்டதெல்லாஞ் சித்தியென்று
சித்தர்களு முனிவர்களு மனதுகூர்வார்
விள்ளினால் சகலமுமே சித்தியாகு
மெச்சுவார் தவமதனில் மிக்கோர் தானே. 33

## ஞானநெறி

தானான ஞானத்தின் வழியைச் சொல்வேன்
தண்மையுடன் பெருமைதனைத் தள்ளவேண்டும்
தேனான எவ்வுயிர்க்கு மிரங்கவேண்டுந்
தீவினைகள் வஞ்சகங்கள் செய்யக்கூடா
கோனான குருபதமே கெதியென்றெண்ணிக்
குறித்திடமே நிலையாகக் கூர்ந்துகொண்டு
வானான மதிதேயப் பழக்கம்பண்ணி
மக்களே ரவியில்மனம் வைத்து நில்லே. 34



## மனோலயத்தின்பேறு

வேறு

நின்று மதியை நெருக்கி இழுத்திடு
கண்டு ரவியில் கலந்து இருந்திடு
பண்டு முனையில் பதியவை நேசம்
அண்ட ரிருப்பிட மறியலாம் பாரே. 35

அறிய வெகுநா ளாகலாம் நெஞ்சம்
குறியே கெதியென் றெண்ணி இருந்திடு
வெறியே பிடிக்கில் மெய்ஞ்ஞானபோதம்
சரியாக நின்று தழைக்காது பாரே 36

பாரே சுழிமுனைப் பகரார்கள் நல்லோர்
வாறே முடியில் ரவிமதி உண்டிடில்
காரே ரவியில் கனச்சூடு கொண்டு
வேறே யமிர்தம் விழுமது பாரே. 37

விழுகுமே ரதிஜலம் மெய்ஞ்ஞான போதம்
குழகுமே மதிஜலம் குடிகெடும் நஞ்சு
பழகு மதனால் மதிதேயக் காட்டில்
விழுகு மதியில் மேலென்றார் நல்லோர். 38

நல்லோர்கள் சொன்ன ஞாய மறிந்திடு
விள்ளார் ரவியை மேவுவாய் வங்கென
அல்லார் மதியை அங்கென்றடைந்திடு
நில்லாது நின்று நிறுவிக்கும் பாரே. 39

நிறுவிக்கும் போது நிருவிகற்ப மாச்சு
பறிவிக்கும் போது பாச்சலாம் கெற்பம்
அறிவிக்கு மந்த வமிர்தம தாகும்
தெரிசிக்கச் சொன்ன தெளிந்த ஜெயநீரே. 40

## சந்திர கலசாமிர்தத்தின் நாமமும் மேற்படி அமிர்ததாரணையின் பயனுந் திருவுளம் பற்றுகின்றார்

நீரான வண்டம் நிலைத்த கொடிமுடி
வாரான மேருவில் வஸ்துநான் குண்டு
சாரான வஸ்துக்குச் சாற்றுவே னாமம்
பேரான ரவியும் பெலமான கங்கையே. 41

கங்கையி லக்கினி கிழே எழும்பிடில்
பங்க மில்லாமல் பற்றும் புகையது
அங்கமும் வியர்வை அழுந்திக் கசிந்திடும்
பொங்கமும் பொங்கிப் பொழிந்திடும் பாரே. 42

பொழிந்து வமிர்தம் பொங்கியே நின்று
வழிந்தே விழுங்க வழியை என் சொல்வேன்
தெளிந்த மனிதர் நிலையார்கள் போதம்
சளிந்தே இறந்து தான் மாளுவாரே. 43

## வாசிநிலை

வாராமல் மதியை ரவிதனிற் சேர்த்திடு
நேராக சுழியில் மனதை நிறுத்திடு
வாரான கெற்பம் மாயையைத் தள்ளிடும்
நீரான போதம் நிலைக்கு முறுதியே. 44

உறுதியென் றெண்ணி யொருமனங் கொண்டு
சுருதியே யக்கினி கைவச மானால்
நிருவிக்குங் கெற்ப னிலைக்குஞ் சலத்தில்
பருதியைக் கண்டபனிபோல் விலகுமே. 45

விலகுமே சந்திர னிடப்பக்க நிலையில்
குலவுமே துஞ்சி யிருக்குமே யாகில்
அலகுமே விந்து அகாரத்தின் வீட்டில்
பழகுமே வியர்வை ஊசிநீ ராகுமே. 46

ஊசிக் சுழிமுனை யுச்சியில் மீதில்
நாசியின் மேலே நான்கங்குலத்தில்
வாசியின் வீடு வரபதி யானது
பேசிய பெயர்தான் பிறங்கு முக்கோணமே. 47

முக்கோண மிட்டு முழங்கிடு மண்டத்தில்
சிக்கெனக் கூட்டித் திடப்படும்போது
அக்கென வீட்டி லமருஞ் சுழிமுனை
நக்கனு மாயிக்குநன்றா யறைந்ததே, 48

அறைந் தைந்து பூத மாடாமல் கட்டினால்
சிறந்ததோர் வாசி சிக்கென்று நின்றிடும்.
பறந்தங்கே போகப் பாயாது மாயை
இறந்திடு மென்று வெண்ணாதே சொன்னேன். 49



சொல்லுவேன் சூட்சந் துலங்கி இழுத்திடு
மல்லுவேன் வங்என்று வாங்கி நெருக்கிடு
நில்லுவேன் அங்என்று நிறுத்தி அழித்திடு
வெல்லுவே னென்ற சிங்யென்று வீசிடே. 50

வீசிய வாசியை விடாமலே கட்டி
தூசி யோடாமல் துவள நிறுத்திடு
மாசிய ரவியில் மதியை நிறுத்திடு
பேசிய நிலையை பேசிடு வோமே. 51

பேசிடு மண்டம் வலப்புறம் சூரியன்
தேசியின் நிலையைச் செப்ப ஒண்ணாது
கூசிய சந்திரன் இடப்பக்கமப்பா
வாசிதா னின்று வளர்ந்திடும் பாரே. 52

வளர்ந்த முடியை வகுத்தார்கள் நல்லோர்
இழைந்த மதியால் இறந்திட வேண்டாம்
கலந்த பொறியைக் கசடறத் தள்ளி
நிலைந்த நிருமலம் நிற்பது பெரிதே. 53

நிற்பது நிற்க நிலை தவறாமல்
சொற்ப வாழ்வு துவண் டலையாதே
அற்புத மான வானந்த போதம்
கற்பனை யாகக் கண்டுகொள் வாயே. 54

## காயாதி கற்பம்

### வேறு

கொள்வதுதா னெளிதல்ல வெகுநாட் செல்லுங்
குரங்கதனைக் கொம்புதனிற் பாயாமற்றான்
நல்லுவது மனதுரிமைக் கொண்டாலல்லோ
நாடாத ஞானநிலை வலுத்துப்போச்சு
துள்ளாமல் மனமடங்கிச் சோதிகொண்டால்
துலங்குமடா உன்றேகங் காந்தியாகும்
விள்ளாமல் கற்பமதைப் பின்னே கொள்ளு
விளங்குமடா உன்றேகம் விழுகாதுபாரே. 55

விழுகாது கற்பமறிந்துண்ண வேண்டும்
வேதாந்த சாஸ்திரத்தை விரும்பவேண்டும்
நழுகாத மாயை விட்டு நழுகவேண்டும்
நமனென்ற தீவினைக்கு ளகப்படாதே

ஒழுகாது ஞான நிலை யறிந்தபின்பு
உத்தமனே கற்பமறிந் துண்ணுவுண்ணு
மழுவான சிற்றண்டங் கொணடுவந்து 56
மக்களே சூரியனை எடுத்துக்கொள்ளே.

## இரவி மெழுகு

சூரியனைத் தானெடுத்துப் பீங்கான்றன்னிற்
சூரியன்முன் வைத்திடுவாய் நவநாடானும்
வீரியமுந் தானொடுங்கி மெழுகதாகும்
வெண்கருவைக் கூடவிட்டுக் கிண்டும்போது
ஆரியராம் மும்மூர்த்தித் தயிலம்விட்டு
அப்பனே ரவிமுகத்தில் வைத்துப்பாரு
சோரிதரு மூன்று மொன்றாய் மெழுகாய்ப் போகுஞ் 57
சொல்லவொண்ணா மெழுகெடுத்துப் பதனம்பண்ணே.

பதனம்வெகு பதனமதாய்ப் பதனம்பண்ணிப்
பாலகனே தேவிமுன்பு வைத்துப் போற்றி
விதனமென்ற விதனமெல்லாந் தீர்ந்துபோகும்
மேன்மையுள்ள ஜடலமது வலுத்துப் போகும்.
மதனனென்ற மன்மதன்போ லொளியுங்காணு
மக்களே பரவெளியுள் ளடங்கிப்போதும்
அதனமதாய்க் கூத்துவிளை யாடலாகு
மப்பனே காயாதி கற்பமாச்சே. 58

ஆச்சப்பா மெழுகெடுத்துச் சூரியனிற்கொள்ள
அடங்காத சந்திரன்றா னடங்கிப்போகும்
வாச்சப்பா மெழுகுவொரு மண்டலந்தான் கொள்ளு
மக்களே மண்டலந்தா னிறுத்திவைப்பாய்
போச்சப்பா அவமிருந்து தொலைந்து போச்சு
பொல்லாத செந்தீயில் பொசுங்கிப் போச்சு
நீச்சப்பா நிலையாது மாய வாழ்க்கை
நிருவிகற்ப முண்டதனால் நிலைக்கும் பாரே. 59

நிலையான சிற்றண்டம் வெளிவிடாதே
நிஜமான மும்மூர்த்திக் கருச்சொல்லாதே
கலையான வெண்கருவைக் காட்டொணாது
காட்டினா லுன்றனிடக் கபாலம் போகும்
வலையான மாயையிலே சிக்கிக்கொண்டு
மாண்டதனால் வருவதென்ன மைந்தா சொல்லு
சிலையான சிலையதுபோல் மவுனம் பூண்டு
ஜெகத்திலே தான்திரிந்து சிவத்தைப் போற்றே 60



போற்றுவது மெழுகுடனே நாதஞ் சேரு
பொருமிநின்ற முப்பூரங் கூடச்சேரு
பார்த்திபனே நாதமதில் முப்புயிட்டு
பங்கயத்தோன் முகங்காணத் தெளிவாகும்
நாற்றிசையு மெச்சுகின்ற மெழுகிற் சேரு
நல்லதொரு மெழுகினிட வலுமை மெத்த
காற்றினிட வாடையங்கே பட்டதனால்
கருக்குமடா மெழுகினிடக் காரம் போமே. 61

காரம்போ மெழுகினிட வலுவேபோகுங்
கசிவுகொண்டு மெழுகதுதா னிறுகா தையா
வீரம்போ முட்கொண்டா!ல் வலுச்செய்யாது
விஞ்சையென்ற ஜோதிமயந் தோன்றாதையா
சாரம்போம் வாசியது அடங்காதையா
தன்மையுடன் கைபாகந் தப்பிற்றானால்
ஆரமென்ற அண்டத்தின் மெழுகுபோலே
வாச்சரிய மொன்று மில்லை வதீதந்தானே. 62

அதீதமென்ற சூரியனில் வலுவோ மெத்த
அம்மம்மா வதன் பெருமைச் சொல்லொணாது
பதீதமென்ற தொழில்கோடி தொந்தங்கோடி
பாச்சினால் வேதையது கண்கொள்ளாது
விதீதமென்ற வஷ்டகர்மம் நொடிக்குளாகும்
விஞ்சையென்ற தொழில்கோடி விநோதங்கோடி
வதீதமென்ற சந்திரனில் மெழுகுசொல்வேன்
மகத்தான பொருளெனவே மனதிற் கொள்ளே. 63

## மதிமெழுகு

கொள்ளடா சந்திரனை எடுத்துக்கொண்டு
கூர்மையுள்ள சவ்வதனை யுரித்துப்போட்டு
விள்ளடா மஞ்சளென்ற கருவைக்கூட
விட்டுமே ரவிதனிலே நவநாள்வைத்து
சொல்லடா கொடிநஞ்சு மாலைச்சேர்த்துச்
சுரோணிதமுங் கூடவிட்டு முப்புபோட்டு
செல்லடா பரியினிடக் குச்சுக்கொண்டு
சேரநன்றாய்த் தான்கிண்ட மெழுகுமாமே. 64

## வேறு

மெழுகது போல விசையொன்று மில்லை
தழுகாது தேசம் நமனதற்கில்லை
சழுகாது உண்டால் ஜடலம் வலுத்திடும் 65
பழுகாது ரோகம் நமன்பகை போமே.

பகை போகுமென்று பகர்ந்தார்கள் சித்தர்
பகை யறிவார்க்கு மதுரமாம் கற்பம்
தகை போகுமென்று தான்மறைத் தார்கள் 66
துகையாம் கருவைச் சொல்லவொண் ணாதே.

சொன்னால் தெரிந்திடும் சுகமான அண்மை
என்னால் வெளியா யெளியவர்க் கிரங்கி
முன்னால் முனிவர் புதைக்கரு வெல்லாம் 67
தன்னால் புலம்பச் சபையிற் சொன்னேனே.

சொன்னேனே யானுந் துறை யொளியாமல்
விண்டேனே யென்று வேண்டிய சித்தர்கள்
கண்டேனே யென்று கருதினார் முனிவர்கள்
பண்டேனே யென்று பலவிதம் சொன்னாரே. 68

சொன்ன மொழியைத் துறைதப்பிச் செய்தால்
பன்னுந் தொழிலில் பலவிதங் காட்டும்
என்னும் மனதுக் கின்பங் கொடாது
முன்னே மொழிந்த முறை தவறாதே. 69

தவறாதே சொன்னேன் சவுங்கலே மூலம்
தவறாதே சிற்றண்டத் தானது வாகும்
தவறாதே சித்தர் தமதொளிப் பெல்லாந்
தவறாமற் சொன்னேன் சத்தியந் தானே. 70

சத்திய மென்று தானிருந் தோர்க்கு
முத்தியென் கின்ற மோட்சமு முண்டாம்
பத்தியாய் நின்று பார்க்கின்ற பேர்க்கு
சித்தர் மொழிந்த திரையெல்லாம் வெளியே. 71

வெளியாகு மென்று விமலனார் சொன்னார்
பழியாத ரோமன் பாடினான் சிங்கி
தெளியாமல் வங்கம் நெறிவெட்டை யானால்
சுழியாமல் வெளியுங் கட்டுரைத் தாரே. 72



## மாரணக்கரு

மறைத்த பொருளை வகை விவரமாக
திறக்கவே சொல்லினன் நெறிதவ றாமல்
குறிக்கும் குருவது கோடி கவறாகும்
பறிக்கும் பொருள்தான் பசுமையு மாமே. 73

ஆகுமே சந்திர னண்ட மெடுத்து
ஏகுமே பிங்கானி விட்டத் தண்ணீர்
வேகுமே பொங்கி மெழுகது வாகும்
சாகுமே மாரணக் கருவது வாமே. 74

கருவது சொன்னேன் காரணக் குருவை
இரவது பகலு மிருதயம் வைத்து
மறவது மில்லை மகத்தான போதம்
திறமது சொன்னேன் செந்தீ மூலமே. 75

## வேறு

மூலமென்ற சுத்தரவி வெளியுமாச்சு
முன்னோர்கள் சொல்லுவதைக் கேட்டிலாயோ
ஆலமென்ற பேரண்டந் தன்னிலேதான்
'அப்பனே ரவிமதியு மங்கே யுண்டு
ஜாலமென்ற உந்தனில் ரவிமதியு முண்டு
சண்டாளா அண்டபிண்டம் ரவிமதியுமாகும்
கோலமென்ற சரக்குகளும் ரவிமதியுமாகுங்
கூர்மையுள்ள உப்பதுவும் ரவிமதியு மாமே. 76

## அகார உகார தீட்சை

ஆகுமே சித்தர்கள் தான் மறைந்தபொரு ளெல்லா
மப்பனே வெளித்தோன்றச் சொன்னேன் யானும்
ஏகுமே அகாரமென்ற கருவையெல்லா
மென்மகனே சொல்லுகிறே னன்றாய்த்தானும்
போகுமே ஊசிநீர் அகாரமாகும்
புண்ணியனே விந்துவல்லவோ அகாரமாகும்
வாகுமே குடத்துநீர் அகாரமாகு
மக்களே அகாரமது வமிர்தமாமே. 77

அகாரமென்ற சந்திரனாம் வாசிதானு
மப்பனே அகாரமென்ற பொருள்தானையா
உகாரமென்ற பொருளையல்லோ வெளியிற்றோன்ற
உத்தமனே அண்டமென்ற பொருள்தா னென்றும்

சிகாரமென்ற சிற்றண்டம் ரவிதா னென்றும்
சின்மயமே விளங்கினின்ற உகாரமாகும்
நிகாரமென்ற பிண்டமடா உகாரமாகும்
நிலையான பேரண்ட உகாரமாமே. 78

### மகாரதீட்சை

உகாரமென்ற உவர்ப்பூவும் உகாரமாகும்
முத்தமனே ரவிபீஜம் உகாரமாகும்
வகாரமென்ற பொருளெல்லாம் உகாரத்தாலே
வகைகண்டு செய்வோர்க்குப் பலிதமாகு
மகாரமென்ற அண்டத்தால் கோடிதொந்த
மக்களே சித்தர்செய்யும் வகையிதாகும்
அகாரமென்ற பொருளதுதான் உகாரத்திற் சேர்ந்தா
லப்பனே சித்துவிளை யாடலாமே. 79

### அஷ்டகர்மம்

ஆடலா மின்னமொரு சித்து கேளா
யப்பனே அஷ்டகர்ம மறுபத்துநான்குந்
தேடலா மிக்கருவைக் கொண்டேயாடி
ஜெயிக்கலா மித்தொழிலுந் திறமதாக
நாடலா முன்னைவெல்வா ருலகிலில்லை
நாதாக்கள் மெச்சுமிந்தக் கருவிதப்பா
பாடலா மடக்கமுள்ள கருவைத்தானும்
பதனமடா பதனமடா பித்துநஞ்சே. 80

### மாரணவித்தை வேறு

(வேறு)

பித்துநஞ்சு கொடியது கூட்டி
மத்தெனத் தயிலம் வாங்கியே கொண்டு
எத்துடன் எட்டி விரைத்தயி லஞ்சேர்
பத்துடன் தில்லைத் தயிலமும் கூட்டே. 81

கூட்டியே கேசரி பித்தை எடுத்து
வாட்டியே சந்திரன் அண்டமும் சேர்த்திடு
பூட்டிய அண்டம் மலப்புளித் தயிலம்
கீட்டியே வீரமும் பூரமும் சேர்த்திடே. 82



சேர்த்திடு நாபி வெள்ளையும் கௌரி
போற்றிடு உள்ளியும் பொற்கடுக்காயும்
மாற்றிடு சரியாய் வகையது கொண்டு
ஆற்றிடுந் தயிலமிவ் விதமா யரைத்திடே. 83

அரைத்து வழித்துவை மேதியின் சிமிளில்
உரைத்துவை பூசை உமையாள்தன் மூத்தாள்
பரைத்திடு தூபதேவி நசிநசி என்று
கரைந்திடு மாயிரத் தெட்டுரு வாமே. 84

உருவது தீர்ந்து ஒடுக்கத்தின் வைத்திடு
அருவது வாக ஐங்காயங் கேளாய்
கருவது மஞ்சள் கடுகு வெள்ளுள்ளி
பருவது காயம் வெந்தய மாமே. 85

ஆமது வெள்ளை கௌரியும் வீரம்
போமது பூரம் புழுகுடன் பூநீர்
தாமது வெல்லாம் சரியிடைக் கூட்டி
நேமது குருவும் நேயமா மிடையே. 86

இடையது சேர்த்து இளக வரைத்திடு
மடையனே மத்தன் தயிலத்தா லாட்டி
விடையது உருவாய் வேண்டி எடுத்திடு
உடையவன் கருவை ஒக்கவும் வைத்திடே 87

வைத்து உருவின் வயிற்றைக் கிழித்திடு
நைத்து நடுவில் நாமமும் சாத்தி
மெய்த்த கருவை விழிமுதல் தீட்டி
நித்திய பூசை நேசமாய்ச் செய்திடே 88

செய்திடும் போது தீராத துன்பமாம்
நொய்திடு முடலும் நோக்கறி யார்கள்
நைதிட வென்றால் நறுக்கிடு பாவையை
வைதிட மரணம் வளமது பாரே. 89

வளமது வாக வயணமுங் கேளாய்
குளமது தனிலே கொண்டுபோய்ப் பாவையைச்
சளமது தீரத் தண்ணீரில் கரைத்து
உளமது வாக-ஓம்-என்று ஊற்றிடே. 90

ஊற்றிய பின்பு வோடுமே பீடை
மாற்றியே வந்து வரைந்திடு தகடு
தேற்றிய தாகச்-சிவயதம-என்று 91
சாற்றிய நாமமுந் தான்வைத்துக் கட்டிடே

கட்டிய பின்பு கழிந்திடும் பீடை
எட்டிய கருவை எடுத்திடு தோளில்
கட்டிய ரிடத்தில் சொல்ல வொண்ணாது 92
மட்டியனே கேள் வைத்து விளையாடே

வைத்த கருவை வகை யொருவர்க்கு
உற்றது சொல்லி வுடைத்திட வேண்டாம்
சத்தியஞ் சொன்னேன் தலைதான் தெரித்திடும் 93
புத்திய தாகப் புனிதம் ப்தனமே

விதனமதாகப் பதனவே பண்ணி
விதனமும் வந்தால் விளையாடிப் பாரு
அதனமதாக ஆடலும் வேண்டாம் 94
இதனமதாக இருக்கம் செய்யாதே

செய்தாக் கிந்த திடமான கருவை
நொய்திடச் செய்தால் நோக்குமுன் பழியாம்
பைதிடப் பழகிப் பயந்து நயந்திடு 95
வைதிட உலகம் வளமாய் வணங்குமே.

வணங்கு மிக்கரு மாட்டிடு மொடுக்கி
இணங்கிய சாஸ்திர மெல்லோருஞ் சொன்ன
பணங்கிய நூலிற் பாடிய மோடி
துணங்கியே அஞ்சனம் சொன்னோமே சூட்சம். 96

## அஞ்சனம்

சூட்சும தாகச் சொல்கிறே னஞ்சனம்
பாச்சலா மிந்தக் கருவை நீ கேளாய்
ஏச்சலா மிந்தச் சந்திரன் மெழுகை
நீச்சலாம் நீசன் பித்துடன் கொடியே. 97

கொடியது நஞ்சு கூட்டரும் புற்றில்
வடியுமே பூச்சி இரண்டது வுண்டு
அடியுமே அண்ட வோடதில் கருக்கித்
தடியுமே அண்டத் தயிலத்தி லாட்டே. 98



ஆட்டிய மையைச் சிமிள்தனில் வைத்து
காட்டியே தீபம் அஞ்சனா தேவியை
வாட்டிய-வங்-அங்-கிலீம் என்று சொல்லியே 99
மூட்டிய உருமு வாயிர மோதிடே.

ஓதிட் டெடுத்து வுரைத்ததோர் சாஸ்திரம்
வாதிட்டப் படியே வளமாகக் கூட்டிடு
பேதிட்ட பூமி பிளந்து தெரிந்திடும்
சாதிட்ட மாகச் சத்திய மாமே. 100

சத்திய மாகச் சதிராய் நினைத்திடு
முத்திய தாகிய மோட்சமு முண்டு
பத்திய தாகப் பணிந்து யிருக்கவை
நித்திரை யார்லும் நினைக்க வொண்ணாதே. 101

நினைத்துப் புவியினிற் நிகழ்த்த வொண்ணாது
கணத்தில் வெடித்திடுந் தப்பாம லுன்றலை
கனத்த பொருளைக் கண்டாலும் விள்ளார் 102
குணத்தை யறிந்து குறிசொல்லு வாயே

சொல்லாத பேயைத் துரத்தி யகற்றிவை
நில்லாது காயம் நிலைக்குமோ பாரி
பொல்லாத பிறவிகள் பூமியில் மெத்த 103
தள்ளாமற் றள்ளித் தனித் திருப்பாயே

பாரேநீ சித்தர்கள் பகரார்க ளிக்கரு
வேரேநீ கண்டு நின்றாடுஞ் சித்து
வாரேநீ இக்கரு வாய்த்திடும் வேளை 104
துரேநீ யுள்ளே தொடருவார் பாரே.

தொடருவா ரென்று சொல்லாதே இக்கரு
படரா துலகம் பழிகொலை செய்திடும்
அடராது மிஞ்சி அழும்புகள் செய்தால் 10
கடலது தள்ளிக் கரையேறு வாயே.

கரையேறு மத்திரங் கட்டாகச் சொல்வேன்
மறையாமல் முன்னோர் மறைத்தார் கருவை
இறையான சூட்ச மிக்கரு வப்பா
குறையாமற் செய்தான் குணமா யுரைத்திடே.

உரைக்கிறேன் வசிய மூலகம் வணங்கிடத்
தரைக்கிறேன் வெள்ளை யாவாரை மூலம்
இறைக்கிறேன் தயில மிதமா யெடுத்திடு
மறைக்கிறேன் சந்திரன் மையது சேரே. 107

சேருநீ புனுகுடன் சேர்த்துக் கோரோசனை
வாருநீ மஞ்சள் தயிலமும் சேர்த்திடு
பாருநீ பித்துடன் கருவையுங் கூட்டிடு
ஆருநீ நன்றா யரைத்து வழித்திடே. 108

வழித்துமே சிமிளில் மையதை வைத்திடு
தெளித்துமே பூசையில் தேவியைப் போற்றிடு
களித்துமே-வசிவ-எனக் கருதியே யோது
அளித்துமே யுலக மடிபணிந் திடுமே. 109

அடிபணிந் துன்னிட மடுமைகளாகி
இடிபணிந் தேவ லென்னெனக் கேட்பார்
வடிபணிந் தேபொருள் வருத்து கேட்பவர்
முடிபணிந் திடுவர் முறைதெரிந் தாடே. 110

## ஆகிருஷணம்

ஆடிய ஆக்ருஷண மதுகேளாய்
தேடிய அரசின் வேரை யெடுத்திடு
கூடிய தயில மிறக்கி வடித்திடு
வாடிய பித்தை வளமா யெடுத்திடே. 111

எடுத்ததோர் பித்தை யிதமா யரைத்திடு
கொடுத்திடுந் தயிலம் கூடவே விட்டிடு
வெடித்ததோர் புனுகுகோ ரோசனை கூட்டிடு
நடித்திடற் கான சந்திரன் மெழுகே. 112

மெழுகுடன் நீசன் பித்துமே கூட்டு
நழுகுற நன்றா யரைத்து வழித்துத்
தழுவுறுந் தந்தச் சிமிளி லடைத்திடு
ஒழுகுறப் பூசையில்-சிவகிலீம்-என்றிடே. 113

என்றிடப் பரியின் தகடது செய்திடு
நன்றென உடலின் சக்கர மெழுதிடு
வென்றெனப் பட்சி எழுத்தைப் பதித்திடு
கன்றென நாமமுங் கருவையும் டூசிடே. 114



பூசிட்ட பூசையில் போற்றியே வைத்திடு
நேசித்த தன்னுரு நேரான நூற்றெட்டு
ஆசித்த பேர்களு மப்போதே வந்திடும்
பேசிட்ட மோகனம் பேசுவேன் கேளே. 115

## மோகனம்

கேளது மோகனம் கெட்டிய தாய்விடும்
பாழது இல்லை பலிப்பது திண்ணமே
கூழது சம்பழம் சமூலமே வாங்கிடு
வேளது வாகத் தயில மிறக்கிடே. 116

இறக்கிய தயில மிதமா யெடுத்திடு
பறக்கிற கிளியின் பித்தைப் பகுத்தெடு
பிறக்கிய சந்திரன் பித்துமே கூட்டிடு
வறக்கிய மஞ்சள் தயிலமும் சேர்த்திடே. 117

சேர்த்துமே காரம் கோரோசனை கூட்டியே
ஆற்றுமே நன்றா யழகா யரைத்திடு
பார்த்துமே பூசை பதிவாக வைத்திடு
ஏர்த்துமே-வங்-சிங்-கிலீம்-என்று ஓதிடே. 118

ஓதிய மையை உன் புருவத்தில்
நீதியாய் வைத்து நினைத்தபேர் சொல்லில்
ஜாதிகள் நீங்கித் தன்வச மாகும்
ஆதியாம் கருவை யடக்கி வைப்பாயே. 119

அடக்குவ தென்ன பேதனம் அறிவாய்
முடக்கும் முறையை மொழிந்திடும் போது
திடக்கும் கருவைச் செப்ப வொண்ணாது
மடக்கும் பேதனம் வகையது கேளே. 120

வகையதைக் கேளாய் வரும் கருமத்தின்
தகையுறத் தயிலம் சமர்த்துடன் வாங்கிடு
பகையறக் கேசரி பித்துடன் சேர்த்திடு
நகையற நன்றாய் நாடி யரைத்திடே. 121

அரைத்திடு சந்திரன் பித்துமே கூட்டி
உரைத்திடு காந்த மொக்கவே வைத்திடு
நரைத்திடு நன்றா யரைத்து வழித்திடு
திரைத்திடு மேதியின் சிமிள் தனில் வைத்திடே. 122

வைத்திடு பூசை-மங்-சிங்-பங்-என்று
நொய்த்திடு உருவில் நாற்றெட் டே யானால்
நைத்திடும் காரியத் தகட்டினி லுருவை
மைத்திடு நாமமும் மையதில் பூசிடே. 123

பூசியை பூசை புகழ்பெற வைத்திடு
வாசியை நிறுத்தி மதிதனி லேற்றிடு
தேசியின் குதிரைக்கால் கீழே புதைத்திடு
தோஷியு மோடித் துவண் டலைவானே. 124

அலைவது திண்ண மதையு மெடுத் திடு
குலைவது எக்கியம் குணமாகச் செய்திடு
நலைவது சாம்பல் நன்றா யெடுத்திடு
மலைவது மில்லை பாலிற் கரைத்திடே. 125

கரைத்துமே தண்ணீரிற் கலந்து குழப்பிடு
அரைத்துமே ஐயைந் தரையில் சிதம்பரம்
முறைத்துமே - சிவயநம - என்று வைத்திடு
நிறைத்துமே பித்தன் தனக்குநீ கட்டிடே. 126

கட்டிடும் போது கலவாது பீடை
விட்டிடும் வெறியும் வெளியேறிப் போவான்
தொட்டிடுந் தம்பனம் சொல்லுவேன் கேளாய்
மட்டிடும் போது வகையாகத் தானே. 127

## தம்பனம்

தானான சூரியன் மூலமே கொண்டுவா
ஏனான தயில மிறக்கி யெடுத்திடு
ஊனான ஓணான் பித்தைப் பகுந்தெடு
வீணான கேசரி மண்டைத் தயிலமே. 128

தயிலமுங் கூட்டிச் சந்திரன் பித்துடன்
அயிலம தாக அரைத்து எடுத்திடு
துயில்மொழி யாள்தன் துடக்கது சுட்டு
மயல்விழி மையென நன்றா யரைத்திடே. 129

அரைத்துச் சிமிள்தனி லன்புடன் வைத்து
உரைத்திடும் பூசையில் -ஓம் - நம் - என் றாயிரம்
திரைத்திடு முருவைச் செபம்பண்ணி வைத்திடு
மறைத்திடு மண்டையி னோட்டில் வரைந்திடே. 130



வரைந்த வுருவில் வகையுட னாமம்
பரைந்த கருவைப் பதிவாய்த் தடவியே
நிறைந்ததோர் வஸ்துடன் நேமமாய்ப் பூசைசெய்
குறைந்ததோர் காளிக் கோயிலில் வைத்திடே. 131

வைத்திடும் போது வாய் பேசார்கள்
நைத்திடும் கால்கை நாடவும் போகா
கைத்திடும் பிரமை தானது வாகும்
எய்த்ததோர் பின்பு எடுத்திடு வாயே. 132

எடுத்துமே கருவை யிதமாய்க் கழுவிடு
படுத்துமே பாவையைத் தண்ணீரில் விட்டிடு
கொடுத்து உச்சாடனத் தகடது கட்டிவை
விடுத்துமே போகும் வெளி யேறுவானே. 133

வெளியேறி வந்து விதியுள்ள மட்டும்
சலியாம னின்று தான் வாழுவானே
பழியாக யென்றால் பண்ணிய தொழிலைக்
குழியாக மூடிக் கொண் டெரிப்பாயே. 134

எரித்திடும் போது இறந்திடுங் காயம்
பரித்திடு மெக்கியம் பண்ணினா லில்லைத்
தறித்திடும் பாவந் தான்வந்து சுற்றும்
குறித்திடு மென்று குணமா யெடுத்திடே. 135

## உச்சாடனம்

குணமா முச்சாடனங் கூறுவேன் கேளாய்
வணமான பேயின் குமட்டி சமூலம்
இனமான தயில மிறக்கி எடுத்திடு
கனமான காக்கையின் பித்தை எடுத்திடே. 136

பித்தை எடுத்திடு பெருநரி மண்டையின்
சத்தையும் கூடவே சந்திரன் மெழுகுவை
நத்தையும் நீசன் பித்தை யெடுத்துவை
வைத்ததை நன்றா யரைத்து வழித்திடே. 137

வழித்துச் சிமிள்தனில் வளமாக வைத்திடு
குழித்துமே பூசை குணமாகச் செய்துவை
அழித்திடும் பேரை அண்டோட் டுருவை
தழித்திட வாயிரந் தானுரு செய்யே. 138

செய்யடா பூசை திறமாகச் செய்தால்
உய்யடா மட்டி உரையடா உருவைச்
செய்யடா - மங்- நங் - சங் - என்று சாற்றிப்
பொய்யடா போகாமல் பொருந்தியே செய்யே. 139

செய்தே எடுத்திடு சீர்பே ருடையவன்
கொய்தவன் காலில் கீழே புதைத்துவை
நொய்தவ னோடி நுடங்குவான் சாம்பலில்
வைதவன் கேட்டு பதங்கொள்ளுவானே. 140

கொள்ளுவா னென்று குறியா யிருந்திடாய்
விள்ளுவான் வெறியில் பேய்பிடித் தவன்போல்
துள்ளுவான் சண்டி சுடுகாடு போகத்
தள்ளுவான் வீணே தானிருக் காதே. 141

இருக்காம னீதா னெடுத்திடு புண்ணியம்
நறுக்காமற் பாவையை நற்பாலுந் தண்ணீரும்
குறுக்காமற் சேர்த்துக் குணமாய்க் கழுவிடு
பருக்காமல் தம்பனத் தகடது போடே. 142

போடவே பூசைப் புகழாய் வயிரவன்
தேடவே கோயிலில் செய்தது சேரவை
வீடது விட்டு வெளிப்போக மாட்டான்
கூடவித் துவேஷணம் குணமாகச் செய்திடே. 143

**வித்துவேஷணம்**

குணமான சங்கிலீ சமூலமும் வாங்கிடு
வனமான கேசரி எருவையும் சேர்த்திடு
கனமான தயிலம் கனிவா யெடுத்திடு
பிணமான கரியில் பிசைந்து வுரைத்திடே. 144

உரைத்து வழித்திடு வுடன்சேரு சந்திரன்
நரைத்து நாய்பித்து நஞ்சுங் கொடியும்
விரைத்தவன் மண்டையில் வுருவை விடைத்து
தரைத்தவன் பேரைச் சாத்திவை சக்கரம். 145

சக்கர மெழுதிச் சாற்றிடு உருவை
உக்கிரமாய் ஓதிடு - நசி - மசி - என்று
வக்கிர மாக மயானத்தில் வைத்திடு
சிக்கிரம தாகப் பெலியுங் கொடுத்திடே. 146



பெலியுங் கொடுத்துப் புதைத்திடும் போது
கலியான வெறியில் கலங்குவான் பாரு
சலியா துழன்று தவித்திடு மன்றியும்
வலியான வெறியால் மாளுவான் பாரே. 147

மாளுவா னென்று மனந் துணியாதே
கோளுறுங் கோபங் கொடுமை செய்யாதே
பாழுறும் பாவம் பழி கொலைக்கஞ்சி
ஏழைய னென்றே எடுத்திடு புண்ணியம். 148

புண்ணியந் தானே பொருந்த நினைத்திடு
கன்னியர்க் கன்னம் கனிவாய்க் கொடுத்திடு
பண்ணியின் நெய்யில் தண்ணீருஞ் சேர்த்திடு
மண்ணிய உருவை மறைய அழித்திடே. 149

அழித்திடக் கரைத்து ஆற்றினில் விட்டிடு
ஒழிந்திட மோகனத் தகடது போடு
செழித்திடப் பீடை விலகிடும் போது
பழித்திட உலகில் பதிவாய் இருப்பனே. 150

**மாரணம்**

இருப்பனே மாரணம் எதிராகச் செய்திடு
அருப்பனே எட்டி சமூலமும் வாங்கிடு
குருப்பனே அன்ன சத்தை எடுத்திடு
வருப்பனே பித்தன் மண்டையைச் சேர்த்திடே. 151

சேர்த்துத் தயுலந் திறமா யெடுத்துவை
பார்த்துப் பிணத்தின் தயிலமுஞ் சேர்த்திடு
கூற்றுவனான சந்திரன் மெழுகைக்
கார்த்து இருந்து கொடி நஞ்சுஞ் சேர்த்திடே. 152

சேர்த்துத் தயிலந் திறமாக விட்டரை
ஆற்று அலரிப் பலகையி லுருவு செய்
மூத்தவள் பேரும் முதலாளி நாமமுஞ்
சாற்றியே யோதித் தான் பூசு உருவிலே. 153

உருவினில் பூசி - ஓம - தூம - நசி என்று
மருவினில் விக்கச் சீலைமேல் வைத்திடு
பருவினில் சுழல் கால் கொண்டது மூடிவை
சருவினில் கள்ளி எருக்கலம் சுட்பலே. 154

சுப்பலால் சுட்டுத் தூளதை வாரி
அப்பியே பேரி விட்டதன் மேலே
துப்பியே தூவிச் - சூ - சூ - சூ - சூ - என்று
தப்பியே போட்டுத் தான் வருவாயே. 155

வருவாய் பிணத்தின் வரிசை எல்லாஞ் செய்
சருவமுஞ் செய்து தான் வரும் போதில்
பரிவாக முடிப் பழிவந்து சூழும்
அறிவாய் இத்தொழில் யார்க்குஞ் செய்யாதே. 156

செய்யாதே பாவஞ் செய்திடும் போது
வையாதே கொஞ்ச நாளி லெடுத்திடு
நொய்யாதே அஷ்ட கர்மத்துக் கெல்லாம்
மெய்யான சந்திரன் மெழுகது வாமே. 157

## கற்பமுறை

மெழுகது கற்ப முறையதைக் கேளாய்
பழுதற முட்டை ரவி விதை வாங்கி
தழுவற ஆவின் பாலது கூட
ஒழுகுறும் பாத்தின் ஆடதன் பாலே. 158

ஆடதன் பாலு மருஞ்செவ் விளநீர்க்
கூடாது வாகக் கூட்டியே யொன்றாய்த்
தேடது வாகச் சிறுபாண்டத் திட்டு
நாடது ரவிவிதைத் தொளாந்திரஞ் செய்யே. 159

செய்துமே மூடித் திறமா யெரித்திடு
நொய்யது சாமம் ரெண்டது வானால்
பையவே வாங்கி யாறவை குளிர
மெய்ய அரித்தரித் தோட்டை யுரித்திடே. 160

உரித்த கருவை ஒளிதனில் வைத்திடு
கரித்த நிம்பத்தின் பழச்சாறுவிட் டாட்டிடு
பரித்த ரவிதனில் மூன்றுநாள் வைத்திடு
செரித்த வெள்ளியின் குச்சியால் கிண்டிடே. 161

கிண்டிவை மூன்றுநாள் கிடந்துசென் றாறப்
பன்றிய தேனில் பகரவை மூன்றுநாள்
சுண்டியபோது சுரோணிதத் தேமுவை
விண்டிடும் போது மெழுகது வாமே. 162



மெழுகது கூட மெய்முலைப் பால் சேர்
அமுகது கன்னி குடத்துநீர் விட்டிடு
பழுதறக் கிண்டிப் பதமா யெடுத்திடு
சமுலறச் சத்திமுன் பூசையில் வைத்திடே. 163

வைத்து எடுத்திடு வடுகனுந் தேவியு
மொத்து இருந்திடு முன்மனை தன்னிலே
முத்தியும் பெற்று முனையிலே நின்றிடு
சத்தியமாகத் தானிருப் பாயே. 164

இருப்பது நாளில் இரவியில் மதிசேர
மருப்பது தேகம் மன இன மில்லை
கருப்பது ஏமன் கடக்கவே போவான்
சிருப்பனை விட்டுத் தெளிந்திடு மனமே. 165

மனமது தேறி மாய்கையுந் தள்ளி
குணமது வானால் கூற்றுவ னீங்கும்
சனமது வாசைத் தள்ளியும் போகும்
இனமது வாசம் சிதறிடும் பாரே. 166

## வேறு

சிதறிப்போங் காயமது இறுகிப் போகும்
சீறிநின்ற தாதுவெல்லாம் வலுத்துப்போகும்
கதறிப்போம் சதையிறுகி விந்து கட்டுங்
கண்ணொளியோ சிவந்து முகங் காந்தியாகும்
பதறிப்போம் பாசவினை யகன்று போகும்
பங்கயத்தோன் கிருபை யுண்டு வசியமாகும்
குதறிப்போங் கூற்றுவனும் விலகிப் போவான்
கூடழிக்கு மேமனென்ற பாவம் போச்சே. 167

போச்சுதடா மாய்கையென்ற பிரமை போச்சு
பூண்டு நின்ற பெண்டு பிள்ளை யாசைபோச்சு
தேச்சுதடா பிரபஞ்சம் பொய்யென் றெண்ணித்
தெளிந்து மனம் வெளியில் நின்று தேறும்பாரு
காச்சுதடா நரை திரையும் கழிந்துபோச்சு
காந்தியுமே சோதியொளி சுழினை மீதில்
வாச்சுதடா சிவகுருவின் மகிமையாலே
மக்களே அருநீரில் கிருபைதானே. 168

## முப்பூவின்மார்க்கம்

அருநீரின் கிருபையை யாரறியப் போறா
ரப்பனே தவமுனிவ ரறிந்த உண்மை
சிறுநீரும் பெருநீருந் தேவிநீரால்
ஜெகமுழுதும் பெருகியதோர் நீர்தானப்பா
குருநீரும் துருசுநீர் குமரி நீரே
குண்டலியாஞ் சத்திசிவ மான நீரு
பருநீரும் பிரபஞ்ச வாழ்க்கையின் பேர்
படர்ந்தநீர் சுரோணிதநீர் பாருபாரே. 169

## வழலை எனினுமொக்கும்

பார்ப்புகழும் முப்பூவின் வகையைச் சொல்வேன்
பராபரியும் பார்வதியு மெனக்குச் சொன்னார்
சீர்புகழும் வெள்ளைக்கல் சுன்னமென்றே
செப்புவே ணரனெடுத்து வமுதுகொண்டார்
நேர்புகழுஞ் சித்தரெல்லாங் கிருபைபெற்ற
நிரந்தரமாய் நின்றதொரு துருசுக்கல்லு
பேர்புகழு மக்கல்லு நறுக்கிக் கொண்டு
பேசாதே பலம் பத்து எடுத்துக்கொள்ளே. 170

கொள்ளுகிற அமரிபடி எட்டுவாங்கிக்
கூடச்சேர் பூமியிட பூநீர்தானும்
விள்ளடா நான்குபலம் போட்டு நன்றாய்
விளாவியே கலக்கிவைத்துத் தெளிவை வாங்கி
செல்லடா கல்லை யங்கே யதிலே போட்டுச்
செம்மையுடன் கொதிக்கவைத்துப் பதத்தில் வாங்கி
மெள்ளடா அமரியினாற் சுத்தி செய்து
மேன்மையென்ற ரவிதனிலே காயப்போடே. 171

காய்ந்துநன்றா யதையெடுத்து முன்போற் செய்து
கட்டாக இப்படியே பத்துமுறை செய்வாய்
பாய்ந்தன்ன சத்தெடுத்து ரவியிற் போட்டு
பக்குவமாய்த் தூள்பண்ணிப் படி எட்டுக்கு
ஆய்ந்த வன்ன நீரதுதான் பதினாறாகு
மப்பனே அதையளந்து விட்டுபூதம்
சேர்ந்தபல மொன்றதுவுங் கூடப்போட்டு
சேரநன்றாகக் கலக்கிவைத்துத் தெளிவைவாங்கே. 172



தெளிவான மூலமதனை யடுப்பி லேற்றித்
தீயெரித்துக் குழம்பான பதத்தில் வாங்கி
வளியான பீங்கானி லூற்றி நல்ல
மக்களே சுடும்ரவியில் வைக்கும் போது
சுழியான உப்பங்கே படரும்பாரு
சுறண்டியெடு மறுபடியு மமரிபடி நான்கு
குழியான உப்பதனில் கரைத்துக் கொண்டு
குணமான ரவிதனிலே காயப்போடே. 173

போடப்பா இப்படியே பத்துமுறை செய்து
புகழ்பெற்ற உப்பதனை எடுத்துக் கொண்டு
நாடப்பா முன்செய் கற்பொடியுஞ் சேர்த்து
நன்மையுள்ள பசளைநீர் படிரெண்டு வாங்கி
கூடப்பா கலக்கி நன்றாய்த் தெளிவெடுத்துக்
குறுகி நின்ற ரவிதனிலே காயவைத்துச்
சாடப்பா இப்படியே மூன்றுமுறை செய்தால்
தண்மை யுள்ள சுன்னமா யிருக்கும்பாரே. 174

சுன்னமதைக் கலுவமதி விட்டுக்கொண்டு
சுத்தமுள்ள வெடியுப்பு அஞ்சாங் காச்சல்
எண்ணமதில் கண்டிடைக்கு எட்டி லொன்று
எடுத்துமே யதிற்பாதிச் சாரம்சேரு
வண்ணமுள்ள சீனமது சாரமிடை போடு
மக்களே வீரமது பூரம்ரெண்டுந்
துண்ணிமையாய்ச் சீனமிடை கூடப்போட்டு
துப்புரவாய்ப் பசளைநீர் விட்டு ஆட்டே. 175

ஆட்டிநன்றாய் வழித்தெடுத்து வில்லைதட்டி
யப்பனே ரவிதனிலே காயப்போடு
மேட்டிமையாய்த் திரியாதே வில்லை காய்ந்தால்
வெண்மை யுள்ள ஓட்டில்வைத்து ஓடுமூடி
தாட்டிகமாய்ச் சீலைமண் வலுவாய்ச் செய்து
தணலேற முழுப்புடத்தில் வைத்தெடுத்துச்
சூட்டியதோர் மறுபடியுங் கல்வத் திட்டுச்
சுரோணிதநீர் விட்டாட்டிப் புடத்திற் போடே. 176

புடமாறி வில்லைதனை யெடுத்துக் கொண்டு
பேசாமற் கலுவமதிற் பொடியே செய்து
மடமாறி யான கன்னிப் பழச்சார் விட்டு
மக்களே துவள வரைத் தெடுத்துக் கொண்டு

சூடமாறிச் சிறுமடமா யெடுத்துக் கொண்டு
கூடச்சே ரொருதிங்கள் ரவியிற்றானும்
ஜெடமாறி மாற்றினின்ற பிஞ்சை வாங்கிச்
செம்மையுடன் முப்பூவில் கொஞ்சம் போடே. 177

போட்டவுடன் ரவிதனிலே வைக்கும்போது
புண்ணியனே புஷ்டியெல்லாங் கரைந்து போகும்
நாட்டமுடன் தெளிவுதனில் வீரம் பூரம்
நன்றாகப் பொடிசெய்து அதிலே போட்டு
தேட்டமுடன் கடுரவியில் வைத்துப்பாரு
தேவியென்ற பூரணியாள் கிருபையாலே
வாட்டமுடன் மேற்படர முப்பை வாங்கி
மறுபடியும் பீங்கானி லுலரவையே. 178

உலரவைப்பா யிப்படியே எடுத்துக்கொண்டு
உத்தமனே ஏழுதிங்கள் உப்புங்கூட
மலர வைத்த முப்புவுடன் சேர்த்துக்கொண்டு
மகத்தான கன்னியிடக் குடத்து நீரால்
தளரவைத்து அரைத்து நன்றாய் வில்லைதட்டி
தண்மையுட னோட்டினில்வைத் தோடு மூடிக்
கலரவைத்து மண்சீலை வலுவாய்ச்செய்து
கதுவாலிப் புடமிடவே சுன்னமாச்சே. 179

ஆச்சப்பா சுன்னமதை எடுத்துக்கொண்டு
அப்பனே வடுகனுக்குந் தேவிபூசை
பாச்சப்பா வஸ்துவுடன் சுத்திவைத்து
பலகாரம் பழவகைகள் பரமான்னங்கள்
காச்சப்பா பாலமுது நைவேத்தியஞ் செய்து
கனமான தூபமுடன் தீபங்காட்டி
வாச்சப்பா அகதேசி பரதேசிக்கு
வளமாக அன்னமிட்டுபசாரஞ் செய்யே. 180

செய்துகொண்டு பெண்டுபிள்ளை மாய்கை தள்ளிச்
சின்மயமே பெரிதென்று மனதி லெண்ணிக்
கொய்துகொண்ட பிரபஞ்ச மாயையெல்லாம்
கூடழிக்க வேவந்த கூற்றுவன் தானென்று
நொய்து கொண்ட ஜடலமது வலுக்கவேண்டி
நோக்கி மனங் குருபதமே கதியென் றெண்ணி
செய்துகொண்ட முப்பூவிற் பணவிடைகால் கொண்டால்
ஜெடத்திலுள்ள பிணிகளற்றுச் சித்தாய்ப்போமே. 181



## கௌரிச் சுன்னம்

சித்தான மகிமையைத்தா னென்னசொல்வேன்
ஜெடம் வலுக்குங் காந்தியுமோ அதிககாந்தி
முத்தான முப்பூவின் மார்க்க மெல்லா
முறையோடே சொல்லிவைத்தேன் சுத்தமாகப்
பத்தான முப்பூவிற் பணவிடைதா னெடுத்து
பாச்சலா மமிர்தம்விட்டுக் குழைத்துக்கொண்டு
கொத்தான கௌரிக்குக் கவசங் கட்டிக்
குணமான ரவிதனிலே காயப்போடே. 182

காயவைத்து அதன் மேலே நெருப்பு மூலிக்
கட்டாகத் தான் வைத்துக் கவசஞ்செய்து
நேயம் வைத்து மண்சீலை வலுவாய்ச் செய்து
நேர்மையுள்ள குக்குடத்தில் வைத்தா யானால்
சாயம்வைத்து வெண்மையதா யாகும்பாரு
தப்பாது வெள்ளிதனில் பத்துக் கொன்று
நேயம் வைத்த கௌரிதனை ஈந்தா யானால்
நேர்மை யுள்ள பத்துவய தாகும் பாரே 183

பாரடா சாயமுள்ள சரக்கெல்லாம் தான்
பண்ணுவாய் முன்போலே செய்துக் கொண்டு
நேரடா வெள்ளி செம்பு பித்தளையு மீயம்
நேர்மை யுள்ள வகைகண்டு கொடுத்தாயானால்
தேரடா வயதங்கே மிகவுங் காணுஞ்
செய்துகொண்டு தபசுநிறை வேறவேண்டிக்
காரடா வயித்தியங்கள் செய்யும்போது
கண்மணியே முப்பூவுஞ் சேர்த்துப்பாரே. 184

## சிவஞானம்

சேர்த்துப்பார் வயித்தியத்தி லுன்னைமிஞ்சி
ஜெகத்திலே வேறுவொரு மனிதருண்டோ
பார்த்துப்பா ராண்மைமிஞ்சிப் பேசவேண்டாம்
பரதேசி யெளியவன்போ லுலகத்துள்ளே
கார்த்துப்பா ரெவர்மிஞ்சிப் பேசினாலுங்
கருதாதே மனமடங்கிக் கனிந்துப் பேசு
கூற்றுப்பார் பிரபஞ்ச மாயையெல்லாம்
கூடிவரப் போறதில்லை ஞானநிலை பெரிதே. 185

ஞானமென்ற அறிவல்லோ விவேகம்புத்தி
தல்மனதா மறிவுடனே தண்மை வேண்டும்
ஈனமின்றி ஈவுதுவு மிரக்கம் வேண்டு
மெவ்வுயிருந் தன்னுயிரென் றெண்ண வேண்டும்
பானமின்றிப் பாசமதை யகற்ற வேண்டும்
பரமனென்ற சிவன் செயலென் றுணரவேண்டு
மோனமென்ற ரவிதன்னிற் சார்ந்துநின்று
முத்திபெறப் பழக்கத்தால் பூண்டுபாரே. 186

பூண்டுபார் மனதங்கே தெளியாவிட்டால்
பொல்லாத மாயைவந்து கொல்லுங் கொல்லும்
ஆண்டபிரான் சிவன்மகிமை என்றறிந்து
அப்பனே மதிதேயப் பழக்கம்பண்ணி
தாண்டவமா யங்குனின்று விளையாடுங் கூத்தை
சந்ததமும் விலகாமல் பிசகாமற்றான்
தூண்டி லல்லோ தபவொளி ஜோதிகாணுந்
தூண்டாமல் தூண்டுவது சுழினைதானே 187

சுழியான பூரணமே கதியென் றெண்ணிச்
சுற்றிவரும் வாசியைத்தான் நிறுத்தல் செய்து
வழியான ரவியல்லோ சிவயோக மாகும்
மக்களே சிவதீட்சை யதிக தீட்சை
பழியாக நின்றதடா மாய வாழ்க்கைப்
பற்றியல்லோ தொடர்ந்ததடா பழியுமங்கே
தெளியாமல் நின்றுடனே சித்தன் சித்தன்
நிஜமான சிவயோக வாழ்க்கை தேடே. 188

சிவயோக வாழ்க்கையிலே நிற்கும்போது
தீராத பிணிகள்வரு மாசைபூணும்
தவயோக மானதன்றோ பொருளினாசை
தத்துகின்ற பெண்ணாசை மண்ணினாசை
தவயோகம் கெடுப்பதற்கு ஆசைமிஞ்சிச்
சண்டாள மாயையிலே சுழன்று நொந்து
பவயோக மாகுமிந்தக் கூடழிக்க அந்தப்
பற்றிநின்ற ஆசைஎல்லா மடித்துப் போக்கே. 189



போக்கியல்லோ அறிவையங்கே ரவியிற்சேர
புண்ணியனே மதிதேயப் பழக்கம்பண்ணி
வாக்கியமாய் - வங் - என்று மதியை வாங்கி
மகத்தான பூரணத்தில் - அங் - என்றூன்றி
யோக்கியமுடன் - சிங் - என்று தவறிடாமல்
உத்தமனே ரவியினின்று உறுதியாக
பாக்கியமே இதுவென்று பாசம்வைத்துப்
பழகில்மதி தேய்ந்துரவி பிலக்கும்பாரே. 190

பிலமான ரவியினின்று தேறவேண்டும்
பேத மில்லாப் பூரணத்தில் நிறுத்த வேண்டும்
தலமான தலமறிந்து சாரவேண்டும்
சங்கையுடன் மவுனமதைத் தாக்கவேண்டும்
குலமான சிவயோக வாழ்க்கை விட்டால்
கூடவந்து மாயையது இழுத்துக் கொல்லும்
நலமான தேவியல்லோ ரவியினின்று
நாடாமல் பண்ணிவைக்குங் கூத்துத்தானே. 191

## திருநடனம்

கூத்தென்ற திருநடனக் கூத்தைப்பாரு
கோடிரவி யொவ்வாது கண்ணோகூசும்
சாத்தென்ற சுழிமுனையிற் சார்ந்து நினறால்
சகலசவு பாக்கியமுந் தானேயுண்டாம்
மாத்தென்ற இல்லறத்தி லிருந்தாலென்ன
மலையேறிக் காடுகரை போனாலென்ன
வாத்தென்ற வாசியங்கே கைவசமே யானால்
மக்களே சிவயோகம் வரிசையாமே. 192

வரிசையென்ற பூரணமே தெய்வந் தெய்வம்
மகத்தான பூரணமே கெதியென் றெண்ணி
உரிசையுடன் நினறவனே சித்தன் சித்தன்
யோகியவன் பரதேசி ஞானி தேசி
கரிசையென்ற அண்டரண்ட பதங்கடந்து
கண்ணிமைக்குள் சுற்றிவரக் கமனமோடி
நெரிசையுடன் காண்போர்க்கு இவனோ பேயன்
நெறிதப்பிச் சொன்னவனே பேயனாமே. 193

பேயனென்று சொல்லுவது யார்க்கு மைந்தா
பெரிதான காமவலைச் சிக்கினோர்கள்
மாயமென்ற மாயையிலே யழுந்துகின்ற
மனமுள் ளோன் பேயனென்ற பேருள்ளோனாம்
தேயமென்ற சிவமதமே பூண்டதானால்
தெய்வமென்று பேராச்சு சிவரூபமாச்சு
நாயமென்ற சொல்லாச்சு நளினமாச்சு
நாதாக்க ளென்றவனை நாடலாமே. 194

## சிவராஜயோகம்

நாடலா மனமங்கே நாடும்போது
நலமாக இன்னமொரு பொருளைக் கேளாய்
தேடலா மோரிதழின் தாமரையைத் தானும்
சிங் - எனவே தமர்வாசற் குள்ளே செல்ல
ஊடலாம் நாடோறும் பழக்கம்பண்ணி
உத்தமனே சுழிமுனையி னுள்ளே நின்றால்
வீடலாம் ரவிமதியும் பாசந் தள்ளும்
விளங்குமடா சோதிநின்ற இடத்தைப் பாரே. 19

சோதிநின்ற இடமல்லோ அமிர்தவாசல்
துலங்கவே பாசமதை யறுத்துத் தள்ளும்
வீதியென்ற பாசமது வகலும்போது
வீழுமடா அமிர்தரசம் மேவிக்கொள்ள
ஆதியென்ற தேகமது இறுகிப்போகு
மப்பனே தீபவொளி போலே மின்னும்
வாதியென்ற பேராச்சு மகிமை யாச்சு
மகத்தான பூரணத்தின் மகிமை தானே. 19

மகிமையென்ற அண்டமெல்லாம் சுற்றும்போது
மகத்தான உச்சிமலை வரையிலேறு
மகிமையென்ற உச்சிமலை கண்டோன் சித்தன்
மகத்தான சித்தரில்கொங் கணவன்றானும்
மகிமையென்ற பேருடைய னவனைப்போலும்
மனதுருகி நின்றவர்கள் யாருமில்லை
மகிமையென்ற சித்தனவன் யோகிதேசி
மனக்குறைக ளில்லாத மவுனியாமே. 197

மவுனியென்ற சித்தர் மெச்சும் வழியுள்ளானை
மகிழ்ந்து கொண்டார் முனிவர் சித்தர் மகிழ்ச்சியாக
கெவுனியவன் சித்தரிலே யவனைப் போலுங்
கேள்வியெங்குங் கேட்டதில்லை திறமோமெத்த



பவனியென்ற உலகமெல்லாம் நிமைக்குமுன்னே
புகுந்தோடி யவன் வருவான் பகர்ந்தபிள்ளை
பவனிதனில் வளர்ப்போர் மிகப்பெற்றோர்கள்
பார்க்கவென்றா லுலகதனிற் கண்டிலேனே. 198

கண்டிலேன் சித்தர்களில் முனிவர் தன்னில்
கயிலாச வர்க்கமதி லனந்தங்கோடி
விண்டிலே னண்டம்வரைச் சுற்றிப் பார்த்து
மெய்ஞ்ஞான போதமதை விரும்பினோர்கள்
மண்டிலேன் கண்டதில்லை யெனக்கு ஈசன்
மதிகுளிரச் சொல்லிவைத்த வார்த்தையப்பா
பண்டுபோய் தவமகிமை பெற்றபேர்கள் 199
பரிவாகத் தானிருந்து வாழ்வார் பாரே.

வாழுவது பூரணத்தை நம்பினோர்கள்
மகத்தான ரவியைவிடா திருந்தபேர்கள்
மீளுவது காயகற்பங் கொண்டபேர்கள்
மிஞ்சிநின்ற பிரமநிலை கண்டபேர்கள்
மாளுவது ஒருபோது மில்லை யில்லை
மகத்தான தேசியென்ற குதிரையேறி
ஆளுவது திண்ணமது சிவனுஞ் சொன்னா 200
ரப்பனே கற்பமதை யறிவிப்பேனே.

கற்பமென்றா லற்பமல்ல மதனப்பூடு
கண்டுகொண்ட பரதேசி வாசி தேசி
உற்பனமாய்ச் சொல்லிவைத்தே னுலகந்தன்னி
லுத்தமர்க்குச் சாகாம லிருக்கவென்று
விற்பன விவேகமுள்ளோர் தம்மைக்கண்டு
மேதினியில் விள்ளாம லடக்கஞ் செய்து
சற்பனைகள் செய்யாமல் பூடு வாங்கித் 201
தண்மையுள்ள மதிதனிலே சார்வாய்ச் செய்யே.

## அகார உகார மகார கற்பம்

சார்வான அகாரமதைப் பூசை பண்ணி
சங்கையுட னாண்டொன்று சென்றபின்பு
ஓர்வான உகாரமதை ஆண்டுகொண்டு
உத்தமனே மகாரமதை ஆண்டுகொள்ளு

சேர்வான மூன்றையுமே யொன்றாய்ச் சேர்த்துச்
செவ்வையுடன் சுத்தி பண்ணித் தீட்சை பத்துத்
தீர்வான தீட்சை பத்து முடிந்த தானாற்
செலுத்தடா ஆண்டொன்று திறமாய்த்தானே. 202

திரமாக ஆண்டொன்று தீர்ந்த தானாற்
சேரடா கடசரக்கு வீரம் பூரம்
உரமாகக் கெந்தியுடன் லிங்கம் சேரு
உத்தமனே அரிதார மோரிடையே கொண்டு
வரமான முன்கருவில் சமனாய்க் கொண்டு
மக்கவே வெடியுப்பு சீனம் சாரம்
பரமான முன்சேர்த்த இடையாய்க் கூட்டு
பாங்காகப் பசளைநீர் விட்டு ஆட்டே. 203

ஆட்டியே வழித்துருட்டி வட்டு பண்ணி
அப்பனே ரவிதனிலே காயப் போட்டு
தீட்டியே ஓட்டில் வைத்து ஓடு மூடிச்
செம்மையுடன் மண்சீலை ஏழுஞ் செய்து
வாட்டியே முழப்புடமாய் வைத்தெடுத்து
மக்களே மறுபடியுங் கல்வத் திட்டு
மூட்டியே அமிர்தமது விட்டே யாட்டி
முன்போலப் புடத்தினில்வைத் தெடுத்திடாயே. 204

எடுத்துமே கல்வமதிற் பொடித்துக் கொண்டு
என்மகனே சிவந்த கன்னிப் பாலை விட்டு
அடுத்துமே யரைத்து நன்றாய் வில்லை தட்டி
யப்பனே முன்போலப் புடத்திற் போடு
கடுத்துமே புடமாறி எடுத்து மைந்தா
கல்வமதில் முன்போலும் பொடித்துக்கொண்டு
கொடுத்துமே குடத்து நீர் விட்டேயாட்டித்
துவளவரைத்து வில்லைதட்டிக் காயப்போடே. 205

போடெடுத்துப் புடந்தனிலே வைத்துப் பாரு
புண்ணியனே பூப்போலே மலர்ந்து நிற்கும்
ஆடெடுத்த கள்ளனைப்போற் றேகபிடை
யகலுமடா வாதபித்த மறிந்துக் கொள்ளு
தோடெடுத்துப் பூண்ட சத்தி எனக்குச் சொன்னாள்
சொல்லிவைத்தே னுலகதனிற் பிழைக்கவேண்டி
கூடெடுத்துக் கழ்பமதைப் பின்னே கொள்ளு
குருபூசை சிவபூசை குணமாய்ச் செய்யே. 206



செய்துமே சத்தியிடப் பூசைசெய்து
திரமான சித்தர் பதம் பணிந்துக்கொண்டு
எய்துமே மாதாவைப் பணிந்துக்கொண்டு
என் மகனே அகதேசிக் கன்னமீந்து
மொய்துமே ரவியை நம்பிச் சுழினைநின்று
மோட்ச காரண சூட்ச மதுதானென்று
நொய்துமே எனத் தாயைப் போற்றி செய்து
நோக்கடா பணிவிடைதான் கொண்டுதேறே. 207

தேறுவது ஆண்டொன்று சென்றதானால்
தீராத வல்பிணியுந் தீர்ந்தே போகும்
ஆறுவது பெண்ணரவங் கடித்த தானா
லழிந்துவிடு முன் ஜடலம் நித்தியஞ் சொல்வேன்
மீறுவது அவிழ்தமது நிலைத்த தானால்
மிதமாக இருக்காதே கனியின் பாகம்
சேருவது வகையாகச் சேர்த்துக் கொண்டு
தின்னுவார் காயாதி கற்பமாச்சே. 208

ஆச்சப்பா அவமிருத்து எங்கே போச்சு
அப்பனே ஏமனென்ற பிணிதா னெங்கே
நீச்சப்பா நிலையாத வாசி கட்டும்
நிலையாத வமிர்தரசம் பொங்கி வீழும்
வாச்சப்பா வாலையவள் குடியுமாச்சு
மகத்தான சித்தனென்ற பேருமாச்சு
போச்சப்பா உலகமென்ற வாழ்க்கை போச்சு
புத்தியால் தாய்பதத்தைப் போற்றி செய்யே. 209

## பொன்முசுட்டை

போற்றுவது பொன்முசுட்டை மகிமை கேளாய்
புண்ணியனே மானிடர்க்காய் மனமிரங்கி
நாற்றிசையுங் கீர்த்தி பெற்ற மதனப்பூவை
நாடதனிற் றேடியே நன்றாய்ப் பார்த்துக்
கார்த்துமே நீ இருந்து வருஷகாலம்
கழிந்து மெள்ள உறவாடிப் பூவை வாங்கி
தேற்றியே பூவதனைப் பதனம் பண்ணித்
தெளிய வைத்துச் சீசாவி லடக்கஞ் செய்யே. 210

செய்துகொண்டு அம்மரத்தின் கனியை வாங்கித்
திடமான அகாரமதில் பூநீர் போட்டு
நொய்துகொண்டு போவதற்கு வீரம்பூரம்
நோக்கடா அதினுள்ளே நுணுக்கிப் போட்டு
பைதுகொண்ட கனியதனைப் பத்துமுறைச் சுத்தி
பாங்காகச் செய்துகொண்டு பதனம்பண்ணி
நைதுகொண்ட ரவிமுகத்தில் நவநாளுந்தான்
நன்றாகக் காய்ந்தபதங் கண்டுதேறே. 211

தேறுவது மரி துரிமை யாகநின்று
திடமாகக் காய்ந்தபத மெடுத்துக்கொண்டு
ஏறுவது மதனரதி ஜலத்தைவிட்டு
என்மகனே கிண்டிப்பா ருப்பாய் நிற்கும்
கூறுவது உப்புடனே மும்மூர்த்தி தன்னைக்
குழையவைத்து அமுரிதனில் ரவியுஞ் சேர்த்து
மீறுவது புதுகுடத்திற் றண்ணீர் விட்டு
மீறாமல் நவநாள் தான் ரவியில் வையே. 212

வைத்துதான் வீரமுடன் பூரம்சேரு
மைந்தனே கௌரியுடன் துரிசுவெள்ளை
மெய்த்ததொரு தங்கமது சரியாய்க்கொண்டு
மீறாமல் நிஷ்டைக்கு அண்டப்பூநீர்
கொய்த்துமே குடத்துநீர் விட்டேயாட்டிக்
குழையரைத்து வில்லைபண்ணி ரவியில்வைத்து
நைத்துமே முழப்புடத்தில் வைத்தெடுத்து
நன்றாக முன் குருவில் நாலிலொன்று சேரே 213

சேர்த் தரைத்துக் குடத்துநீர் விட்டேயாட்டிச்
செம்மையுடன் வழித்தெடுத்து வட்டுபண்ணி
நேர்த்தியுடன் காயந்தபின்பு முழப்புடத்தில் வைத்து
நெறிதப்பிச் செய்யாதே குருவை மறவாதே
பார்த்திபனே நேமநிஷ்டை தன்னை மறவாதே
பரிவாகத் தானறிந்து ஒருவர றியாமற்
காத்திருந்து குரு முடிக்குங் காலம் பார்த்துக்
கருணைவளர் பூரணத்திற் கருவைக் கிண்டே. 214

## மதியண்டக்கரு

கிண்டிவைத்துக் குருபூசை வைத்துப் போற்றிக்
கணேசனிடப் பூசைசெய்து வடுகன்பூசை



அண்டமெலாம் படைத்து நின்ற சத்தி பூசை
யன்பாகச் செய்துகொண்டு அருளைப் போற்று
கண்டதொரு சாஸ்திரத்தின் பாடல்கண்டு
கருவையங்கே அணுவளவு நீட்டிப் பாரு
தொண்டுபண்ணும் வாதமொடு வயித்திய மெல்லாந்
தொலையாத நோய்களெல்லாந் தொலைந்துபோமே. 215

போமேதா னுலகுதனிற் பிணியுமுண்டோ
பொன்விளையுங் கருவதுதன் புனித கற்பம்
வேமேதான் கமனரசக் குளிகைசெய்யும்
வேணபடி வாசியது நிலையினிற்குந்
தேமேதான் றேகமது இறுகிப்போகுஞ்
சிவந்துமே காணுமடா நரைதிரைகள் மாறுங்
கோமேதான் மதியினிட அண்டம் வாங்கித்
குழைய வைக்கப் பூரமது கூடச்சேரே 216

சேரடா மாதாந்த நீருஞ் சேரு
சிவந்த கன்னித் திங்களதி லேழுஞ்சேரு
ஆரடா அறிவார்கள் மும்மூர்த்தியான
அதிதமென்ற பொருளதனை யழைத்துப்பாரு
ரரடா பூரணத்தைக் கூடச்சேரு
என்மகனே ஏரண்டத் தயிலத் தாட்டிக்
ாரடா சத்தியைத்தான் பூசைபண்ணிக்
கருவான தொழில்களெல்லாந் தொட்டு ஆட்டே. 217

## முப்பு சேர்மானம்

ஆடுவாய் கரிசனத்தின் கருவிதாகு
மப்பனே மறைப்பினிட கருவிதாகும்
தேடுவாய் வசிகரத்தின் கருவிதாகும்
ஜெகஜ்ஜால மாடுகிற கருவிதாகுங்
கூடுவாய் யஷ்டகர்மக் கருவிதாகுங்
குவலயத்திற் பசாசு முதல் வசியமாகும்
நாடுவா யெத்தொழிலு மிக்கருவை விட்டால்
நன்மை இல்லை பலியாது கருவு நன்றே. 218

நன்றென்ற முப்பதுதான் முடிக்கு மார்க்கம்
நான்வெளியாய்ப் புலம்பிவைத்தேன் மனிதர்க்காகச்
சென்றென்ற பேரண்டங் கொண்டு வந்து
சிறிதாக இதை நறுக்கி எடுத்துக்கொண்டு

மன்றென்ற ஊசிநீ ரெனுமிர் தன்னில்
மக்களே அண்டமென்ற பூநீர்போட்டு
குன்றென்ற பூமியிடப் பூநீர்தானுங்
கொண்டுவந்து அதிற் கலக்கித் தெளிவைவாங்கே. 219

வாங்கியே அண்டத்தை யதிலே போட்டு
மக்களே கொதிக்கவைத் தெடுத்துக்கொண்டு
தாங்கியே திரியாதே ஊசிநீரில்
துப்பறவே கழுவி யதைக் காயப்போட்டு
பாங்கியே அண்டமதை எடுத்து வைத்துப்
பாங்காக அண்டமென்ற பூநீர்த்தேடி
ஏங்கியே கொண்டுவந்து ஊசிநீரில்
எட்டிலொரு பாண்டத்திற் கலக்கிவையே. 220

வைத்திடுவாய் மூன்றுநாட் சென்றபின்பு
மக்களே தானிதனிற் றெளிவைவாங்கி
நைத்திடுவா யடுப்பேற்றித் தீயைமூட்டி
நன்றாகக் குழம்புபோற் பருவம்பார்த்து
மெய்த்திடுவாய் பீங்கானி லிறுத்துக்கொண்டு
மேன்மையுள்ள ரவிதனிலே வைத்துப்பாரு
பொய்த்திடா துப்பாக உறைந்திருக்கும்
புண்ணியனே இப்படியே பத்துமுறை செய்யே 221

செய்த உப்பை எடுத்துமே பதனம்பண்ணு
செவ்வையுள்ள சிறுபசளை நீருவாங்கிக்
கொய்தமுடன் பூமியிட பூநீர் தன்னைக்
கொண்டுவந்து அதிற் கலக்கித் தெளியவைத்து
வைகமுடன் தெளிவை யங்கே காயவைத்து
மக்களே உப்பெடுத்து மூன்றுமொன்றாய்
நெய்தமுடன் சரியிடையா யெடுத்துக்கொண்டு
நேர்ஃமயுள்ள கல்வமதி லிட்டிடாயே. 222

இட்டுமே பசளையிட நீரைவார்த்து
என்மகனே வழவழப்பு காணுமட்டுந்
தொட்டுமே யரைத்து நன்றாய் வழித்துருட்டி
துவளறவே காய்ந்தபதந் தன்னிற்றானும்
பொட்டுமே கெஜப்புடத்தி னீறிப்போகும்
புண்ணியனே அதை எடுத்துக் கல்வத்திட்டு
நட்டுமே சீனமொடு சாரம் சேரு
நன்மையுடன் வெடியுப்பு இடைக்கிடை சேர்ப்பாயே 223



சேரேநீ சிறுபசளைச் சாறுவிட்டு
செவ்வையாய்த் தானரைத்து வட்டு பண்ணி
பாரே நீ ரவிதனிலே காயவைத்துப்
பண்பான ஓட்டில் வைத்து ஓடுமூடி
நேரே நீ சீலைமண்ணும் நன்றாய்ச்செய்து
நேமநிஷ்டை மறவாமற் புடத்திற்போடு
கூரேநீ யதைஎடுத்து வைத்துக் கொண்டு
குணமான வீரமுடன் பூரம் சேரே. 224

சேரப்பா வில்லைகண்ட இடைக்குத் தானுஞ்
ஜெயமான ரவிபீஜம் நாலிலொன்று
கூரப்பா குடத்துநீர் விட்டேயாட்டிக்
கூர்மையுட னரைத்துருட்டி வட்டுபண்ணி
நேரப்பா புடமதிலே வைத்துப்போடு
நிஜமுள்ள மாதாவை வணங்கிநில்லு
ஆரப்பா அறிவார்கள் முப்பூ தன்னை
அருமையுள்ள சித்தனவ னறிவான்பாரே. 225

## இரவிமெழுகு

அறிவான முப்பூவைப் பதனம்பண்ணி
அப்பனே ஆண் டொன்றி னண்டம் வாங்கிக்
குறியான அண்டத்தி னிடையே பூரம்
கூட்டிவைக்க ரவிதனிலே மெழுகுமாகும்
சரியான நவநாள்தான் வைத்தெடுப்பாய்
தங்கமென்ற சிமிளாதல் தந்தமாதல்
மறியான சிமிள் தனிலே யடக்கம் பண்ணி
மைந்தனே தேவிமுன்பு வைத்துப் போற்றே 226

போற்றுவாய் குருபூசை மண்டலந்தா னப்பா
பூண்டு சென்ற போதல்லோ குருவதாச்சு
மாற் றுவாய் முப்பூவை நீ பதனம்பண்ணு
மக்களே மெழுகு வெகு பதனஞ் சொன்னேன்
காற்றுமேல் மிதந்தபுத்தி யாக நின்றாற்
காணாமல் மறைப்பு மையைப் போட்டுக்கொண்டு
சேர்த்துமே சித்தர் வந்து சோரஞ்செய்து
திரவியம்போ லிக்கருவைத் திருடுவாரே. 227

திருடுவா ருனக்கு முபகாரஞ் செய்வார்
செம்மையுடன் கேட்டதெல்லா மீவார் பாரு
வருகுவா ருனக்குநல்ல வாக்களிப்பார்
மக்களே கற்ப முண்ண வழியுஞ் சொல்வார்
பருகுவார் நல்லபிள்ளை யாகக் கூடப்
பதிலாக அழைத்துப்போய்ப் பதியில் வைப்பார்
கிருகுவா ரவர்கள்பதம் போற்றிசெய்து
கேட்டதெல்லாந் தான்கொடுத்து தொண்டு பண்ணே. 228

## மதிமெழுகு

தொண்டுபண்ணு அவர்கள்மனம் நோகொணாது
சுந்திரனே என்னுடைய மகனே ஐயா
வண்டுபோல் மறுஜென்ம மாவதற்கு
வகைகேளாய் பச்சைக் கற்பூர மொன்று
கொண்டுபோம் கோரோஜனை குங்குமப்பூ
கோதைகொள்ளும் ஜாதிக்காய் ஜாதிபத்ரி
விண்டுபோங் கிராம்புடனே ஏலங்கூட்டி
விதமான மாவிலிங்க மூரமுங் கூட்டே. 229

கூட்டியே கஸ்தூரி மஞ்சள்தாரம்
கோதையடா கன்னியொன்று அஞ்சாந் திங்கள்
நாட்டியே கன்னியிடச் சுரோணிதமா முப்பு
நலமான கொடிநஞ்சு மாவுஞ் சேர்த்து
வாட்டியே ஆண்டொன்றில் மாண்ட அண்டம்
மக்களே அண்டமென்ற பூநீர்தானு
மாட்டியே அமரியுப்பு பூமிநாதம்
மைந்தனே ஓரிடையாய் எடுத்துக்கொள்ளே. 230

கொள்ளடா அயப்பொடியுங் காந்தம் லிங்கம்
கோதையிட நாதமதிற் கெந்திசேரு
விள்ளடா அரிதாரம் வீரம்பூரம்
விதமான மனோசிலையுக் வெடியுப்பு சாரம்
தள்ளடா சீனமொடு சரக்கெல்லாந்தான்
தானரைப்பாய் பசளைநீர் விட்டுநன்றாய்
துள்ளடா அரைத்துருட்டி வட்டுபண்ணித்
துப்புரவா யோட்டில்வைத்து ஓடு மூடே. 23:



மூடியே சீலைமண்தான் வலுவாய்ச் செய்து
முழப்புடத்தில் வைத்து முன்பாம் சரக்கிற்சேரு
வாடியே திரியாதே மனஞ் சோம்பாதே
மக்களே சிவவேம்பின் றயிலம்விட்டு
நாடியே அரைநன்றாய் நான்குஜாமம்
நயம்பெறவே அரைத்தபின்பு சொல்லக்கேளாய்
சூடியே சுரோணிதநீர் விட்டு ஆட்டித்
துவள அரை நாற்சாமங் குடத்துநீரே. 232

நீரான குடத்துநீர் விட்டு ஆட்டி
நீ மகனே முப்பூவும் நூற்றுக்கொன்று
கூரான அண்டமென்ற மெழுகிற்றானுங்
கொத்துவிடு ஆயிரத்துக் கொன்றேயப்பா
வாரான ஆண்டொன்றில் மாண்டபிண்டம்
வகையாகத் தயிலமது செய்துக்கொண்டு
சீரான இத்தயிலம் விட்டு ஆட்டித்
தேவியென்ற மனோன்மணியைப் பூசைசெய்யே. 233

பூசையிலே வைத்தெடுத்துக் குருவைப்,போற்றி
புண்ணியனே அகதேசி பரதேசிக் கன்னம்
பேசையிலே தான்கொடுத்து சிவனைப் போற்றிப்
பெருமையுள்ள மெழுகதனிற் குன்றியுண்ணு
ஆசையிலே விழுகாதே மண்டலந்தா
னப்பனே யழியாது ஆயுசென்றும்
வேசையிலே ஆசைகொண்ட பசல்களுக்கு
விள்ளாதே தோஷம்வரும் பேதம்பாரே. 234

பாரடா இரண்டாண்டி னண்டமென்றாற்
பழுதில்லை மூன்றுமொரு அஞ்சுக்குள்ளே
சேரடா கற்பமது வாகும்பாரு
திடமில்லைப் பதினாறு ஆண்டுமட்டுங்
கூரடா இவ்விதமாய்ச் செய்து உண்ணக்
குறையாத ஆண்டுகள்தான் குறைந்து போகு
மாரடா மற்றவண்டம் மைப்போக்காகும்
மாரணமாங் கற்பத்திற் காகாதன்றே. 235

ஆகாது சந்திரனுஞ் சூரியனு மாகு
மப்பனே சந்திரன்றா னைஞ்ஞூ றுண்டு
போகாது சூரியனோ ஆயிரந்தானுண்டு
போகமுனிப் பிள்ளைகளு முண்டகற்பம்

வேகாது மற்றுமுள்ள ரிஷிகள் சித்தர்
    விரும்பியதோர் கற்பமது சத்தியமாய்ச் சொன்னேன்
யோகாதி செய்பவர்கட் கிந்தகற்ப
    முத்தமனே கிட்டு மற்றோர்க் கில்லைதானே. 236

இல்லையடா பரிபாஷை இதுபோற் சொல்லு
    மென்மகனே இன்னூற்க ளில்லாவிட்டாற்
சள்ளையடா சாஸ்திரங்கள் பார்த்துப் பார்த்துத்
    தயங்குவதே யல்லாது சரிவராது
கொள்ளையடா இந்தநூல் கிடைத்த பேர்க்குக்
    குறிதெரியும் நெறிதெரியுங் கூர்மை தோன்றும்
பிள்ளைகளே உங்கள்புத்தி மயங்கிடாதீர்
    பெருநூலைப் பார்த்தலைந்தால் பிசகுதானே. 237

**சித்துமகிமை**

பிசகாது நந்திதான் முன்னூறாகப்
    பேசிவிட்டேன் வெளிதோன்றப் பேசாதெல்லாந்
தசகாது தயிர்கடைந்து நெய்யெடுத்தத்
    தன்மை யைப்போற் காணுமடா கருக்களெல்லாம்
பிசகாது மனக்குரங்கின் கொட்பில் சிக்கிப்
    பிரபஞ்ச மெய்யெனத்தான் பிரமிக்காது
வசமாக நான்சொன்ன படியே செய்து
    மக்களே கற்பமுண்டு சித்திற் சேரே. 238

சேரடா நந்திபிள்ளை என்று சொன்னாற்
    ஜெயம்பெற்ற சித்தர்களு முபசரிப்பார்
வாரடா அருகிருத்தி வார்த்தையாடி
    மக்களே ஏறுகிற மார்க்கஞ் சொல்லி
கூரடா வழிதுறையு நன்றாய்ச் சொல்லிக்
    கூடவே சேர்ந்துறவு கொண்டு பின்னு
மேறடா துறையறிந்து ஏறும்போது
    வன்மகனே நாமுனக்கு இதைச் சொல்வோமே. 239

சொல்லுவோம் சித்தரிட மகிமை யெல்லாஞ்
    சுட்டிவைப்போஞ் சிவகிருபை தோன்றிப் போகும்
வெல்லுவோஞ் சித்தர்களு மழைத்துக் கொள்வார்
    வெகுகோடி காலமட்டு மிருந்து வாழ்வார்



கல்லுவோ முன்றேக மழிவதில்லைக்
    காணலா மதிசயங்கள் தோன்றுமட்டு
மல்லுவோ மென்பிள்ளை யானால் மக்காள்
    மகத்தான சித்தரிட மகிமை தானே. 240

மகிமைகொண்ட சித்தரிலே சேர்ந்துக் கொண்டு
    வாழலாம் கோடியுகம் வாழ்ந்திருந்து
நகிமைகொண்ட பரத்தினிடக் கிருபைகூர்ந்து
    நழுவாமல் மலைதோறும் வாசமாகி
சகிமைகொண்ட சாம்பவியாள் வார்த்தை சொல்லத்
    தான்கேட்டுத் தேவரிஷி தானுமாகி
மகிமைகொண்ட தேவசபை வாசமாகி
    முத்திபெற்றுப் பரதேசி யாவாய்பாரே. 241

பரதேசி என்ற சொல்லு மப்போதாச்சு
    பார்மகனே கயிலாசத் தேகமாச்சு
நிரதேசி யானபதி நிலைத்துப் போச்சு
    நிராமயமாய் நின்ற பொருள் நீதானாச்சு
குரதேசி கூற்றனென்ற மாயை போச்சுக்
    கூட்டில்விளை யாடுமைந்துங் குணமாய்ப் போச்சு
இரதேசி நீ யாச்சு இகபரந்தானாச்சு
    இருந்துவிளை யாடுகின்ற சித்தனாச்சே. 242

சித்தனென்ற பேர்வரவே வெகுநாட் செல்லும்
    ஜெடமிருந்து கற்பமிது தெளிந்துபாரு
முத்தனென்ற காயாதி கற்பங் கொள்ள
    முடியாமல் வெகுபேர்க ளிறந்துபோனார்
கத்தனென்ற நிதிவேண்டுங் கருத்துவேண்டுங்
    கருவையங்கே காணுதற்குக் கருணைவேண்டும்.
புத்தனென்ற மாய்கைதனிற் சிக்கினோர்கள்
    புதுப்பானை ஈப்போலாப் புவியிற்றானே. 243

புவிதனிலே யுள்ளவர்கள் கோடிக்கொன்று
    புண்ணியமே செய்தவர்க்குக் கருவு தோன்றுந்
தவிதனிலே மகிமைபெற்ற சித்தர்பாதந்
    தான்கண்டு தொழுதுமிக வணக்கஞ் செய்து
கவிதனிலே யுள்ளதொரு பொருளுஞ் சொல்லிக்
    கைபாகம் செய்பாகங் கருத்துஞ் சொல்லிப்
பவிதனிலே பிரபஞ்ச மாயைநீங்கப்
    பரத்தினிட நிலைசொல்லிப் பாவிப்பாரே. 244

பாவிப்பா ரென்மகனே என்றுசொல்லிப்
பதஞ்சலியாள் மகிழ்ந்துபெற்ற மகனேயென்று
தாவிப்பா ருருகிருத்தி முத்தமிட்டுத்
தமிழுரைத்த கவிதனக்குப் பயனுஞ்சொல்லி
கோவிப்பார் புத்திவர ஞானஞ் சொல்லிக்
குலாவிவரக் கமனத்தின் குறியுஞ்சொல்லி
ஆவிப்பா ரனுக்கிரகப் பேருமிட்டு
அப்போது காஷாய மருள்செய்வாரே. 245

காஷாயங் கொடுத்து நந்தி பிள்ளையென்று
கண்மணியே என்மகனே வாயென்றேதான்
ஆயாசந் தீருதற்குக் கனியுமீந்து
அழைத்துப்போ யையர்பதம் பணியச்சொல்லி
வாயாறப் பேருமிட்டு வண்மைசொல்லி
வசனித்தே சிற்சபையில் வருகச் சொல்லி
தாயான மனோன்மணியாள் முத்தமிட்டுத்
தன்வசமா மினந்தனிலே தான் சேர்ப்பாரே. 246

தான் சேர்ந்த போதல்லோ சித்தனாச்சு
சங்கைகெட்ட மாடதுவோ சித்தனாவான்
வான்சேர்ந்த போதல்லோ பிறவி யற்று
மாய்கையென்ற பிரபஞ்ச வாழ்க்கையற்று
கோன்சேர்ந்த போதல்லோ சித்தர்கூட்டங்
கூடிவிளை யாடுதற்குப் போதங்கொண்டு
வான்சேர்ந்த போதல்லோ மாய்கைபோச்சு
மக்களே சித்தனென்று வசனிப்பாரே. 247

வசனிப்பார் புவிதனிலே யுள்ளபேர்கள்
வந்தடுத்து உனைவணங்கித் தெண்டன்செய்து
குசனிப்பா ரவர்களுற வாகாதப்பா
கோதையர்க ளாசையிலே மயங்குவோர்கள்
நிசனிப்பா ருனக்குவரு மானமென்ன
நீக்கியே புறம்பென்று நிலையில் நில்லு
வசனிப்பார் கோடி சித்தர் மாண்டாரென்று
வஞ்சகங்கள் பிரபஞ்சம் சொல்லும்பாரே. 248



## சீஷனைச் சேர்க்கும் இயல்பு

சொல்லுவது கேட்டிலையோ மகனேயென்ன
சூதுகப டானகலி யுகத்தின் வாழ்க்கை
வெல்லுவது கோடியிலே ஒருவனுண்டு
வேதாந்தக் கல்விகடல் மிகுந்தசித்தன்
கொல்லுவது பாசம்விடுங் கூற்றாம் பெண்டீர்
குழந்தை சுற்றம் பொன்னாசை மண்ணினாசை
தள்ளுவது கோடியிலே ஒருவனுண்டு
தன்மையுள்ள பிள்ளையதென் றழைத்துச் சேரே. 249

சேர்த்ததனா லுனக்கு வொரு பிள்ளையாச்சு
திரப்படுத்துஞ் சித்தினிட மகிமைசொல்லி
நேத்திரம்போற் றானினைத்து கரையேறுதற்கு
நிருவிகற்ப மாம்பொருளை நெஞ்சில் வைத்து
சாத்திரத்தின வினயமெல்லாஞ் சரியாய்ச் சொல்லி
சஞ்சார சமாதியிட வழியுஞ் சொல்லி
பாத்திரமென் றெண்ணியல்லோ மவுனதீட்சைப்
பதியாகு மிருதயத்தில் பதியச் சொல்லே. 250

பதியமன மில்லாட்டா லகலத்தள்ளு
பஞ்சமா பாவியென்று அடித்துப்போடு
கெதியுனக்கு இல்லையென்று விதியைச்சாடு
கேட்டதற்கு ஏதெனவே கிருபை செய்து
சதியுனக்கு மதியில்லாப் பிள்ளையென்று
தள்ளிவிட்டு நீ யொதுங்கித் தானேசொல்லு
மதியவற்கு வருமானா லழைத்துக்கொள்ளு
மக்களே பிரபஞ்ச மாயை பொய்யே 251

பொய்யென்று எண்ணாமற் பூதலத்திற்
போராட்டத் துரிலுடலம் நிலைப்பதில்லை
மெய்யென்று வாசியைத்தான் விரும்பிநின்று
மெய்ஞ்ஞான போதமுற்று கற்பங்கொள்ளு
சையென்று சாம்பவியாள் கிருபை தன்னைச்
சாராம லுடலமது தளர்ந்துப்போனால்
வையென்ற மறுபிறப்பிற் சித்திற் சேர்ந்து
வாழ்வதுதான் பொய் யென்று அரன் சொன்னாரே. 252

## வேறு

அரன் சொன்ன சொல்லை யன்பாக எண்ணிப்
பரம் சேர்ந்த சித்தர் பலவிதஞ் சொன்னார்
சரம் சேர்ந்த இக்கரு சத்தியமாய்ச் சொன்னேன்
உரம் சேர்ந்த கருவென் றொளித்தார்கள் சித்தர். 253

ஒளித்த கருவை யொளியாமல் நானே
அளித்த பொருளை யறிவுறச் சொன்னேன்
பழித்த ரிஷிகள் பாடிய நூல்கள்
கழித்த மறைப்பை கண்டிடு வாயே. 254

கண்டிடச் சொன்ன கருமறைப் பெல்லாம்
விண்டிட யானும் வெளிதோன்றச் சொன்னேன்
பண்டிட முனிவர் பலவித மாகக்
கொண்டிடச் சொன்ன குறியறிவாயே. 255

## நூலுக்குச் சாபம்

குறியு மறியக் குணக்கற்ற நூலை
நெறி தவறாமல் நேசம தாகவே
தெரிய தனியே ஜெகத்தி லொருவர்
அறியக் கூடாதே அரன் சொன்ன சாபமே. 256

சாபமே பெரிது சத்தியஞ் சொன்னேன்
கோபமே செய்வார் கொடிமுடி வேகும்
பாபமே வந்து பழி கொலை சுற்றும்
நாமமு மற்று நரகில் வீழ்வாரே 257

விழுவாரே நோயில் விலக்க ஒண்ணாது
அழுவாரே யவரொடு சுற்றமு மழிந்திடும்
பழுதறப் பொருளைப் பதிவா யடக்கிவை
மழுவறச் சத்திய மாக நினைத்திடே. 258

நினைத்திட்ட பேர்க்கு நிருவாணி கிருபை
அழைத்திட் டழைத்து யருகி லிருத்தியே
பழைத்திட்ட கருவைப் பதியவே நெஞ்சில்
இழைத்திட்ட பூரணி இயம்புவாள் பாரே. 259

பாரே முனிவர் பழ ரிஷி சித்தர்கள்
நேரே யுரைத்த நிஜ முள்ள சாஸ்திரம்
மாறே மறைத்த மறைபொரு ளெல்லாம்
கூறே யழியக் கூறு முன்னூறே. 260



முன்னூறு போல மொழியார்க ளெவரும்
கன்னூறு போலக் காட்டினார் பொதிகைப்
பண்ணூறு போலப் பரிபாஷை பேசும்
என்னூலைப் போல இசையாது நூல்களே. 261

நூலை வெளியில் விட்டவர் சுற்றம்
பாழே போமென்று பதிவாய் முனிவர்கள்
காளையி லேறுங் கந்தனை ஈன்ற
வாலைச் சிறுபெண் வசனித்த சாபமே 262

சாபமே பெரிதென் றெண்ணி இருந்தவர்
நாமமும் கிளையும் நன்றாக வாழ்ந்திடும்
நேமமு மாக நிஷ்டையில் வாழ்ந்திடும்
சோமனைப் போலுஞ் சுகமா யிருப்பரே. 263

இருப்பரே புவியி லென்றைக்கும் வாழ்ந்து
அறுப்பரே மாய்கையை யவர்கிளை சுற்றமே
தறிப்பரே பொருளைத் தான் வெளி விட்டவர்
மறிப்பரே பெரிதும் நரகில் வாழ்வாரே. 264

வாழுமே பொருளை மனதில் வைத்தோர்கள்
தாழுமோ கிளைதான் தாழாது சத்தியம்
ஆழுமே புவியி லடங்காத ஞானத்தில்
கேளு நீ சொன்னேன் கிளைசுற்றம் பெருகுமே. 265

பெருகி இருந்திடும் பெண்பிள்ளை சுற்றமும்
மருவி வளர்ந்திடும் மாறாத செல்வமும்
பருகிய அரனும் பார்ப்பதி கிருபையும்
தருகியே பெருகித் தான் வாழும் சுற்றமே. 266

சுற்றமு மற்றுஞ் சுகமாக வாழ்ந்திடும்
நித்தமும் ஞானம் நிலைத்திடுஞ் சத்தியம்
முத்தருங் காணரும் முத்தியாம் பதியில்
பத்தியாய் நின்று பரிந்து வாழ்வாரே. 267

## வேறு

வாழாமற் பொருளதனை வெளிவிட் டோர்கள்
    வையகத்திற் பிறர் சிரிக்கக் கரும நோயில்
தாளாமற் பிறவி தொறு மிவ்வண்ணந் தான்
    சண்டாளப் பிணியாலே தானே மாய்வார்

கேளாம லரனுமையுஞ் சாப மிட்டார்
கெதியில்லைப் பாழ் நரகே வீழ்வார் மைந்தா
கோளான குடும்ப மெல்லா மழிந்து போகுங்
கும்பமுனி கூறிவைத்த சாபந்தானே. 268

சாபமிட்டார் தவமுனிவர் சித்தரெல்லாம்
சண்டாளா இந்நூலைத் தான் காட்டாதே
கோபமிட்ட சித்தர்கள்சா பம்பொல்லாது
கொடிமுடியும் வெந்துவிழுஞ் சாம்பலாக
பாபமிட்ட ஜென்மமென்றாற் பழிகட் கஞ்சான்
பயப்பட்டால் பாபம்வந்து சூழ்ந்திடாது
சோபமிட்ட வஞ்சகர்க்கு நூல் கொடாதே
தூரமாய்ப் போய் விடுவாய் சூஸ்திர மாயே. 269

சூஸ்திரத்திற் சொல்லிவைத்தப் பொருள்களெல்லாஞ்
சூது வினயங்கள் வைத்துப் பார்க்க வேண்டுஞ்
சாஸ்திரத்தில் முனிவர் சித்தர் சொன்ன தெல்லாந்
தப்பிதங்க ளொன்றுமில்லைக் கருத்தோன் றாது
நேத்தியுள்ள கற்பத்தின் கருவீ தாகும்
நினைவு கொண்டு பார்ப்பவனே சித்தனாவன்
ஆத்திரமாய்ச் செய்வோர்க்கு மறிவோர்க்குந்தா
னப்பனே கரு வேறு அறிந்து பாரே. 270

அறிந்து பார் வயித்தியத்தின் கரு வேறாகு
மந்தந்தத் தொழிற் செய்யுங் கரு வறிந்தால்
தெரிந்து போந் தொழில்களிடச் சூட்ச மெல்லாந்
தேவரிஷி நீ யாவாய் சித்த னாவாய்
சரிந்துபோம் நீ செய்யுந் தொழிலைக் கண்டு
சன்யாசி தவ முனிவன் சித்தனென்று
தெரிந்துபோ மூலக மது துதிக்கும் பாரு
நினைவாகக் கரு வறிந்து செய்து பாரே. 271

பாரப்பா கண்டறியா மூடர்க் கேது
பார்த் தறிந்து வினயம் வைத்துப் பார்க்க வேண்டும்
தேரப்பா ஆசானே சொல்ல வேண்டும்
நினைவு கெட்ட தோஷிகட் கோ நிஜமா மின்னூல்
தேரப்பா முன்னூற்றைப் போல்தா னொன்று
செப்பாது செப்பாது தெரிந்துபாரு
ஆரப்பா அறிவார்களிந்த நூலி
லடக்கம் வைத்துச் சொல்ல இல்லை யறிந்துபாரே. 272



அறிந்துபா ரிந்த முன்னூ றடக்க மில்லை
யப்பனே வெளிதோன்றச் சொல்லி வைத்தேன்
தெரிந்து பார் முன்னோர்கள் சொல்லிய நூலெல்லாஞ்
செய்பாகங் கைபாகம் நன்றா யாய்ந்து
சரிந்து பார் கரு வொன்று நாமங் கோடி
தான் சொல்லி வைத்ததனால் வெளி தோன்றாது
குறித்துப்பா ரென் நூலில் மறைப்போ இல்லை
குறைக்கின்ற பசல் களுக்குங் குறி தோணும்மே 273

தோணுமே என் நூலைப் பூசை பண்ணித்
தொண்டு பண்ணி வைத்திருந்தோ னவனே சித்தன்
காணுமே சித்தர் வந்து கருவுஞ் சொல்லிக்
காட்டுவார் நீயுமொரு சித்தனாவாய்
பேணுமே கரு வறிந்த பெரியோர் பாடல்
பேசினது போற செய்தால் பயமொன் றில்லை
கோணுமோ ஒருபோதுங் குறைவ தில்லை
குறி தோன்றாக் குற்றமதால் நூல்கள் பொய்யே. 274

பொய்யென்று உலக மதி யுள்ளபேர்கள்
புத்திகெட்டு மதி மயங்கிப் போனார் கோடி
சையென்று பலர் சிரிக்க மடிந்தார் கோடி
தட்டழிந்து கெட்டோ மென்று தவித்தார் கோடி
மெய்யென்று தா னினைந்து பிரம நிலை கண்டு
வேதாந்தப் பரம குரு கதி யென் றெண்ணி
தொய்யென்ற சிவன் செயலை யறிந்த பேர்க்குத்
தோன்றுமடா தொட்ட தெல்லாம் பலிதமாமே. 275

## கருவிகற்பம்

பலிதமடா இதனிலொரு கருவைக் கேளு
பதறாமற் சித்தரெல்லா மறைத்துப் போட்டார்
நெளிதமடா கருவுக்குக் கோடி நாமம்
நீச்சு நிலை இல்லாத பொருளோ கோடி
கலிதமடா மண்ணொன்று கலங்கள் கோடி
காணுகின்ற நூலொன்று கலைகள் கோடி
வலிதமடா தங்கமொன்று பணியோ கோடி
வசனித்த கதை யதுபோல் வகை ஈதாமே. 276

வகையான சித்த ரெல்லா மறைத்த தொரு பொருளை
மன திரங்கு மனிதர்கள்மே லிரக்கங்கொண்டு
துகையான கருவெளியாய் தோன்றச் சொன்னேன்
சொன்னதினாற் சிவன் முதலாய்க் கோபங் கொண்டார்
நகையான சித்தர்களுஞ் சண்டை போட்டு
நானவர்மேல் கோபித்தேன் செந்தீப் பற்றப்
பகையான சமையத்திற் சிவனும் வந்து
பால் கொடுத்து முத்தமிட்டு நந்திவா வென்றாரே. 277

நந்திவா வென் றழைத்து முன்னே வைத்து
நாதாந்த வமிர்த மெனக் களித்தா ரையா
தந்திரமா யவரிருக்கு மிடத்தைப் பார்த்துச்
சதாகோடி தவமுனிவ ரவரைப் போற்றி
மந்திரமாய்த் தானினைந்து சிவனைக் கொண்டாடி
மாமுனிவர் ரிஷிகள் சித்தர் மகிழ்ச்சி கொண்டு
சிந்தைதனில் நந்தி பெற்ற பேறே பேறு
சிக்காது தவமகிமை தானென்றாரே. 278

தவமகிமை நந்தியைப்போ லில்லை யென்றார்
தாங்காத பதஞ்சலியைத் தாங்கப் போமோ
நவமகிமை சிவனுக்கு நந்தி பார்வை
நந்தி யென்ற ரிஷபமது சிவத்தின் பார்வை
குலமகிமை யுள்ளவர்க்கு இடது கண்ணாய்க்
கொள்கினா ரதினாலே சித்தர் பகை யாச்சு
பலமகிமை நந்தியென்று சிவன் வாக்கும் பெற்று
பாயாமல் பூமிதனிற் படுத்தேன் பாரே. 279

படுத்தனடா சிவனுக்கு முன்னே பூசை
பார் மகனே எனக்குத்தான் பின்பூசை யாகும்
கொடுத்து விடச் சிவன்சொன்ன வாக்குப் பெற்றுக்
கோடியுகம் பூமிதனில் வாழ்ந்தேன் பாரு
அடுத்ததொரு மனிதருக்குப் பிணிநோய் தீர
அப்பனே அறைகின்றே னுபாயங் கேளு
எடுத்ததொரு கெந்தகத்தின் பற்பஞ் சொல்வேன்
சகலநோய் குடிபோகுந் தன்மை பாரே. 280

## கெந்தக பற்பம்

தன்மையென்ற கெந்தகத்தின் கட்டிவாங்கிச்
சற்குருவைத் தானினைந்து முப்பூப்பூசிச்
செம்மையுடன் ஆற்றுவல்லிக் கிழங்கரைத்துத்
திடமாகக் கவசமிட்டுச் சீலைசெய்து



வண்மையென்ற ஜாண்புடமே வைத்தாயானால்
மக்களே வெண்மையது என்ன சொல்வேன்
பெண்மையென்ற பிணியெல்லா மோடிப்போகும்
பேதமில்லைச் சத்தியமாய்ச் சொன்னேன் பாரே. 281

சொன்னதொரு சரக்கெல்லா மிப்படியே செய்வாய்
சொர்ண மென்ற பொருள்கூடுந் துறையோ கோடி
அண்ணலென்ற சிவனெனக்குச் சொன்னவித்தை
யப்பனே ஒருவருக்கும் விள்ள வேண்டாந்
துண்ண லென்ற தொழிற்செய்து மகனே நீயுந்
துய்தபசு நிறைவேறச் சொன்னேன் யானுங்
கண்ணலென்ற லிங்கமுடன் கெளரி வீரங்
கட்டான பூரமுடன் தாரமாமே. 282

தாரமடா மனோசிலையும் சிங்கி நாகம்
தன்மையென்ற காரியம் பாஷாண மெல்லாம்
ஆரமடா சரக்கெல்லாங் கட்டி நீறு
மப்பனே செந்தூர மெழுகுமாகும்
வீரமடா குறையாது சூரியனா முப்பூ
விரவியே கொண்டுவிடக் காயசித்தி
பாரமடா செந்தூர மெழுகின் மார்க்கம்
பாடிவைத்தே னூல்தனிலே பணிந்துபாரே. 283

பணிந்துபா ரிந்த முன் னூறுதன்னைப்
படராமற் குகைதனிலே பதனம் பண்ணி
அணிந்துபார் சித்தரெல்லா மறைத்துப் போட்டா
ரப்போதல்லோ அவர்களுடன் வாதுபேசித்
தணிந்துபார் தவம்வேண்டு மென்றபேர்க்கு
ஜடம்வேண்டு மில்லாட்டாற் றவங்கிட்டாது
கனிந்துபார் முனிவர்சித்தர் பாடிய நூற் கெல்லாங்
கருது மின்னூற் றிறவுகோல் கண்டுபாரே. 284

கண்டுபா ரின்னூலை வெளிவிட் டோர்க்குக்
கண்கெட்டுத் தலைதெறித்துக் கனலோமிஞ்சி
மண்டுபா ரவன்குலமும் நசித்துப் போகு
மைந்தனே எழுபிறப்பும் நயன ஒளிவில்லை
பண்டுபார் முனிவர் சித்தர் சொன்ன சாபம்
பழுதுவரா தியான் சொன்ன சாபம் பொய்யா
துண்டுபா ரெழுபிறப்பும் வந்து சூழு
மூலக மதிற் காட்டாதே அடக்கம் பண்ணே. 285

அடக்கமடா மனதடக்கம் வெகுவாய் வேண்டு
மப்பனே மன்னுயிர்தன் னுயிர்போற் செய்து
ஒடுக்கமது தனிலிருந்து கருவைத்தேடி
யொருவருக்குந் தெரியாமற் றொழிலைச் செய்து
தடக்கமுட னியிருந்து கற்பமுண்ணு
தானுண்ணத் தேகமது தங்கம் போலாம்
விடக்கெடுத்த நாயில் இருந் தாவதென்ன
மேதினியி லுள்ளவருஞ் சித்தராமே. 286

சித்தனா யிருக்கிறவன் கோடிக் கொன்று
தெளிவு கண்டு அறிவு கொண்டு தேற வேண்டு
முத்தனா யென்னூலிற் கருவைக் கண்டு
முடிக்கும் வகை தானறிந்து முறை தப்பாமற்
பத்தனாய்ச் சிவன்மேலே பாரம் போட்டுப்
பரமகுரு பாதமதை நெஞ்சில் வைத்துக்
கர்த்தனாய் நீ இருந்து காட்சி பெற்றுக்
கண்டு கண்டு தேறுவது கடினந் தானே. 287

கடினமடா வெகு கடினம் மன தடக்கம் பண்ணு
கண்மணியே கருவை எல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
படினமடா சித்தர் சொன்ன சாஸ்திரங் ளெல்லாம்
பலவிதமாய்ச் சொல்லிவைத்தார் கருத் தோன்றாமல்
நடினமடா நான் சொன்ன முன்னூறு தன்னை
நாதாக்கள் கேட்ட மெச்சச் சிவனு மெச்சு
வடினமடா முன்னூறும் வெளிவிட் டோர்க்கு
மகத்தான ரிஷிகள் சொல்லுஞ் சாபந்தானே. 288

சாபமடா எழுபிறப்புந் தீர்க்கொண்ணாது
சண்டாளச் செனன மதாய்ப் பிறக்கும் ப்ாரு
பாபமடா அவன் குலங்க ளூமை யாகிப்
பழிப்பவர்க்குக் கண் குருடு சப்பாணி யாகிப்
போகமடா க்ஷயரோகங் குன்மங் காசம்
பொல்லாத நோய்களிலே யழுந்துவான் பார்
ஏகமடா என் குருவும் சிவனுஞ் சொன்னா
ரேழை மதிப் போகாதே நூல் கொடாதே. 289

கொடுக்காமல் வெகுபதனம் பண்ணிக்கொண்டு
குருபரனைத் தானினைந்து நூலைவைத்துத்
தடுக்காமற் பூசை பண்ணி அந்தி சந்தித்
தான்றொழுவாய் சிவன்பதத்தை நெஞ்சுள் வைத்துக்



கொடுக்காமற் குகைதனிலே தனித்திருந்துக்
குருவான முந்நூற்றை யவிழ்த்துப் பார்த்து
விடுக்காமல் ஞானநிலை கண்டு தேறி
வேதாந்தக் கருவை எல்லா மனதில் வையே. 290

வையடா சிவன் மேலே ஆணை ஆணை
மகத்தான சித்தர்கள் மேல் ஆணை ஆணை
பொய்யடா போகாது கணபதி மேல் ஆணை
புகழ்ப்பெரிய வள்ளி பங்கன் தன்மேல் ஆணை
நையடா நல்லோர்கள் பெரியோர்மேல் ஆணை
நான்சொன்ன சாபமெல்லாம் பலிக்கும் பாரு
தொய்யடா எந்தனிட முன்னூறு தன்னைத்
தொல்லுலகிற் பொல்லவர்க்குச் சொல்லொண்ணாதே. 291

## கருக்கிடை

சொல்லியதோர் கருவுக்கு நாமங்கோடிச்
சொல்லிவைத்தார் சித்த ரெல்லாங் கூடிக்கூடி
வல்லியதோ ரிக்கருவை மறந்தபேர்க்கு
வகையாக மாட்டாது தொழிலும் பொய்யாம்
மெல்லியதோ ரிது தொழிற்குப் புரைமோ ராகும்
வேதம் நின்று விளங்குவதிக் கருவினாலே
தெள்ளியதோர் நூல்களுக்குத் திறவுகோலாம்
சித்தர்சொன்ன மறைப்பெல்லாந் தெளிந்துபோமே. 292

தெளிந்துபோஞ் சிற்றண்டம் விந்து வாகுந்
தெளிவான பிரிதீவு நாதமாகும்
ஒழிந்துபோ மிரண்டினா லுலக வாழ்க்கை
உத்தமனே இரண்டு மொன்றாய்ச் சேர்ந்தபோது
வழிந்துபோ முருவாச்சு மண்பொன் ஆச்சு
மக்களே கற்பமுண்ண வலுவுமாச்சு
அழிந்துபோ மிக்கருவை விட்ட பேர்க்கு
ஆகாது ஜடலம் நிலையாதுடாரே 293

நிலையாது பிண்டமதை மறந்தபேர்க்கு
நிகழ்ந்ததொரு கங்கை யென்ற கன்னி நீராந்
துலையாது அன்னமயம் பூநீறாகுந்
துலங்குமடா பேரண்டம் வெள்ளைக் கல்லு

மலையாதே அமரி என்ற சிவனும் போகு
மாந்திரியக் கருவல்லோ கொடி நஞ்சும் மாவுங்
கலையாதே இக்கருவைச் சாஸ்திரங்க டோறுங்
காட்டினார் கருவென்று கோடி நாமந் தானே. 294

நாமந்தான் வெகு கோடி நாமமாகும்
நாதாக்கள் பலவிதமாய்ச் சொன்ன மார்க்கம்
சேமந்தா னுலகத்திற் சொன்ன வார்த்தை
சிறுமீன்தான் பெருமீனுக் கிரையாமென்று
வாமந்தான் மனுச் சொல்லக் கேட்டி லீரோ
மக்களே பிரபஞ்ச மாயை பொய்யாம்
சோமந்தான் ஞான வெள்ளம் நிஜமென் றெண்ணித்
துணிந்தவர்க்கு ஞான நிலை கைவசமாம் பாரே. 295

கைவசமா மூலகி லுள்ள பூடோ வேறாய்க்
கட்டுமடா இந்த உடல் கட்டா தப்பா
மெய்வசமாம் வாத முண்டு வயித்திய முண்டு
வேண அஷ்ட கர்மமுத லெல்லாமுண்டு
கைவசமா யுடல் கட்ட மாட்டா தப்பா
கட்டுமிக் கருவெளியாய்த் தோன்றா தப்பா
பொய்வசமாய்ச் சொல்லிவைத்தார் சித்த ரெல்லாம்
பூவினிட உப்பெடுத்து ஆடு வாரே. 296

பூவென்றால் மற்ற தெல்லாம் பூ வாமோ சொல்
புத்தி கெட்ட மாடே நீ பூநீர் கேளு
வேயென்றாற் சிவந்த கன்னி மாதஞ் சென்று
வெளியான நீரல்லோ பூநீராகும்
காமென்றால் காரமடா சாரமாகுங்
கட்டான வீர மல்லோ பூரமாகும்
நேமென்றா விதை விட்டாற் காரமில்லை
நின்றதொரு மாது நீர் தீபம் பாரே. 297

## மாற்றமை

பாரடா மறைப்பினிட மார்க்கந் தன்னைப்
பண்பாகச் சொல்லுகிறேன் சுளுவோ மெத்த
நேரடா கருங்கன்னிச் சாறு வாங்கி
நிழலிலே வைத்துலர்த்திக் காயவைத்துப்



பேரடா பேய்ப் பீர்க்கு மாமணக்கின் விரையும்
பிலமாகச் சரி இடையா யெடுத்துக் கொண்டு
தூரடா யிடித்து நன்றாய்த் தயிலம் வாங்கித்
தூர நீர் தனை விட்டு நன்றா யாட்டே. 298

ஆட்டையிலே பித்து மது கொஞ்சம் போட்டு
அப்பனே சந்திரன் றன் மெழுகும் போட்டுக்
காட்டையிலே கரும்பல்லி அண்டோட்டில் சுருக்கிக்
கண்மணியே மண் தவளை நெய்யுஞ் சேர்த்து
மூட்டையிலே யரைத்து நன்றாய் வழித்து வைத்து
முனையான வயிரவனைத் தியானம் பண்ணி
நாட்டையிலே புருவமதிற் றிலதம்போடு
நற்றுவா ரெவ்வெவர்க்கும் நாதன் நீயே. 299

நாதனென்ற சித்தர்கள் தான் ஆடும் மையை
நான் வெளியாய்ச் சொல்லி வைத்தே நன்றாய் தானும்
ஆதனென்ற ஆண்மஞ்சள் பெண் மஞ்சள் பார்த்து
அப்பனே கருத்தயில மிறக்கிக் கொண்டு
வேதனென்ற திகைப்பூச்சி அண்டோட்டில் கருக்கி
விள்ளுவாய்த் தயிலம் விட்டு நன்றா யாட்டிச்
சூதனென்ற சீலையிலே தடவிக் கொண்டு
சுருட்டடா திரி யதனை விளக்கிற் போடே 300

போட்டவுடன் அண்டோடு கவிழ்த்துமூடி
பொருந்தி நின்ற காராவின் நெய்யை விட்டு
வாட்டமுடன் கபாலத்திற் பற்றும் மையை
மைந்தனே சுரண்டி யதிற் றயிலம் விட்டு
நாட்டமுடன் சந்திரனென்ற மெழுகுங் கூட
நலமான பித்து மிட்டுப் புனுகு கூட்டித்
தேட்டமுட னரைத்து நன்றாய்ச் சிமிளில் வைத்துத்
தேவை என்ற பேர் நினைத்துத் திலதம் போடே. 301

போட்டவுட னுலக மெல்லாம் வணங்கும் பாரு
பொல்லாத துஷ்டரொடு மிருக மெல்லாம்
நாட்டமுடன் கைவசமே யாகும் பாரு
நவிலாத இக் கருத்தை வெளி விடாதே
கூட்டமிட்டுத் திருடாதே குறி சொல்லாதே
குணங்கெட்ட மாய்கைதனி லகப்படாதே
வாட்டமுடனிந்த மைப்போல் வசிகரங்கள்
வாயாது உலகமதில் வரிசை பாரே. 302

## அஞ்சனம்

வரிசையுட னஞ்சனத்தைச் சொல்லக்கேளு '
　　மைந்தனே பூமிநீர் கொண்டு வந்து
தெரிசையுட னரைத்து நன்றாய் வில்லை தட்டி
　　நினைவாகக் குழித்தயில மிறக்கிக் கொண்டு
பரிசையுடன் சந்திர னென்ற மெழுகும் போடு
　　பண்பான பித்துடனே கண்ணும் போடு
தரிசையுடன் தயிலமிட்டு ஆட்டி நன்றாய்த்
　　தந்தமென்ற சிமிளதனில் மூனு மையே. 303

மூனு மையும் வைத்து நீ பூசை பண்ணி
　　முன் சொன்ன மை யதற்கு வயிரவன்றன் பூசை
காணுமடா பின் சொன்ன வசிய மைக்குக்
　　கணபதியின் பூசை செய்து கருத்தாய் நில்லு
தோணுமடா அஞ்சனா தேவி பூசைச்
　　சொல்லியே ஆயிரந்தா னுருவுஞ் செய்து
வேணுமென்ற நேரமதிற் றொழிலைச் செய்வாய்
　　வேதமுறை தவறாமற் பலிக்கும் பாரே. 304

பலிக்குமடா சாஸ்திரத்தை வெளிவிடாதே
　　பாடியதோர் கரு வதனிற் பொருள் சொல்லாதே
கலிக்கு மடா தொழில்கள் சிவன் கருணையாலே
　　கடின மென்ற சித்தர்களாம் முனிவராலே
சொலிக்கு மடா உன்னாவி லீஸ்வரியாள் கிருபை
　　தோன்றுமடா சற்குருவு மொன்றாய்த் தோன்றும்
செலிக்குமடா நந்தி நான் சொல் முன்னூறு
　　செதி பெற்ற சூட்ச காரணமாய் முற்றே. 305

முத்தி பெறு ஞானறிவு தங்கி நின்று
　　மோட்ச நிலை தானறிந்து சித்தும் பெற்றுப்
பற்றிநின்ற சுடரொளியை பதிவாய்க் கண்டு
　　பழக்கத்தால் வாசி நின்ற தலமூங் கண்டு
சித்தி பெற்றக் கருவிளிட சூட்சங் கண்டு
　　தெளிந்த மதி மாயை விட்டுச் சிவமே என்று
சத்தி நின்ற இடங் காணப் பேறும் பெற்றுச்
　　சகல உயிர் தானாம் முன்னூறு முற்றே. 306

நந்தீசுர மஹாமுனிவர் அருளிச்செய்த கருக்கிடை - 300
முற்றிற்று.



## நந்தீசர் திராவகம்

காணப்பா விந்நூலில் தான் பத்துக்குள்ளே
　　கணக்காகத் திராவகங்கள் காட்டுகிறேன் கேள்
வாணப்பா சரியைகிரியை யோக கருமஞ் செய்வார்
　　வளமான சிவயோகி தர்மஞ் செய்வான்
மாணப்பா மடையர்களே அறிவாய்க் கேளு
　　மகத்தான சிவயோகி புத்திவானாம்
ஆணப்பா ரேசகத்தைக் கட்டினோர்கள்
　　அல்லவோ சிவயோகி யவர்தான் பாரே!

## சங்கு திராவகம்

பாரப்பா திரா வகந்தான் சொல்லக் கேளு
　　பண்பான சங்கு திராவகந்தான் சொல்வேன்
ஆரப்பா சங்குதான் பலமே பத்து
　　அப்பனே உடைத்ததனைத் தூளாய்ப் பண்ணி
வாரப்பா ஊசிநீர் தனைத் தெளித்து
　　வளமான வாலையில் தான் போட்டுக் கொண்டு
காரப்பா வாலையின் கீழ்தீயை மூட்டி
　　கண்மணியே தீபம் போல் எரித்திட்டாயே!
எரியவே தமர் வாயில் பீங்கான் வைத்து
　　என் ஐயா இளந் தீயாய் எரித்திட் டாக்கால்
வரியவே திராவகந்தான் பீங்கானில் வீழும்
　　வளமான திராவகத்தை சீசாவில் வைநீ
சரியவே தேவிக்கும் ருத்திரர்க்கும்
　　அப்பனே பூசை பண்ணி நைவேத்தியம் செய்து
மரியவே சோட சமாய்ப் பூரணத்தில் நின்று
　　மைந்தனே திராவகத்தைப் பதனம் பண்ணே

## வெடியுப்புத் திராவகம்

பண்ணடா வெடியுப்புத் திராவகந்தான் கேளு
　　பண்பான வெடியுப்பு பலமோ பத்து
அண்ணடா சோமநீர் தெளித் துலர்த்தி
　　அப்பனே வாலைதனி லிட்டுக் கொண்டு
வண்ணமாய்க் கமலம் போல தீஎரித்து
　　வளமான தமர் வாயில் பீங்கான் வைக்க
கண்ணடா கரகரென்று திராவகந்தான் வீழும்
　　கண்மணியே திராவகத்தைச் சீசாவில்வையே

## கல்லுப்புத் திராவகம்

வையடா பூரித்துப் பதனம் பண்ணு
வளமான திரா வகத்தை யென்ன சொல்வேன்
கையடா கல்லுப்பு திராவகந்தான் கேளு
கண்மணியே கல்லுப்பு பலமோபத்து
ஐயனே சுத்தஜலம் வார்த் தரைத்து
அழகான வாலையில்தான் இட்டுக் கொண்டு
மையடா தீமூட்டித் தீபம் போலே
மைந்தனே மாபீங்கான் வைத்துக் கேளே

## சீனியுப்புத் திராவகம்

கேளடா திராவகந்தான் கதிர்போல் வீழும்
கெடியான கல்லுப்புத் திராவகந்தான் மைந்தா
வாளடா சீசாவில்வைத்துப் பதனம் பண்ணு
வளமான திராவகத்தை என்ன சொல்வேன்
நாளடா சீனியுப்புத் திராவகந்தான் கேளு
நலமான சீனியுப்பு பலமோ பத்து
ஆளடா சோமநீர் வார்த் தரைத்து
அப்பனே வாலைதனில் போடு போடே

## கறியுப்புத் திராவகம்

போடவே தீபம்போல் தீதான் மூட்டி
புகழான தமர்வாயில் பீங்கான் வைத்து
ஆடவே கதிர்போலே திராவகந்தான் வீழும்
அப்பனே திராவகத்தைச் சீசாவிலூற்றி
வாடவே பூசித்துப் பதனம் பண்ணு
வளமான திராவகம்போல் எதுதான் உண்டு
நாடவே கறியுப்புத் திராவகந்தான் கேளு
நலமான கறியுப்பு பலம்தான் எட்டே
எட்டவே முத்துநீர் வார்த் திடித்து
என்மகனே வாலைதனில் போட்டுக் கொண்டு
கட்டவே தீமூட்டி எரித்திட்டாக் கால்
கண்மணியே திராவகந்தான் கதிர்போல் வீழும்
மட்டவே பீங்கானை வைத் தாயானால்
மைந்தனே திரா வகந்தான் இறங்கும்பாரு
வட்டவே சீசாவில் பதனம் பண்ணு
வளமான கல்லுப்புத் திராவக மாச்சே



## இந்துப்புத் திராவகம்

ஆச்சடா இந்துப்புத் திராவகம் கேளு
அப்பனே இந்துப்பு பலமோ பத்து
வாச்சடா பனிச் செயநீர் வார்த்திடித்து
வளமான வாலையில் தான் போட்டுக்கொண்டு
காச்சடா தீமூட்டிப் பீங்கான் வைத்துக்
கனமான நால் நாழி எரித்தால்கேளு
நாச்சடா திராவகந்தான் கதிர்போல்வீழும்
நலமான திராவகத்தைப் பதனம் பண்ணே

## வளையலுப்பு திராவகம்

பண்ணடா வளையலுப்புத் திராவகந்தான் கேளு
பண்பான வளைய லுப்பு பலமோ பத்து
அண்ணடா ஐங்கோலச் செயநீர் விட்டு
அப்பனே இடித்தது வாலையில்தான் போட்டு
கண்ணடா தீமூட்டிப் பீங்கான் வைத்து
கண்மணியே திராவகந்தான் வீழும் வீழும்
வண்ணடா திராவகத்தைப் பதனம் பண்ணு
வளமான தேவிக்குப் பூசை செய்யே

பண்ணப்பா திராவகம்தான் நீறும்போக்கு
பண்பான சரக்கு அறுபத்து நாலும்
அண்ணப்பா நவரத்தினம் நவலோகங்கள்
அப்பனே மலை குகைகள் காணப்போகும்
கண்ணப்பா அதரணத்துக் கிதுதான் வேணும்
கண்மணியே திராவகத்தின் பெருமை யெல்லாம்
மண்ணப்பா மனம்களித்து உனக்குச் சொன்னேன்
மகிழ்வான தன்வந்திரி பாரு பாரே!

சிவமயம்

## நந்தீசர் திருவாய் மலர்ந்தருளிய ஞானம் - 100

### காப்பு

பாரப்பா கணபதியின் கந்தன் பாதம்
பதிவாக யெந்நாளுந் தலைமேல் வைத்து
ஆரப்பா சூஸ்திர சாஸ்திரமுஞ் சொன்னேன்
அணுத் தொடுத்து மேருபறை யறைவேன் கேளு

நேரப்பா யென்னைப் போ லாருஞ் சொல்லார்
நிகத்தினிந் நூலைக் கண்ணில் காட்டார்
ஆரப்பா அவனியிலே கொடுக்கப் போறார்
ஆச்சரிய மிந் நூலைத் தெளிந்து பாரே. 1

## நூல்

தெளிந்து பார் சீஷ வர்க்க மறிந்து சேரு
திறமான கள்ளுண்ணுங் கபட்டுமாண்பர்
ஒளிந்து பார்த்தவன் மனதை நூறுதரஞ் சோதி
உள்ளன்பு மவனினைப்பு முறுதிபாரு
களிந்துபார் கள்ளுடனே கஞ்சா கொண்டால்
கண்ணிலே விழியாமல் கழிவாய்த் தள்ளு
குளிந்துபார் குருநிலையு மறிவுங் கண்டால்
குண முடையோனென்று சொல்லிக் குறுகுவித்தே. 2

வித்தான அகாரமதை முன்னே சொல்லு
விதமான மகாரத்தை பின்னே நாட்டு
சித்தான வகாரமதை திறக்க வென்றால்
திடம் பார்த்து உபதேசப் பொருளை ஈவாய்
முத்தான முத்தனவனென்றால் மவுனஞ் சொல்லு
முனையிலுள்ள வெழுத்தைந்தும் நிறுத்திக் காட்டு
பித்தான பித்தனென்றா லகலத் தள்ளி
பிசகாம லுன் மனதை யுள்ளேவையே. 3

வையப்பா சமாதியிலே சிகாரத்தை மூட்டு
வாங்கியே உகாரமதை பின்னேநாட்டு
பொய்யப்பா சொல்லவில்லை தீபஒளி காணும்
பிணங் காமல் சிலம் பொலியுங் காணலாகும்
ஐயப்பா யிவை யெல்லாஞ் சித்தர் பாடார்
அரனெனக்குச் சொன்ன வித்தை யானுஞ் சொன்னேன்
தையப்பா செவி ரண்டுந் தாள் திறந்து போகுஞ்
சச்சிதானந்த வெளி சாரலாமே. 4

சாரலாம் போகாது ஞானம் பார்த்தால்
தப்பாது அறிவங்கே பரகதியில் பற்றும்
கூறலா மனமதுவுங் குவிந்து நின்றால்
குற்றமற்ற வாசியது நிலைத்துப் போகும்



ஆரப்பா இந்த முறை சொல்லப் போறார்
ஆருக்குங் கிட்டாது அதீத வித்தை
ஊரெல்லாந் திரிந்தாலும் காணமாட்டாய்
உற்பனமாய் யென்னுடைய நூலைப்பாரே. 5

நூல் பார்த்துக் கால் பார்த்து நுணுக்கம் பார்த்து
நுண்மையாய் காலவரை யறிந்து சேர்ந்து
பால் பார்த்து ருசி பார்த்து பரத்தைக் கண்டு
பதறாமல் மனத்தை யங்கேக மூட்டிக் கொண்டு
கோல் பார்த்து கொங்கணவர் நூலைப்பார்த்து
திறமாகச் சிதம்பரத்தின் நடனங் கண்டு
வால்பார்த்து தலையிருந்த விடத்தைப்பற்றி
மைந்தனே வாசியிலே வருவாய்நீயே. 6

நீயான சேதிதனை சொல்லக் கேளு
நிலையான அரனெதிரில் ரிஷபமானேன்
தாயான உமையவளுக் கருளுமுன்னே
தந்தை அரனெனக்கு உபதேசித்தார்
காயான பழமானேன் முன்பூசை பெற்றேன்
கருணையுள்ள அட்டபால் கறக்குமுன்னே
சேயானேன் சிவனுக்கும் உமைக்குமுன்னே
தீபவொளி கண்டிட்டேன் திறம் பெற்றேனே. 7

திறம் பெற்றேன் பொன் முசுட்டை கொண்டு வந்து
தீர்க்கமா யறைத்துவடி குகையாய்ச் செய்து
அறம் பெற்ற செம்புதனை குகைக்குள் வைத்து
அப்பனே குகைமூடி முழப்புடத்திற் போடு
நிறம் பெற்ற பெரியோர்கள் கண்ட வித்தை
நிலையாக வுந்தனுக்கு நிகழ்த்த லுற்றேன்
சிறந் தருளும் ஞானமுதல் யோகம் வாதஞ்
சித்தர் சொன்ன மறைப்புகளையும் திறந்திட்டேனே. 8

திறந்திட்டேன் அரப் பொடியைக் கொண்டு வந்து
சிவமூலி சாறு விட்டுப் பசுமையாக்கி
கறந்திட்ட பாலை விட்டுப் பதமே பார்த்துக்
களிம்பற்ற உடனெடுத்துச் சுத்தி செய்து

நிறைந்திட்ட கைதோணி யரைத்து வட்டில்
நிமிஷத்திற் கடையென்னும் புடமே போட
உரைந்திட்ட செம்புதான் பதனம் பண்ணு
உண்மையடா ஒருவருக்கும் வெளிவிடாதே. 9

வெளி விடாதடக்கி வைத்தே யென்பேர் சொல்லி
விதமாக வெட்டிலொன்று ஈந்தாயானால்
ஒளிவிடா வெட்டரை யுந் தப்பாதப்பா
ஒரு க்ஷணத்திலே சிவப்பதுதா னப்பா பாரு
அளி விடாதிந்த முறை சித்தர் சொல்லார்
அப்பனே சுந்தரா னந்தர் சொன்னார்
தெளிவிடா நூற்றிலே யுற்றுப்பாரு
உள்ளே யொருவருக்கு முரைத்திடாதே. 10

## கருவங்கபற்பம்

உரைத்திடா கருவங்கத் தனை யெடுத்து
உத்தமனே தகடுதட்டிச் சுருட்டி வைத்து
வரைத்திடா வெள்ளாவி கிழங்குதன்னை
விதமாக அரைத்துவட்டக் குகையுஞ்செய்து
கரைத்திடாக் குகைக்குள்ளே வங்கம்வைத்து
கல்மிஷங் களில்லாமல் சீலைசெய்து
புரைத்திடாக் காடையென்ற புடத்திற் போடப்
புகையற்ற நீறதுதான் புகழ்ந்துபாரே. 11

பாரப்பா வங்கநீர் சிமிழில் வைத்து
பக்குவமாய்க் கணபதியைப் பூசை செய்து
ஆரப்பா கந்தனது நாமஞ் சாற்றி
அரதேசிபர தேசிக் கன்ன மீந்து
ஊரப்பா ஊரிலுள்ள மனிதருக்கு
உத்தமனே குற்றமது வந்துதானால்
தீரப்பா மஞ்சாடி நீரெடுத்து
திட்டமாய் வெல்லத்தில் தின்றுபாரே. 12

தின்றுபார் குன்மமெங்கே மேகமெங்கே
திடம்பெற்ற சூலையெங்கே வாதமெங்கே
கழன்றுபார் கரப்பனெங்கே வாதமெங்கே
கழன்று போ மூதிரத்தின் நோய்களெல்லாம்



வென்றுபாரவரவர்கள் சொன்னாற் போலே
வெறும் பேச்சி யென்றுநீ விட்டாயானால்
கொன்றுபார் பாரதிலே மாண்டு போவாய்
குன்மமது கொன்று விடுங் குன்றியிதாமே. 13

## வெள்வங்க பற்பம்

குறியான வெள்வங்கத் தனை யெடுத்து
குறியாகத் தகடு தட்டி ஈச்சிறகு போல்
நெறியான சிவப்பாலிக் கிழங்கு தன்னை
நிசமாக அரைத்து வட்டில் குகைக்குள் வைத்து
அமுர்தமென்ற ரசமதனை யெடுத்துக் கொண்டு
ஆவின் பால் விட்டரைத்துப் புடமே போட
சுகிர்த மென்ற சிந்தூரம் பதனம்பண்ணி
சூட்டியே சிவன் வேம்புத் தயிலந்தன்னில்
நிகர்தமென்ற பணவிடையே தின்றுபாரு
நிட்சயமாய் பறங்கியரை யாப்பு போச்சு
துகிர்த மென்ற தாமரைமுள் நாபிமுன் போச்சு
தப்பாது இந்தமுறை செய்துப்பாரே. * 14

செய்யப்பா இந்த முறை செய்தாயானால்
பாரிலே யுழன்றலையும் வயித்தியன் வந்து
ஐயப்பா சரணமென்று பணிவான் பாரு
அவனைநீ தள்ளிவிடு தோஷந் தோஷம்
வையப்பா வயித்தியமுறை தனக்கே கேளு
நிச்சயமாய்ச் சொன்னாக்கால் கோடிக்கொன்று
மெய்ய்ப்பா வயித்தியன்றன் முறையைக் கேளு
உருவென்னும் வித்தை யெல்லாங் காட்டுவேனே. 15

காட்டுவேனடுக்கதுதான் செப்புத் துண்டு
கவனமடா முயிற்செம்பு திரிமூர்த்தி மூலம்
காட்டுவேனிரண்டான செம்பு தானும்
- தகங்கை குமுர்த கங்கை ஆகாச மூலி
கரியான மண்ணரைத்து சீலை செய்து
கருவாகக் காடையென்ற புடத்திற் போட்டு
உரியான நீறதனை யெடுத்து நீயும்
உற்பனமாய்ப் பதனமதாய் வைத்துக்கொள்ளே. 16

கொள்ளப்பா நீறதனை குன்றி விதங்
குணமான சர்க்கரையில் கொண்டாயானால்
எள்ளப்பா தேகத்தில் ரோகமெல்லாம்
இணங்காமலோடி விடும் ஈசனாணை
தள்ளப்பா மனதிலுள்ள அழுக்கை யெல்லாந்
தர்மத்தை நெகிழாமல் சார்ந்து நில்லு
உள்ளப்பாயீதலொடு இரக்கம் வேணும்
உண்டான ரோகமெல்லா மோடிப் போமே. 17

ஓடிப்போம் வாசியென்னும் ரசத்தைக் கட்ட
ஒருமூலி சொல்லுகிறே னுறுதி கேளு
தேடிப்போய் திருகுகள்ளி தன்னைப் பாரு
திறமாக வயது சென்ற கள்ளியாக
கூடிப் போயம் மூட்டில் குடைந்து நீயுங்
குழியாக ரசமதனை வார்த்துமூடி
ஆடிப் போய் மண்டலமே சென்றுதானால்
அதையெடுத்து நீபாரு அமூர்தமாமே 18

மூட்டுவேன் மூன்றாவ தென்ன வென்றால்
மூலமது சிறு மூலங் கணேசன் மூலம்
நாட்டுவேன் நாலாவ தென்ன வென்றால்
நாரணனும் நாரணனும் மிருந்தார் பாரே. 19

பாரப்பா ஐந்தாவ தென்ன வென்றால்
பராபரையின் பூரணமா மந்த வட்டம்
ஓரப்பா ஏரையென்ற சாரனையே நாதன்
உன்னானே பையதுதான் உமையாள் பாதம்
காரப்பா குளிகை யெல்லா மனந்த மூலம்
அழகான செந்தூரம் பற்பமெல்லாம்
தாரப்பா தயிலவகை குழம்பு தானும்
திறமான சிதம்பரத்தின் பூசையாமே 20

பூசையென்ன சிவன்பூசை பரையின்பூசை
சொல்லறிய நாதாக்கள் சொன்னபூசை
பூசையென்ற போகாது ஞானம் பாரு
பதறாம லென் னுடைய நூறும் பாரு
பூசையென்ன மகாரத்தை மூட்டிப்பாரு
அப்பனே சிலம்பொலியுங் கேட்கும் பாரு
பூசையென்ன தோடாதே தர்மத்தோடே
பார்த்து சாஸ்திரங்கள் கனித்துக் கேளே 21



கேளப்பா அகாரமது அதீத வித்தை
கெடியான மகாரமது பரையின் வித்தை
தேளப்பா கொட்டினது போலே காணும்
சிகாரமடா சொல்லுகிறேன் சணத்தி லேறும்
ஆளப்பா வகாரவித்தை யோகத்துக்கெல்லாம்
அளவிறந்த வித்தையெல்லா மாடும் பாரு
கேளப்பா வாகாது விந்த நூற்றைக்
கொடுக்காதே ஒருவருக்குங் குருவின்னாணை 22

குருவாணை உமையாணை சாரையினாணை
குற்றமற்ற சிவனாணை கணேசனாணை
கருவாணை உபதேசக் கண்ணனாணை
காட்டாதே யிந்நூலை யொரு வருக்கும்
உருவாணை யொரு வித்தை தப்பாதப்பா
உண்மையாய்ச் சொல்லி விட்டேனுனக்கு மைந்தா
தருவான மச்ச முனி நூறும் பார்த்துத்
தாண்டி நில்லு வரையொக்கக் கடந்து நில்லே 23

நில்லென்று சித்த ரெல்லாம் சொன்னாற்போலே
நிசமல்ல வென்றுநீ விட்டிடாதே
கல்லென்ற தேகமது தங்கம் போலாங்
கற்பமது தின்றுவரக் கபடில்லாமல்
நல்லதென்று மனது வைத்தா லுண்மையாகும்
நாயகனே கருவிடமாய் நாடி நின்று
புல்லரைப் போ லலையாதே கர்மியாவாய்
புத்தியுள்ள கண்மணியே புகலக்கேளே 24

கேளப்பா என்னுடைய உபதேசங்கேள்
கெடியான வித்தை யெல்லாம் பலிக்கும்பாரு
தாளப்பா குருவினது பதம் பூசித்து
அவருக்கு மனதுவர நடந்து கொள்ளு
கேளப்பா சாஸ்திரத்தை யொருவர்க்கீந்தால்
துன்பம் வந்து லபிக்குமடா சித்தியாக
நாளப்பா தலையதுதான் தெறித்துப் போகும்
நலமான சித்தர்கள் தூஷிப்பாரே 25

சித்தர ரெல்லாம் பழிப்பார்கள் மடசித்தனென்று
தினந்தோறுங் கோபிப்பார் சாபமெய்தும்
முத்த னென்ற சொல் வேணு முபதேசங்கத்தால்
மூடனென்று சொல்லாமல் முதியோ னென்பார்
உத்தமமாஞ் சாஸ்திர சூஸ்திர மூமெய்தும்
உளமை வெள்ள முண்ணலா மூடனேபாரு
பித்தனென்று பேராகு மூலகத்துள்ளே
தோஷங்கள் வாராது கண்டு பாரே. 26

பாரப்பா உகாரமது விந்துவாகும்
பாங்கான மகாரமது சத்தியாகும்
ஆரப்பா அகாரமது மூலமாகும்
அப்பனே சிகாரமது வன்னியாகும்
சீரப்பா வகாரமது வாசியாகும்
திறமான ஓங்காரம் நடுமையாகும்
ஊரப்பா ஊமையென்ற வெள்ளங் கொண்டால்
உடலதுவும முத்தமாய் பெலக்கும்பாரு 27

பெலக்குமடா வங்கென்று இடக்கலையில் மூட்டி
பிசகாமல் சிங்கென்று நடுவே மூட்டு
நலக்குமடா சுழிமுனையி லங் கென்றூது
தப்பாது ரேசித்தும் பூரித்து நில்லு
துலக்குமடா ஓங்காரங் கொண்டுயேறு
சொல்லாதே கயிலாசந் தேகமாகும்
கலக்குமடா யிம்மூட்டு நல்லமூட்டு
கனமான வாசியிலே யிருந்து பாரே 28

இருந்துபார் பெரியோர்கள் பாதங்கண்டு
இடைகலையும் பின்கலையும் மிரண்டுங்கட்டி
பரந்து பார் சுழிமுனையை நடுவே மூட்டிச்
சொல்லாதே அங்கென்று சுழியிலேறி
சுரந்துபார் மூலமென்று யெழுத்தை நாடி
சிகாரமென்ற வாலயிலே மகிழ்ந்து நின்று
தெரிந்துபார் சிகாரமென்ற ஐந்தெழுத்துந்
தெரிசிப்பாய் சிகாரவரை தெரிசிப்பாயே 29

தெரிசிப்பாய் யெட்டெழுத்தும் ஒன்றதாகத்
தீபவொளி காணுமடா க்ஷணத்திலேதான்
மரிசிப்பாய் மூன்றெழுத்தும் ஒடுங்கி நிற்கும்
மகத்தான சித்தரெல்லா மெழுத்தைச் சொல்லார்



பரிசிப்பாய் சிங்குவங் இரண்டுஞ் சொல்லார்
பாங்கான குண்டலியும் யோகம்பாரு
அரிசிப்பாய் அரியெழுத்து சோதியாகும்
அக்கினியின் சுருபமதை யறைகிறேனே 30

அறைகிறேன் அறுகம் வேறு பலந்தானொன்று
அப்பனே மிளகதுதான் நூற்றெட்டாகு
மறைகிறேன் சீரகந்தான் முக்கழஞ்சு
பாங்காக மூன்று மொன்றாய் நறுக்கியிட்டு
நறைகிறேன் மூன்றுபடி வெள்ள நீரில்
நேராக முக்கலாய் குறுக்கிப் பின்பு
வறைகிறேன் வெருகடி வெண்ணெ யிட்டுக்
காமல் குடித்துவிடு குணமுண்டாமே 31

உண்டான குணமதுதான் சொல்லக் கேளு
உஷ்ண த்தின் காந்த லெல்லா மோடிப் போகும்
பண்டான மேகமது பறந்து போகும்
பாரப்பா கண் குளிருந் திரேகம் பொன்னாந்
துண்டான தேகமது இறுக்கிக் காணுஞ்
சொல்லாத ஆனந்தத் துலக்கமாகுந்
தண்டான விந்திலே தாது நிற்கும்
தப்பாது யிந்த முறை சார்ந்துபாரே 32

## ஆரோக்கியத் தைலம்

சார்ந்து பார் தலைமுழுக்கு விபரங்கேளு
தப்பாது நெல்லியொரு மிளகு மஞ்சள்
கூர்ந்து பார் வேப்பரிசி கடுக்காயோடு
குறையாம லமுரியாலே குளிரப்போட்டு
ஆர்ந்து பாராவின் பால் விட்டரைத்து
அப்பனே அக்கினியில் வைத்து வாங்கித்
தேய்த்து பார் சிரசிலே சீராய் தேய்த்துத்
திரமாக சுவடுவென்னீர் முழுகுவாயே 33

முழுகிவர மண்டலத்தில் தேகங்கெல்லாம்
முக்கியமாய் வாதபித்தம் நிலையில் நிற்கும்
முழுகிவர ஆவின்னெய் கூட்டிவாநீ
கமல மெனக் கண்குளிரும் விந்துகட்டும்

முழுகிவரப் பிண்ணாக்கார் ஞானம் நூற்றில்
புகழ்பெறவே கற்பமுறை பாடி வைத்தார்
முழுகிவர முறைகள் தவறாமல் செய்தால்
தங்கமடா தேகமது நோய்வராது

## சாரணை மூலி

வாராது சாரணை வேர் பலந்தான் ரெண்டு
மைந்தனே கொண்டுவந்து துண்டாய்வெட்டி
வேராகும் வெள்ளாட்டுப் பாலாலூட்டி
வெதும்பி வைத்து நிழலுலர்த்தி சூரணமேசெய்து
ஆறாகுந் திப்பிலியின் பொடியுங் கூட்டி
அதிலிஞ்சிச் சாறூட்டிக் குழம்பதாக்கிச்
சீராகச்சீனிலே கழஞ்சு சேர்த்து
தின்றுவர வாயுவுடன் குன்மம் போச்சே. 35

போச்சப்பா மேகமொடு சூலைவாதம்
போகாத குத் துளைச்சல் மாண்டு போச்சு
ஆச்சப்பா யிந்நூலை வெளிவிடாதே
ஆச்சரியஞ் சிவன் சொல்ல யானுங் கேட்டேன்
மாச்சப்பா உற்றிடத்தே சிவன் முத்தி
முக்கியம டாயிது யோக மதீத யோகம்
காச்சப்பா காலரை யாருஞ் சொல்வார்
கணக்கறிந்து ரோமரிஷி காட்டினாரே. 36

## யோகம்

காட்டினார் முதல் வீடு சந்திரன் வீடு
கட்டாக நடு வீடு ஆதித்தன் வீடு
மூட்டினார் ஒடுக்கமது சூரியன் வீடு
மூக்கியமடா மூன்றுக்கும் பலமே தென்றால்
நாட்டினார் சுழிமுனையு மிடை பின் கலை மூன்று
நன்றாக வித்தையறிந்து வாசிப்பார்த்து
பூட்டினார் பூட்டெல்லாம் பூரணத்தில்
புகழ்பெறவே சித்தரெல்லாம் புகழ்ந்திட்டாரே. 37

வாழ்ந்திட்டார் பொதிகையிலே அகாரங் கொண்டு
வாழ்வான மச்சமுனி உகாரங் கொண்டு
தாழ்ந்திட்டார் கோரக்கர் வகாரங் கொண்டு
தருவான கருவூரார் மகாரங் கொண்டு



விழ்ந்திட்டார் கமலமுனி சிகாரங் கொண்டு
விதமான சுந்தரும் நகாரங் கொண்டு
போழ்ந்திட்டார் போகருமே யகாரவித்தை
பொன் பூட்டி விட்டாப் போல் புகழ்ந்திட்டாரே. 38

## தாம்பிர பற்பம்

புகழ்ந்திட்ட சிவந்த கொடி வேலி தன்னை
பொன்போலே கொண்டுவந்து அரைத்துருட்டி
புகழ்ந்திட்ட குகைபிடித்து செப்பு வைத்து
அப்பனே குகை மூடி சீலை செய்து
புகழ்ந்திட்ட புடம் போட நீறிப் போச்சு
பொன் போலே யெடுத்துநீ பதனம் பண்ணு
நிகழ்ந்திட்ட யெட்டி லொன்று ஈந்தாயானால்
நல்ல தொரு பொன்மாற்று ஆறுமாச்சே. 39

## தங்க பற்பம்

ஆச்சப்பா தங்க பற்பஞ் சொல்லக்கேளு
அரகரா கவழ் தும்பை யகப்பட்டாக்கால்
பேச்சப்பா பேசாதே பிடுங்கி வந்து
பிசகாம லரைத்துருட்டி குகை பிடித்து
தாச்சப்பா தங்கமதைத் தகடு தட்டி
நிமிஷத்தில் குகையில் வைத்து சீலை செய்து
காச்சப்பா காடை யென்ற புடத்திற் போடப்
கணிதமாய் நீறுமடா யெடுத்து வையே. 40

வையப்பா சிமிழியிலே பதனம் பண்ணி
வைத்துக் கொள் ளொருவருக்குங் கொடுத்திடாதே
எய்யப்பா யெந்தெந்த நோய் வந்தாலும்
இட்டுவிடு குன்றி யிதை யனு பானத்தில்
தையப்பா தேகமது சொர்ணமாகும்
தப்பாது ஆவினது நெய்யிற் கொண்டால்
பொய்யப்பா சொல்லவில்லை அரனெனக்குப்
பூட்டினார் செவியிலுப தேசந்தானே. 41

உபதேசம் வேணு மென்று யானுங் கேட்டேன்
உண்மையாய் எனக் கருளித் தந்தார் ஈசன்
அவதேச மரனெனக்குச் சொல்லவில்லை
ஐயனே கருக்கிடையுங் குறுக்கிடையுஞ் சொன்னார்

குவதேசக் குகைகாட்டி ஆறுதலங் காட்டி
குண்டலியின் தீபமதைத் திறந்துகாட்டிப்
பவதேசப் பச்சிலையுந் தொட்டுக் காட்டிப்
பாத்தினது வடிவெல்லாம் வெளியிட்டாரே. 42

வெளிவிட்டா ரெந்தனுக்கு அரன்றானப்போ
வெட்ட வெளியாகவே யானுஞ் சொன்னேன்
தளிவிட்டார் சித்த ரெல்லா மொளித்துப் போட்டார்
தயவாக இந்நூலை வெளிவிடாதே
அளிவாக ஞானமதை வெளி விட்டாக்கால்
அந்தரமா மிடிவிழுந்து தலை தெறிக்கும்
வெளிவிட்டார் பாதைக்கு யிதுதானென்று
வைத்துக் கொண்டெந்தனது பேர் சொல்வாயே. 43

சொல்லியே மலைதோறும் திரிந்தா யானால்
சுருக்காக சித்தர் வந்து உன்னைக் கேட்பார்
கல்லியே பசிதீர்ப்பார் குகை காண்பிப்பார்
காட்டமா லவரறிந்த வித்தை யீவார்
அல்லியே அவர் புத்தி உன்னைக் கேழ்ப்பார்
ஆச்சரிய முபதேசங் காதிலீவார்
புல்லியே மனமறிந்து பொருளைத் தந்து
போமென்று பாதையிலே விடுவார் பாரே. 44

## கடலாடி கற்பம்

பாரென்று ஒருமூலி சொல்லக்கேளு
பக்குவமாய்க் கடலாடி கருத்திருந்தால்
ஆரென்று அம்மூலி சமூலம் வாங்கி
அரைத்துருட்டி வெண்ணெயிலே கொண்டாயானால்
ஊரப்பா வயதுதா னிறுனூறாகும்
வாய் வித்தையெல்லாங் கைக் குள்ளாகும்
ஊரப்பா யிருந்தாலென் காட்டில் வாழ்ந்தென்
உறுதியாய் கற்பமுண்டு அறிந்து தேறே. 45

## குழந்தைகளுக்கு மாதளை நெய்

தேறவே யின்ன மொரு கருவைக் கேளு
சிவனெனக்குச் சொன்னபடி செல்வேனப்பா
ஆரவே மாதளையின் சமூலம் வாங்கி
அமுர்த சர்க்கரை சேர்த்துக் குழம்பதாக்கி



ஊரவே ஆவின்னெய் கூடச் சேர்த்து
உறப்பாகப் பக்குவமாய்க் கிண்டி வைத்து
கூறவே ஜாதிக்காய் பத்திரியுங் கூட்டி
கூடவே எலரிசி கூர்ந்து போடே. 46

போட்டதனை யனலில் வைத்து வெதுப்பி நீதான்
புனிதமுடன் மெழுகுபதம் வடித்துக் கொண்டு
நாட்டதனை குழந்தைகட்குக் கரண்டி கொண்டால்
நகமுமடா நோய்களெல்லா மண்டலத்தில்
பூட்டதனை யொளியாமல் மறைப்பையெல்லாம்
புத்தியாய்ச் சொல்லி விட்டேன் புகழ்ந்து பாரு
தேட்டதனைத் தேடாதே நெய்யைத் தேடு
திறந்துவிட்டேன் குழந்தைகட்கு இது நெய்தானே. 47

நெய்யதனைக் குழந்தைகள்தான் கொண்டு தானால்
நேரான கண்ரோகம் பதினெட்டும் போம்
பொய்யதனைச் சொல்லவில்லை தோஷம் போகும்
புதுமையுள்ள வயிற்றிரைச்சல் கழிச்சல் போகும்
பையவே மதலை கட்குங் கொடுக்கலாகும்
பருவமுள்ள குழந்தைகட்குங் கொடுக்கலாகும்
மெய்யிதனை யொளியாமற் சொல்லி விட்டேன்
ஒருவருக்குஞ் சொல்லாம லொளித்து வையே. 48

## பொன்னா வாரை சூரணம்

வையப்பா பொன்னினா வரையின் மூலம்
வரிசையாய்க் கொண்டு வந்து நிழலுலர்த்தி
கையப்பா சூரணித்து வண்டு கட்டி
கனத்ததொரு சிறு தேனில் கொண்டாயானால்
ஐயப்பா யீளை யொடு இருமல் போச்சு
இதமான சொறி சிரங்கு தமுவணையும் போச்சு
மய்யப்பா மண்டலமே கொண்டு வந்தால்
தகமுமடா தேமல் தமுவணையும் போமே. 49

போமதுதான் புரைசூலை கிரந்தி ரோகம்
புழுக்கள் வண்டு கடி பிரிந்து போகும்
ஆமதுதானரையாப்பு குடியே போகும்
அகத்திலுள்ள நோய்களெல்லா மகன்று போகும்

குவதேசக் குகைகாட்டி ஆறுதலங் காட்டி
குண்டலியின் தீபமதைத் திறந்துகாட்டிப்
பவதேசப் பச்சிலையுந் தொட்டுக் காட்டிப்
பாத்தினது வடிவெல்லாம் வெளியிட்டாரே. 42

வெளிவிட்டா ரெந்தனுக்கு அரன்றானப்போ
வெட்ட வெளியாகவே யானுஞ் சொன்னேன்
தனிவிட்டார் சித்த ரெல்லா மொளித்துப் போட்டார்
தயவாக இந்நூலை வெளிவிடாதே
அளிவாக ஞானமதை வெளி விட்டாக்கால்
அந்தரமா மிடிவிழுந்து தலை தெறிக்கும்
வெளிவிட்டார் பாதைக்கு யிதுதானென்று
வைத்துக் கொண்டெந்தனது பேர் சொல்வாயே. 43

சொல்லியே மலைதோறும் திரிந்தா யானால்
சுருக்காக சித்தர் வந்து உன்னைக் கேட்பார்
கல்லியே பசிதீர்ப்பார் குகை காண்பிப்பார்
காட்டமா லவரறிந்த வித்தை யீவார்
அல்லியே அவர் புத்தி உன்னைக் கேழ்ப்பார்
ஆச்சரிய முபதேசங் காதிலீவார்
புல்லியே மனமறிந்து பொருளைத் தந்து
போவென்று பாதையிலே விடுவார் பாரே. 44

## கடலாடி கற்பம்

பாரென்று ஒருமூலி சொல்லக்கேளு
பக்குவமாய்க் கடலாடி கருத்திருந்தால்
ஆரென்று அம்மூலி சமூலம் வாங்கி
அரைத்துருட்டி வெண்ணெயிலே கொண்டாயானால்
ஊரப்பா வயதுதா னிருனூறாகும்
வாய் வித்தையெல்லாங் கைக் குள்ளாகும்
ஊரப்பா யிருந்தாலென் காட்டில் வாழ்ந்தென்
உறுதியாய் கற்பமுண்டு அறிந்து தேறே. 45

## குழந்தைகளுக்கு மாதளை நெய்

தேறவே யின்ன மொரு கருவைக் கேளு
சிவனெனக்குச் சொன்னபடி செல்வேனப்பா
ஆரவே மாதளையின் சமூலம் வாங்கி
அமுர்த சர்க்கரை சேர்த்துக் குழம்பதாக்கி



ஊரவே ஆவின்னெய் கூடச் சேர்த்து
உறப்பாகப் பக்குவமாய்க் கிண்டி வைத்து
கூறவே ஜாதிக்காய் பத்திரியுங் கூட்டி
கூடவே ஏலரிசி கூர்ந்து போடே. 46

போட்டதனை யனலில் வைத்து வெதுப்பி நீதான்
புனிதமுடன் மெழுகுபதம் வடித்துக் கொண்டு
நாட்டதனை குழந்தைகட்குக் கரண்டி கொண்டால்
நகழுமடா நோய்களெல்லா மண்டலத்தில்
பூட்டதனை யொளியாமல் மறைப்பையெல்லாம்
புத்தியாய்ச் சொல்லி விட்டேன் புகழ்ந்து பாரு
தேட்டதனைத் தேடாதே நெய்யைத் தேடு
திறந்துவிட்டேன் குழந்தைகட்கு இது நெய்தானே. 47

நெய்யதனைக் குழந்தைகள்தான் கொண்டு தானால்
நேரான கண்ரோகம் பதினெட்டும் போம்
பொய்யதனைச் சொல்லவில்லை தோஷம் போகும்
புதுமையுள்ள வயிற்றிரைச்சல் கழிச்சல் போகும்
பையவே மதலை கட்குங் கொடுக்கலாகும்
பருவமுள்ள குழந்தைகட்குங் கொடுக்கலாகும்
மெய்யிதனை யொளியாமற் சொல்லி விட்டேன்
ஒருவருக்குஞ் சொல்லாம லொளித்து வையே. 48

## பொன்னா வாரை சூரணம்

வையப்பா பொன்னினா வரையின் மூலம்
வரிசையாய்க் கொண்டு வந்து நிழலுலர்த்தி
கையப்பா சூரணித்து வண்டு கட்டி
கனத்ததொரு சிறு தேனில் கொண்டாயானால்
ஐயப்பா யீளை யொடு இருமல் போச்சு
இதமான சொறி சிரங்கு தழுவணையும் போச்சு
மய்யப்பா மண்டலமே கொண்டு வந்தால்
தகழுமடா தேமல் தழுவணையும் போமே. 49

போமதுதான் புரைசூலை கிரந்தி ரோகம்
புழுக்கள் வண்டு கடி பிரிந்து போகும்
ஆமதுதானரையாப்பு குடியே போகும்
அகத்திலுள்ள நோய்களெல்லா மகன்று போகும்

தாமதுதான் வெளியாகச் சொல்லி விட்டோம்
நாதாக்கள் நூல்தோறு மொளித்தார் பாரு
தாமதுதானல்லோர்க்கு கொடுத்தாயானால்
தப்பாது இந்த முறை சார்ந்து பாரே. 50

### மவுனம்

பாரப்பா மகாரமது யோக வித்தை
பதிவான மவுன மதை சொல்லக் கேளு
ஆரப்பா அகாரமது நாத வித்தை
அதீதமாம் உகார வித்தை யறிந்து பாரு
சீரப்பா வகாரவித்தை வாசியோகஞ்
சிதம்பரத்தின் சிலம் பொலியுங் காதிற் கேட்டோம்
காரப்பா நகாரமது சோதி வெளியாகும்
கட்டாகாலிருந்த விடத்தைப் பார்த்தே. 51

### நத்தைச் சூரி மூலிகை

பார்த்தொரு சூரி வேர் கொண்டு வந்து
பசுமையாயரைத்ததனை யாவின் பாலில்
சேர்த்ததனை பாகமாய் கலக்கிக் கொள்ள
செயமாச்சு உடம்புக்க வலுவுமாச்சு
பூத்ததனை பூதகணம் பிடித்து தானால்
பொடியாகப் பறந்து விடும் பேய்களெல்லாம்
நீத்ததனை கிராணியொடு கழிச்சல் போகும்
அப்பனேயிதை யறிந்து உள்ளே கொள்ளே. 52

### கொடுப்பை நெய்

கொள்ளப்பா கொடுப்பைதனை கொண்டுவந்து
குமுறவே யரைத்ததனை மிளகு சேர்த்து
அள்ளவே சீரகமுங் கூடப் போட்டு
ஆவிநெய்யரைப்படியில் வெந்திறித்து
மெள்ளவேதான் குடிக்க மேகம் போச்சு
வெட்டையொடு சொறி சிரங்கு வெண்டுபோச்சு
கள்ளமே சொல்லவில்லை மெய்யே சொன்னேன்
கல்மிஷங் களில்லையடா கண்டு பாரே. 53



கண்டு பாரிடகலையா வாசியென்பார்
கனத்ததொரு பின்கலையை நாதனென்பார்
விண்டு பாரிட கலையை விந்து மென்பார்
விள்ளாதே சத்தியைத்தான் பரம தென்பார்
உண்டு பார் சுழிவட்ட மூண்மையென்பார்
ஊமை யென்று மட்சரத்தை மவுனமென்பார்
கொண்டு பாரிந்த வித்தை சித்தர் பாடார்
கொங்கணவர் ஞானத்தைக் கூர்ந்து பாரே. 54

கூர்ந்துபாரெட்டும் ரண்டும் அகாரமாகுங்
குறிப்பான அரியெழுத்து ராஜாவாகும்
தேர்ந்து பார் வகாரமது குண்டலியின் யோகம்
சிறப்பான நாதவிந்து வாசியாகும்
ஆர்ந்து பார் அவ்வும் உவ்வும் வெளியிற் நிற்கும்
ஆச்சரியம் குருவருளால் காணவேணும்
தீர்ந்துபா ருன்மனது பூரணத்தில் வந்தால்
தீபவொளி சிலம் பொலியைக் காணலாமே. 55

காணலாம் பரமேது என்று கேட்கில்
காட்சியிருளற்ற விடம் பரமதாகும்
தோணலா சுழி முனைதா னெவ்விட மென்றால்
சோதி வெளி வட்டமென்றுஞ் சொல்லாகும்
ஆணலாமானுவந்தா னேதோ வென்னில்
அறைகிறேனாண வமுங் குரோதமாகும்
வீணி தென் றெண்ணாதே வேமத்துண்மை
வெளியாகச் சொல்லுகிறேன் விரைந்து பாரே 56

பாரப்பா சாக்கிரந்தான் லலாட மாகும்
பதிவான சொற்பனந்தான் சுழித்திக் கண்டம்
சேரப்பா சுழுத்தியது பண்ட மார்பு
சரநின்ற அப்புப் பிரகாசம் நிறைந்த சோதி
பூரப் பாவதுயேது பசுவே தென்றால்
அறைகிறேனக்கினியின் பூதியோகம்
சீரப்பா அட்சரந்தான் சிறுமூல வட்டம்
சிவனுமையு மாகுமென்று செப்பலாமே. 57

செப்பலாம் பூசையது சத்தி பூசை
சிலமடையர் வஸ்து வைத்துப் பூசை செய்வார்
அப்பமும் பலகாரம் பழங்கள் வைத்து
அதற்கிசைந்த யிறச்சி முட்டை வடை தோசை

குப்பலா யிலைகளெல்லாங் குவித்து வைத்து
குறிப்பாக மதுவைத்து பெண்ணும் வைப்பார்
விப்பலா விதுவெலா மாத்தா னோர்க்கான்
வினரப்பா செய் தொழிலை விரும்பிடாதே. 58

விரும்பாதே வினர்கள்தான் பூசை யென்று
விருதாவாய்த் திரிவார்கள் மெய்த்திடாதே
திரும்பாதே சத்தி யென்பான் பெண்மேலாசை
தரித்திடுவான் காவியப்பா பாழாய்ப் போவான்
அரும்பாதேயவன் முகத்தில் விழித்திடாதே
அப்பனே பாவியென்று தள்ளு தள்ளு
குரும்பாதே குருத்துரோகங் கொண்டு போவான்
கொள்ளாத நோய் வந்து கொல்லும் பாரே. 59

கொல்லுமடா நோய் வந்து க்ஷணத்திலே தான்
கோபிப்பான் சண்டாளன் குணங் கேடென்றான்
செல்லுமடா அவன் குலமும் நாசமாகிச்
சிதறுமடா அவன் தனமும் விடும் பாழாம்
வெல்லுமடா பெரியோர்கள் சாபமெய்தும்
விசையாகப் பஞ்சமா பாவ மெய்தும்
மல்லுமடா உலகத்தோர் பழிப்பாரப்பா
மாய்கையிலே விழுந்தவனும் மாளுவானே. 60

மானாம லின்னமொரு மருந்து கேளு
வாசி சிவயோகத்தில் மனதை வைத்து
ஆனாமல் மனமுறைத்து பூரணத்தில் நின்று
அசையாது பாசமற்றா லவனே யோகி
வாழா மல் வாழலாம் வாசி வீட்டில்
மவுன மென்ற மகாரத்தை பூதப்பற்றும்
தாழாமல் நாதவிந்து தன்னைக் கண்டால்
தருவான் எட்டெழுத்து மாறெழுத்து மாறே. 61

எட்டெழுத்து மைந்தெழுத்து மாத்தாள் பூசை
இன்பமுற்ற மூன்றெழுத்து சிவத்தின் பூசை
தொட்டெழுத்துத் துடறெழுத்து மயேஸ்பரியின் பூசை
... துகளில்லா மூன்றெழுத்து வாலை பூசை
விட்டெழுத்தும் விடாதெழுத்தும் பரையின் பூசை
மெஞ்ஞான ஒரெழுத்து குருவின் பூசை
வட்டெழுத்தின் வடிவுதனை யாருஞ் சொல்லார்
மைந்தனே துரியமென்ற வரையில் நில்லே. 62



நில்லென்று கொங்கணவர் கடைக் காண்டத்தில்
நிறுத்தி வைத்து ஆறுவரை தாண்டச் சொன்னார்
அல்லென்று போகர்தான் முப்பத்தாறில்
ஆச்சரிய யோகவரை யன்பாய்ச் சொன்னார்
கல்லென்ற சத்தத்துக் கெழுத்தைச் சொன்னர்
பதறாம லண்ணாக்கு முன்னாக்கென்னார்
வெல்லென்று சட்டை முனி ஞானம் நூற்றில்
விரமாய்ச் சொல்லிவிட்டா ரறிந்து பாரே. 63

## அமுர்த சஞ்சீவித் தைலம்

அறிந்து பார் தூதுவளை பலந்தானெட்டு
அப்பனே அமுக்கறா பலந்தானாறு
பிறிந்துபார் கத்திரியுஞ் சமூலமப்பா
பீனங் காமலாவரையும் பலந்தானாறு
மறிந்துபார் கோரக்கர் பலந்தான் மூன்று
மைந்தனே குறிஞ்சாவும் பலந்தான் பத்து
தெரிந்து பார் நீருள்ளி பலந்தான் ரெண்டு
நிமிஷத்தி லறுகம் வேர் பலந்தான் பத்தே. 64

பத்தான குறந்தொட்டி பலமோ ரெண்டு
பாரப்பா சாரணை வேர் பலமோ மூன்று
கொத்தான அமுதவல்லி பலந்தானைந்து
கூறுடனே யிவையெல்லாம் துணி நீரில்
வத்தாக யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
மைந்தனே யத னெடைக்கு ஆவினெய்யைச்
சித்தாக விட்டுமே கலக்கிப் போட்டுத் 65
திரும்பவே மருந்து வகை சேரக் கேளே.

கேளப்பா இஞ்சியது பலந்தானாறு
கெடியாக வெயிலுலர்த்திச் சூரணித்து
நாளப்பா சாதிக்காய் பலந்தானாறு
நல்லதொரு சீரகந்தான் பலந்தானொன்று
ஆலப்பா பத்திரியும் பலந்தான் ரெண்டு
அதற்கான அதிவிடையம் பலந்தா னொன்று
சேரப்பாயிவை யெல்லாந்தூளாய்ச் செய்து 66
செப்பமுடன் பொடியெல்லாம் பதனம் பண்ணே.

பண்ணியே குரோசானி கழஞ்சி ரண்டு
பாங்கான வால்மிளகு கழஞ்சி ரண்டு
அண்ணியே லவங்கமது கழஞ்சி ரண்டு
அழகான ஏலரிசி கழஞ்சி ரண்டு
நண்ணியே நல்மிளகு கழஞ்சி ரண்டு
நலமான பச்சையது கழஞ்சி ரண்டு
உண்ணியே கூகைநீர் கழஞ்சி ரண்டு
உற்பனமாய் தூளாக்கி நெய்யில் சேரே. 67

சேர்த்துநீ தணலெரித்து மெழுகதானால்
சிறப்பாகச் செய்பாகங் கைபாகத்தில்
ஆர்த்துநீ வடித்திறுத்து பீங்கானில் வைத்து
அப்பனே தூபமொடு தீபஞ் செய்து
பார்த்துநீ யரன்பேரைப் புகழ்ந்து போற்றி
புனிதமாய்க் குப்பியிலே யடைத்துக் கொண்டு
காத்துமே போகாமல் பதனஞ் செய்து
கைகண்ட வித்தையிது முழுகுவாயே 68

முழுகிவரப் பித்தமெங்கே மேகமெங்கே
முக்கியமாய்க் கண்ணினொளித் துலக்கிக்காணும்
தழுகிவர தேகமது யிறுகிப்போகும்
க்ஷணத்திலே நோய்களெல்லாந் தவிடதாகும்
புழுகுவரப் புண்கரப்பன் சூலைகட்கு
புகைத்திருமல் மறுத்திடும் பாண்டு ரோகம்
அழுகி வரச் சொறி சிரங்கு ஆறாப் புண்கள்
அகத்திலுள்ள விஷக்கடிக ளகன்று போமே 69

போமப்பா வாதபித்த சிலேத்துமங்கள்
பிசகாமல் நிலையற்றுப்போம் அலைய வேண்டாம்
ஆமப்பா வருஷமொன்றில் தேகம் பொன்போ
லாகுமடா அரனெனக்கு உபதேசித்தார்.
நாமப்பா உந்தனுக்குச் சொன்னேன் மைந்தா
நல்லதொரு நெய்யென்று நவின்றாயானால்
சாமப்பா நோய்களெல்லாம் க்ஷணத்திலே தான்
தவறாம லிந்நூல் திட்டம் பாரே. 70



## வங்க வெள்ளி

பாரப்பா யின்னமொரு தந்திரந்தான் சொல்வேன்
பாங்கான திருகுகள்ளிப் பாலை வாங்கி
நேரப்பா வெள்வங்கம் கழஞ்சி தானும்
நிலைக்குமடா கரண்டியிலே வைத்துருக்கி
உருகியதில் நூறு தரஞ் சாய்த்தால்
.... கான வெள்ளியது மாற்றுப் பத்து
காரப்பா யிருந்து கொண்டு வில்வித்தை செய்து
காணலாம் பத்துக்கொன் றியலாமே. 71

## செம்பு சுத்தி

ஆமப்பா அறுகன்வேர் கீரிமூலி
அழகான மேனியது ரெண்டுங் கூட்டி
நாமப்பா அறுநீரா லரைத் துருட்டி
நலம் பெறவே குகை பிடித்துச் செம்பை வைத்து
வாமப்பா சீலைமண் செய்துநீயும்
விள்ளாமற் கெஜபுடமே போட்டாயானாற்
சாமப்பா செம்பதுதான் சுத்தியாச்சு
க்ஷணத்திலே செம்பதனைப் பதனம்பண்ணே. 72

பண்ணவே செம்பதுதா னூறல்போச்சு
பளபளத்தே யிருக்குமடா பாருநீதான்
நண்ணவே வெள்ளியிலே நூற்றுக் கொன்று
நாட்டினால் மாற்றாறு நன்றாய்க்காணும்
மண்ணவே யொருவருக்கும் வெளிவிடாதே
மை போலிருந்து நீ யொளித்துத் தின்னு
தின்னவே தாமத்தை மறந்திடாதே
திரவியங்கள் தேடாதே திட்டம் பாரே 73

பாரப்பா பூரணந்தான் கனமேயாகும்
பதிவான கேசரியுந் தாயும் நின்றால்
ஆரப்பா அகாரமொடு உகாரஞ் சொன்னேன்
ஆச்சரிய மென்னூலே கற்க வேணுங்
காரப்பா வருஷமொன்று குருவின் பாதங்
கள்ளிறங்கிக் குடியாமல் குருவைக் கண்டு
நேரப்பா தபமகிமை யுள்ளோர் பாதம்
நிலையாகக் காத்திருந்தா லுனக்குப் பேரே 74

பேரென்று சொல்லுவதுதான் ஞானம் பாரு
பேசரிய ஞானந்தான் பெற்ற பேரு
வாரென்ற காயசித்தி யான பேரு
மகத்தான ஞான சித்தி வந்த பேரு
நூலென்ற பூரண நூல் பார்த்த போது
நுணுக்கமாய்ச் சிவயோகம் பெற்றபேரு
ஊரென்று அமிர்த நிலை யறிந்த பேரு
ஒருமனதாய் வாதசித்தி யந்த பேரே 75

சித்தியென்ன பூசையென்ன ஞானமென்ன
திடம் பெரிய எழுத்தென்ன அரைந்தானென்ன
முத்தியென்ன முன்பின்னாய் நின்றதென்ன
முனையென்ற சிவமென்ன மூர்ச்சையென்ன
சக்தியென்ற சிவமென்ன தவப்பேரென்ன
சக்கரத்தி னெழுத்தென்ன குருதானென்ன
பத்தியென்ன பரமென்ன பாசமென்ன
பாங்கான குண்டலியின் விபரங்கேளே. 76

விபரங்கேள் குருச்சொல்லை தட்டலாகா
வீணர்களோ டெந்நாளு மிணங்க லாகா
கவரமென்ன பாசமென்ன கள்குடிக்கலாகா
கஞ்சாவின் வெறியாக ஆலிங்கனமுமாகா
சிவிரமென்ன பொய்கலை களவுமாகா
சண்டாள மனிதரது சேர்க்கையாகா
உவரமென்ன உறுதியாயிருக்க வேணும்
ஊமையென்ற அக்ஷரத்தி லிருக்கப்பேரே 77

பேரென்று சொல்லுவது குருவின் பேரு
பெரியோர்கள் ஊமைநிலை பெற்றபேரு
மாரென்ற அஷ்டசித்தி பெற்ற பேரு
மிகையான சிவயோகம் பெற்ற பேரு
ஊரென்ற மலையினுச்சி யிருந்த பேரு
உள்ளொளியைத் தன்னொளி யாய்க்கண்ட பேரு
சாரன்ற அமூர்தநிலை யறிந்தபேரு
அப்பவே அஷ்டசித்தியான பேரே. 78

அஷ்டசித்தி யோகவரை யேற வேணும்
அகமழிந்து ஞானவரை காணவேணும்.
திட்டமுடன் சிவயோகஞ் செய்ய வேணும்
சிவசத்தி ரண்டு மொன்றாய்ப் பார்க்க வேணுஞ்



சட்ட சத்தி சடத்தை யங்கே நிறுத்த வேணுஞ்
சாகாத காய்கண்டு நிலைக்கவேணுஞ்
துட்டசித்தி யவரிடத்தி லிருக்குமானால்
தூரப்போ வென்று சொல்லி துணிந்து சொல்லே 79

சொல்லப்பா துஷ்டர்களை துரத்துவாய் நீ
கழிமுனையில் நின்று கொண்டு உற்றுப்பாரு
வெல்லப்பா யெழுத்தை யெல்லா மூட்டிக்கொண்டு
வெளியிடாதிருந்து நீ யோகம் பண்ணு
கல்லப்பா உன் ரேக முறத்துப் போகும்
கபடில்லா துன்மனது பரத்துக்கெய்துஞ்
சொல்லப்பா சிதம்பரத்தின் பூசைநேர்மை
சிவனுரைத்தார் சொல்லுகிறேன் விவரந்தானே 80

## சிதம்பரத்தின் பூசை

விவரமென்னைந் தரையி லிருபத்தஞ்சாய்
வீசிடுவாய் மகாரமுதல் யகாரந் தொட்டு
அரவமென்ன ஐந்தெழுத்து மாறி மாறி
அப்பனே யடைந்திடுவாய் நெறியில் நின்று
பவரமென்ன உயிரெழுத்து மிருந்தே மூட்டிப்
பத்திவாய் செபித்துவிடு விபரமாகத்
துவரமென்ன மேல் மூலம் உள்மூலந்தான்
தானெழுதி யடைந்திடுவாய் சத்திதானே 81

சத்திதனை வரவழைத்து உயிரெழுத்தை மூட்டித்
தானெழுதி கும்பமுதல் வைத்துப் பூசி
சத்திதான் வந்துதென்றால் சோதனைகளுண்டு
திறமான சிதம்பரமுங் கைக்குள்ளாச்சு
நத்திதான் வந்ததப்போ நோய்கள் போகும்
நொடிக்கு முன்னே பிசாசெல்லா மாண்டுபோகும்
புத்தியாயிருந்து கொண்டு சேவித்தாயானால்
பஞ்சுபோலே பறக்குமடா நோய்கள்தானே. 82

## அயச் செம்பு

தானான குதம்பையிலே தனைப்பறித்து
திட்டமா யரைத்ததனைக் குகையே செய்து
ஏனான அரப்பொடியை யதனுள் வைத்து
இதமாகச் சீலை செய்து கெசப்புடமே போட்டால்

ஊனான யிரும்பதுதா னுருகிச் செம்பாம்
உன்னாணை பொய் சொல்ல வில்லை மைந்தா
தேனான செம்பதனை பதனம் பண்ணு
செப்புகிறேன் அதனுடைய வளமைபாரே 83

பாரென்று கும்பமுனி நூற்றிற் சொன்னார்
பதிவாக ரசவாதம் பத்தும் வைத்தார்
தூரென்றும் வேரென்றுஞ் சொன்னாரில்லை
சுத்த வெளியாக நான் பாடிப்போட்டேன்
ஆரென்ற கருவறிந்தோன் விட்ட குறைக்காரன்
அவன் கொண்டு போவான் காண் மாற்றொன்றாகா
சாரென்ற நிலையறிந்தா னவனே யாவான்
சாகாத கால் கண்டோன் சாத்திரவானோ. 84

சாத்திரத்தை சொல்லுதற்கு மனது வேணுஞ்
சண்டாளமாகாது தவறாகாது
நேத்திரமே பிரியாமல் நிலையில் நின்று
நிலை பெற்ற பெரியோர்கள் நாமஞ் சொல்லி
சூஸ்திரத்தை யுரைத்துமே குருவை வாழ்த்திச்
சூட்டினாரு ரோமரிஷி ஞானம் நூறிற்
பாத்திரமே யுரைப்ப மென்று பாடிப் போட்டார்.
புரத்தினது வடிவு கண்டிருந்திட்டாரே. 85

இருந்திட்டார் திருமூலர் வரையிலேறி
ஏகாந்த சூட்சமதை யறிந்து பார்த்து
மருந்திட்டார் கொங்கணவ ராகுந்தாண்டி
மகத்தான அறிவங்கே மனத்திலுன்னி
பொருந்திட்ட போகருமேஞானம் நூறிற்
பூட்டினாரடக்க மெல்லாங் கண்டு தேறி
கறைந்திட்ட குண்டலியின் யோகம் பார்த்து
குறிப்பறிந்து மனத்தை யங்கே நிறுத்தினாரே. 86

## நாவற்பட்டை சூரணம்

நிறுத்தினாற் வெண்ணாவற் பட்டை தன்னை
நேராகக் கொண்டு வந்து நிழலுலர்த்தி
கறுத்தினாற் சூரணித்து குடுக்கைக்குள்ளே
சூரணத்தைப் பதனமாய் வைத்துக் கொண்டு



வறுத்தினால் வயிற்றுளைச்சல் கிராணி மூலம்
வல் பிணிகள் கடுப்பிரத்தம் வந்துதானால்
வறுத்தினார் வெள்ளாட்டுப் பாலிலேதான்
வெறு கடித்தான் கொண்டாக்கால் வியாதிபோமே. 87

வியாதிபோம் வயிற்றுளைச்சல் கருப்பிரத்தம்
மீளாத கிராணியொடு சுரமுமாறும்
அயதியாயிருந்தாக்கால் சடமே போகும்
அப்பனே அதையறிந்து மருந்து செய்தால்
சுயதியாய்ப் போகாது ரோகம் போகும்
சொன்னபடி கேட்குமடா நோய்களெல்லாம்
கயதியாய்க் கை மருந்து கைக் குள்ளாகி
கபடாகச் சொல்லவில்லை யறிந்து பாரே. 88

பாரப்பா நீர் முள்ளி பிடுங்கி வந்து
பக்குவமாய் வித்திருத்துக் கடைந்து கொண்டு
ஆரப்பா கடுகுள்ளி மஞ்சள் தேற
மறைத்து அதிற்கலக்கியே அடுப்பில்வைத்து
வாரப்பா மெழுத்து போ லான போது
வாங்கியே கீழ் வைத்து வரிசையாக
பாரப்பா பாண்டுவகை சோகைக்கெல்லாம்
பண்பாகக் கொடுத்துவிடப் பறந்துபோமே, 89

போச்சப்பா நீர்கட்டு நீரிளேற்றம்
புகழான மகோதரங்கள் பித்தம்பாண்டு
ஆச்சப்பா நீர்ச் செறிப்பு நாசமாகும்
அப்பனே யின்னமொரு வருசைக் கேளு
காச்சப்பா கால்வாதம் பிடித்த பேர்க்கு
கை கண்ட வித்தையாம் மருந்து சொல்வேன்
நீச்சப்பா மயங்காதே நடுத்தரமாய்த் தேங்காய்
நிமிஷத்திற் கண்துளைத்து நீர் விட்டுக் கேளே. 90

கேளப்பா கண்துளைத்து சலத்தை நீக்கி
கெடியாகத் திருகு கள்ளிப் பாலை வாங்கி
ஆளப்பா அதிலுள்ளே செலுத்திப் போட்டு
அழகாக காஞ்சிரையின் ஆப்பறைந்து
மாறப்பா புளிவிறகு கொண்டு மூடி
முக்கியமாய்த் தேங்காய்தான் வெந்த போது
கேளப்பா தேங்காயை யெடுத்து நீயுங்
கெடியாக ஒரு சாம மறைத்து வையே. 91

வைத்து நீ குழம்புதனை பரையின் கீழே
மைந்தனே பூசிடு வாய் காலை தன்னில்
இத்துமே அந்திக்கு வெந்நீர் விட்டால்
அப்பனே அரைவாதங் கால் வாதம் போகும்
இய்த்துநீ திரியாதே ஈசன் சொன்னார்
இது மருந்து ஆச்சரிய மிணங்கிச் செய்நீ
பொய்த்துமே போகாது யித்த வித்தை
புத்திகெட்டு அலையாதே செய்து பாரே. 92

பாரப்பா சரியை யென்ன கிரியை என்ன
பகர்ந்து நின்ற யோகமென்ன போகமென்ன
ஆரப்பா மவுன மென்ன குருத்தான் என்ன
ஆகாத யெழுத்தென்ன....
நேரப்பா சரியை யென்ன ....
நேரான கிரியையது பூவதாகும் ....
சீரப்பா யோகமது காயதாகும் ....
சேர்ந்து நின்ற ஞானமது பழமாகும்மே. 93

பழமான மவுனமது ஆயிமாதம்
பாங்கான சூட்சமது அக்கினியின்...
குளமான வச்சி வட்டம் ஆத்தாள் வீடு
குண்டலியே மவுனமது சதியிருந்த வீடு
தளமான ஆறுதலம் ஆறு வீடு
சதுரமாய் மூலமுதல் அக்கினியோடாறு
நளமான ரசம்போலே நடுநாடியாக
நாரணியுந் தேவனுமா யிருந்தார் பாரே. 94

பாரப்பா நேர் மூலம் பரையின் வீடு
பகருகின்ற நடு மூலம் பரையின் வீடு
ஆரப்பா அடி மூலங் கணேசன் வீடு
ஆச்சரிய முடிமூலம் ஓங்கார வட்டன்
.... சித்தர் பாடார்
.... திட்டேனான்
.... துக்காரு
.... தெரிந்து கொள்ளே. 95

## கோழி

.... த கோழியாகுங்
.... தத்னைக் கொண்டு வந்து



.... வேலி வேரைந்து
.... ஓமமது உழக் கரைத்து
.... ழியின்றன் குடலை நீக்கித்
.... மூன் மருந்தை வைத்துத் தைத்து
.... ண்டத்தில் வெள்ளநீர் விட்டு
அதன் மீதில் கோழியே நீ அழுத்தி வையே. 96

வையப்பா ஒரு விறகினா லெரித்து
வளமாக வெந்த பின்பு தின்றாயானால்
உய்யப்பா உதிரத்தின் மலமூளை போச்சு
உண்ணாமல் சோற்றைத்தான் நிறுத்திப்போடு
அய்யப்பா அகத்திலுள்ள நோய்க ளெல்லாம்
அகன்று போம் மேகமது அணுகா தோடும்
தையப்பா உள்மூலம் பிற ....
தப்பாது என்னுடைய .... 97

## நூற் ...

நூல் பார்த்தாலிந்த முறை ....
நுணுக்கமாய்ச் சொல்லா ....
சேல் பார்த்து யோக முறை ஞா....
செயலனைத்து மனதில் வைத்து ....
போல் பார்த்து போகாது ஞானம்பா ....
புத்தியாய்ப் பிழைத்திருப்பாய் பிள்ளை ....
கால் பார்த்து மதியிரவி தன்னைக் கண்டு
கருணையுடன் நூலாய்ந்தால் கசடுபோமே. 98

போவதற்கு வழி சொல்வேன் தேகத்துக்குள்ளே
புத்தியாய்ச் சொல்லுகிறேன் பிழைக்கவென்றால்
ஆவதற்கு நல்மிளகு நெல்லியாகும்
அப்பனே வெண்சாரை அமுரியாகும்
காவலுக்குப் போகாதே கவி பாடாதே
கை கண்ட வித்தையிது நடுவேவாங்கி
தூவதுக்கு மிளகதுதான் வாறே போட்டு
சுகம் பெறவேமென்று தின்று.... 99

.... வுமில்லை
.... லேறாது
.... லமுண்டாகும்
.... டறிந்தே யுண்ணு

.... சைவு மாகும்
.... ம் தள்ளிப் போடு
.... சொன்னவாய் நீ
.... லரொட்டாதே. 100

.... னை தள்ளச் சொன்னேன்

.... யாகத்தி லிருக்கச் சொன்னேன்
எட்டாத கருக்கிடையுங் குருக்கிடையுஞ் சொன்னேன்
என்னைப் போலிருந்து விடக் கற்பமுஞ் சொன்னேன்
தட்டாத தேதியெல்லாந் தட்டச் சொன்னேன்
தாது நிலை யறிந்துன்னைப் பிழைக்கச் சொன்னேன்
... ட்டாக உள்மூலம் பிறமூலம் சொன்னேன்
மைந்தனே உத்தனுக்கு வகை சொன்னேன் 101

வகை சொன்னேன் வாதத்தைத் திறந்து சொன்னேன்
மைந்தனே வயித்தியத்தை நன்றாய்ச் சொன்னேன்
குகை சொன்னேன் குகையிலிட குருவுஞ் சொன்னேன்
கோணாமல் மனத்தை யங்கே நிறுத்தச் சொன்னேன்

.......... சஞ் சொன்னேன்
சொர்க்க பதம் பெறுவதற்கு வழியுஞ் சொன்னேன்
தகை சொன்னேன் ஞானமொடு யோகமுஞ் சொன்னேன்
சத்தி சிவம் நின்றதொரு .... சொன்னேனே. 102

சொன்னேனா னுத்தனுக்கு யித்த நூறு
கணங்களுக்குஞ் சவுங்களுக்குங் கொடுத்திடாதே
முன்னே தான் சொன்னதெல்லா மனதில் வைத்து
மூர்க்கருடன் சேராதே பொய் பேசாதே
பின்னே நீ திரியாதே பிணங்கிடாதே
பேசாதே யொருவருக்கு மித்த நூலை
தன்னேதா னுன்னை வந்து சரணஞ் செய்வார்
சண்டாளர்க் கீயாதே நூறு முற்றே. 103

நந்தீசர் ஞானம் - 100

முற்றிற்று.



உ

சிவமயம்

நந்தீசர்

**குளிகை - அ (8)**

பெருகு மனோன்மணியே மாதாவென்றும்
சிவபிரானென்பிதா வென்று மவர் சிறுவென்றும்
கா பெருகுந்திருமூலர் பிள்ளையென்றும்
கைலாச போகர்தான் றமைய னென்றும்
சீ பெருகும் சின்மயத்தின் கருணையாலே
பேசி வைத்தாள் சரஸ்வதியென் னாவில் தானும்
பேர் பெருகு மெய்ஞ்ஞானப் பொருளே நாதி
பெயர்த்துரைக்கக் கணபதியுங் காப்பு தானே 1

தானென்ற லிங்கச்சாரி கண்ட பேரும்
சாதகமாய்ச் சிற்பரியம் துருசமாகும்
கோவென்ற திப்பலிரை சிலையுங் கூட்டி
கூசாகக் காயமது கூடச் சேர்த்து
தேனென்ற மகர விந்து பாலலாட்டி
சிறக்கவே குளிகையது செய்து கொண்டு
வானென்ற வொரு குளிகை ஷவித்துக்கெல்லா
மைந்தனே கொடுத்தாக்கா லோடிப் போமே. 2

போகுமே கடுகுவேர் துங்கிவேரும்
புகழான ஒூர்ச்சாளி தலையுங் கூட
சாருமே நற்கள்ளி நறகள்ளி தானும்
சாதகமாய் நாறியது மூசற்காது தானும்
ஏருமே அப்பைதுரு அமுரிதானும்
இருள் வாத்தி கனிப்பூச்சி காயந்தானும்
வாருமே பழச்சாற்றில் குளிகை செய்தால்
மைந்தனே பில்லியது போகும் பாரே. 3

பாரப்பா நீறு பச்சை கூறு வெள்ளி
பாங்கான காறுமொச்சை மேனிதானும்
ஆரப்பா காவளையின் சிற்றரத்தை
அப்பனே கடைக்காயும் வசம்பு தானும்
வோப்பா வேலிப்பருத் தியிலைச்சாறு வார்த்து
விட்டரைத்துக் குளிகைதனை செய்துகொண்டு
வாரப்பா பிள்ளை பிணி நூற்றெட்டுந்தான்
மைந்தனே குளிகை கொள்ளப் புகலக்கேளே. 4

புகலுகிறேன் எலிக்கடிகள் பதினெட்டுக்கும்
பொல்லாத எலிபுலியின் சிலந்தானும்
நிகலுகிறேன் கதிர்வாரம் தன்னிலப்பா
நிலையாக அதையெடுத்துக் குளிகைபண்ணி
தகலுகிறேன் நாகவல்லிக் குள்ளே வைத்து
சாப்பிட்டா லெலிகடிகள் சாடிப்போகும்
அகலுகிறேன் குளிகையது வெல்லாஞ்சித்தி
அறிந்தவனே வயித்தியந்தா னாகுவானே 5

ஆகுமே நெல்லிவித்து கிளாக்காய் வித்து
அப்பனே அகண்டப்பால் விட்டு ஆட்டி
தாகுமே குளிகையது பதனம் பண்ணி
தப்பாமலொரு குளிகை யுரைத்துப் போட்டாற்
போகுமே தெள்கொடுக்கு விஷங்களெல்லாம்
பூரான் செய்யான் கருந்தேள் விஷங்கள் போகும்
வாகுமே கடிப்பெருப்புந் தீரும்தீரும்
மைந்தனே பன்னிரண்டு குளிகைகேளே 6

கேளப்பா வசிகரந்தான் லோகத்துக்குங்
கிருபையாய் ஸ்திரீகளுக்குஞ் சொல்லக்கேளு
நாளப்பா வேகாக் கொல்லு தராமணியுங்கூட்டி
நலமான பிராமனிட நசனத்தாலுந்
தாளப்பா பசுவின்பால் விட்டு ஆட்டி
சாதகமாம் சிவயநம அங்கிலியும் உரீசியவென்று
வாளப்பா சொல்லியே திலர்த மிட்டால்
மைந்தனே ஸ்திரீகளுமே வசியமாச்சே 7

ஆச்சப்பா பரங்கி லவகிரி தானும்
அப்பனே அகிலியது மூனுங்கூட்டி
மூச்சப்பா கருங்கழுத்து குருவிதானு
மூன்றாகவே கிளித்து வரிந்துபோடு
வாச்சப்பா நெய்யிலே பொரித்துதானு
மைந்தனே குளிகையது செய்துகொண்டு
நாச்சப்பா திலதர்மிட யெல்லாஞ்சித்தி
நலமாகநந்தியுட பாடல்முற்றே. 8

**நந்தீசர் குளிகை - 8**